# இல்யாஸி தப்லீக் ஜமாஅத் பற்றி உலமாக்களின் உண்மை பத்வா! - Ulama's True Fatwa about Ilyasi Tableeg Jamat

## العذاب الباس على رأس الياس (هجري ١٣٧٢) (இல்யாஸ் தலைக்கு கொடிய வேதனை!)

*Urdu:* **Moulvi Mufti Muhibbir Raza Muhammad Mahboob Ali khan Lucknawi Radiallahu anhu.** - *உருதுவில்:* **மௌலானா மௌலவி முப்தி, முஹிப்புர் ரிழா முஹம்மது மஹ்பூபு அலிகான் லக்னவி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.**

*Tamil:* **Moulvi Fazil Shaikh Abdul Quadir Alim Sufi Siddiqee, Kahiri Radiallahu Anhu.**

*தமிழில்:* **மௌலானா மௌலவி பாஸில் ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸூபி, ஸித்தீகி, காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.**

**இல்யாஸித் தப்லீகு ஜமாஅத் பற்றி உலமாக்களின் உண்மை பத்வா.**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

**வினா:-** சங்கையான ஸுன்னத் வல் ஜமாத்துடைய உலமாக்கள் (அவர்களின் கீர்த்தியையும், மகிமையையும் அல்லாஹ் மென்மேலும் உயர்த்தியாக்குவானாக!) கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளுக்கு எத்தகைய விளக்கமான விடைகள் கூறுகிறார்கள்?

1. தப்லீகு ஜமாஅத் என்று பெயரை வைத்துக் கொண்டு தேசத்தில் ஒரு கூட்டத்தார் கலிமா, தொழுகை பற்றி பிரசாரம் செய்து கொண்டு திரிகிறார்களே, எத்தகைய கொள்கையுடையவர்கள் அந்த இயக்கத்தை நடத்திச் செல்கிறார்கள்?

2.தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் யார்? அவர் எத்தகைய கொள்கையுடையவர்? அப்துல் வஹ்ஹாபின் மகன்தான் இதை உண்டு பண்ணினார் என்று கேள்விப்படுகிறோம். அது எவ்வளவு தூரம் உண்மையானது? சரித்திர ஆதாரம் தேவை.

3. இயக்க ஸ்தாபகரின் கொள்கை, செயல்களின் குணபாடு அவரால் உண்டாக்கப்பட்ட குழுவிலும் ஏற்படுமா? அல்லவா? ஏற்படுமென்றால் அதில் மார்க்கத் தீர்ப்பு என்ன? (அதில் சேருவது வாஜிபா, ஸுன்னத்தா, ஹறாமா, மக்ரூஹா?)

4. தப்லீகு ஜமாஅத்தின் பிரச்சார முறையைப் பற்றி இஃது நபிமார்கள் அலைஹிமிஸ்ஸலாம் உடையவும், சங்கையான ஸஹாபாக்கள் ரலியல்லாஹுஅன்ஹும் உடையவும் (ஸுன்னத்து) வழி என்றும் சொல்லப்படுவது மார்க்க ஆதாரப்படியும் சரித்திரச் சான்றுபடியும் சரிதானா? அல்லவா?

5. தப்லீகு ஜமாஅத்தார்களின் கொள்கைகள், செயல்கள் என்னவானாலும் அவர்களின் முறைகள் வெளிரங்கத்தில் நல்லதாக இருப்பதாக மாத்திரம் பார்த்துக் கொண்டு ஸுன்னத்வல்

ஜமாஅத்துடைய முஸ்லிம்கள் அக்கூட்டத்தாருடன் கலந்து கொள்வது, சேர்ந்து கொள்வது ஆகுமா? ஆகாதா? இரண்டு விதத்திற்கும் குர்ஆன், ஹதீது ஆதாரம் காட்டப்பட வேண்டும்.

தயவுசெய்து இவ்விஷயங்களைப் பற்றிய உண்மையை விளக்கிக் காட்டுவீர்களாக. அதற்குரிய நற்கூலியை அல்லாஹ்விடம் பெறுவீர்கள்.


இப்படிக்கு, வினாக் கேட்பவர்,

**அஸ்கர் அலி,**

ஜம்ஷெட்பூர், பிளாக் நிர் 49,

பீஹார்(யூ.பி)

## பத்வா




**விடை:**

எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நாயனாகிய அல்லாஹ் அவர்கள் மீதும், அவர்களின் சந்ததியார்கள் மீதும், தோழர்கள் மீதும் சர்வகாலமும் ஸலவாத்தும், ஸலாமும் சொரிந்தருளி அவர்களைக் கண்ணியப்படுத்துவானாக. அந்தப் பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அடிமைத் தொண்டர்கள் நாங்கள்.

நாயனே! ஷைத்தான்களுடைய கெட்ட தூண்டுதல்களை விட்டும் உன்னைக் கொண்டு நான் பாதுகாவல் தேடுகிறேன். மேலும் (ஷைத்தானுடைய கூட்டத்தார்களாகிய) அவர்கள் என்னண்டையிலும் வராமலிருப்பதற்கும் உன்னைக் கொண்டு நான் பாதுகாவல் தேடுகிறேன்.

எங்கள் இறைவனே! சத்தியத்தை சத்தியமாகவே எங்களுக்குக் காண்பித்துத் தந்து அதைப் பின்பற்றி ஒழுகி நடக்கும் பாக்கியத்தையும் எங்களுக்குத் தந்தருள்! உண்மையல்லாததை உண்மையல்லாததாகவே எங்களுக்கு நீ காண்பித்துத் தந்து அதைவிட்டும் நாங்கள் நீங்கி இருந்து பேணிக்கையுடன் நடக்கும் பாக்கியத்தையும் எங்களுக்குத் தந்தருள்! ஆமீன்.

1. தப்லீகு ஜமாஅத்தை ஸ்தாபித்தவர்கள், அதன் தலைவர்கள், அதைக் கூட்டி நடத்துபவர்கள் எல்லாம் வஹ்ஹாபி, தேவுபந்தி, நத்வி கூட்டத்தார்களாகும். அதாவது தானவி, கொங்கோஹி, அம்பேட்டி இவர்களை முஸ்லிம்களென்றும், முஸ்லிம்களுடைய தலைவர்களாக, இமாம்களாக இவர்கள் இருக்கிறார்களென்றும் நம்புகிறவர்களும்,

அவர்களின் குப்ரியத்தான கிதாபுகளான ஹிப்ளுல் ஈமான், பறாஹீனே காத்திஆ, தஹ்தீறுன்னாஸ், கொங்கொஹியின் கையொப்பத்தோடு போட்டோ எடுக்கப்பட்ட பத்வா முதலியவைகளை அவைகளிலுள்ள குப்ரியத்தான வாசகங்களைத் தெரிந்திருந்துங்கூட, அவைகளெல்லாம் நேர்மையானவை ஹக்கானவை என்றும் நம்புகிறவர்களும் ஆவர். உதாரணமாக மௌலவி ஹுஸைன் அஹ்மது அஜுதியா பாஷி, மௌலவி சுலைமான் நத்வி, தேவுபந்திகளின் கூலிக்கு மாரடிக்கும் குதர்க்கவாதி மன்ளுர் ஹுஸைன் ஸம்பேலி, மார்க்கத்தை விட்டு விலகிய மௌலவி கிபாயத்துல்லாஹ் ஷாஜஹான்பூரி, மௌலவி தையிபு தேவுபந்தி முதலியவர்களும், இவர்களைப் போன்ற மற்றவர்களும், சொல்லப்பட்ட அனைவர்கள் பேரிலும் பரிசுத்த ஷரீஅத்தின் தீர்ப்பு (ஹுக்மு) சங்கைக்குரிய ஹுஸாமுல் ஹறமைன் எனும் பத்வாக் கிதாபில் தானவி, அம்பேட்டி, கொங்கேரி பேரில் கூறப்பட்ட தீர்ப்பேயாகும். அதாவது:

من شك فى كفره وعذابه فقد كفر

' காபிராகிப் போன அவரை காபிர் என்பதிலும், அவருக்கு நரக வேதனை உண்டென்பதிலும் சந்தேகங் கொண்டவனும் நிச்சயமாக காபிராகிவிட்டான் ' என்பதேயாகும்.

தப்லீகுகாரர்களின் கொள்கை: ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சின்னஞ்சிறு மதலை, பைத்தியக்காரர்கள், மிருகங்கள், ஊர்ந்து செல்லும் ஜந்துக்களுடைய அறிவுக்கு நிகரான அறிவுதான் உள்ளது என்பதுவும்- பரிசுத்தத் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஷைத்தான் இபுலீஸுடைய அறிவையும் விட குறைவான அறிவுதான் இருக்கிறது என்பதுவும்- காத்தமுன்னபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறுதி நபி, எல்லா நபிமார்களுக்கும் முத்திராங்கமான நபி என்ற நம்பிக்கையாகிறது விளக்கமில்லாத அறிவிலிகளுடைய நம்பிக்கையாகும். (புத்திமான்களுடைய நம்பிக்கை அவ்வாறாக இருக்க முடியாது) நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்பு வேறு நபி வருவது ஆகக் கூடியதே, வேறு நபி வரலாம் என்பதுவும்- அல்லாஹ் பொய் சொல்வது அவசியமே, அவன் பொய் சொல்லவில்லையானால் அடியானுடைய சக்தியைவிடவும் அவனுடைய சக்தி குறைந்ததாய் ஆகும் என்பதுவும் ஆகியவைகளாம்.

எனவே, அவர்கள் இத்தகைய குப்ரியத்தான கொள்கைகளில் நம்பிக்கை வைத்துக் கொண்டு ஜனங்களுக்கு கலிமா சொல்லிக் கொடுப்பதும், தொழுகையைப் போதிப்பதும் முற்றிலும் பிரயோசனமற்றதாகும். மேலும், அவர்கள் பின்வரும் இறைவசனத்தில் கூறப்பட்டதற்கு இலக்காவார்கள்.

عَامِلَةٌ نَّاصِبَةٌ تَصْلٰى نَارًا حَامِيَةً

'அமல் செய்வார்கள், கஷ்டப்படுவார்கள்(அவர்களுக்கு கூலியாவது) கரிக்கும் நரகத்தில் போய்ச் சேருவார்கள்'.

மேலும் குர்ஆனில் அருளப்பட்டுள்ளது:-

لَيْسَ الْبِرَّ اَنْ تُوَلُّوْا وُجُوْهَكُمْ قِبَلَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ وَلٰكِنَّ الْبِرَّ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَالْمَلٰٓئِكَةِ وَالْكِتٰبِ وَالنَّبِيّٖنَ

' நீங்கள் உங்கள் முகத்தை உதயகிரி பக்கமும் அஸ்தகிரி பக்கமும் திருப்புவது (மட்டும்) நன்மையான கருமமமாகாது. ஆனால், உண்மையில் நன்மையான கருமமமாவது அல்லாஹ்வைக் கொண்டும், இறுதி நாளைக் கொண்டும், அமரர்களைக் கொண்டும், வேதத்தைக் கொண்டும், நபிமார்களைக் கொண்டும் நன்னம்பிக்கை வைப்பதாகும்.'

குர்ஆனே ஹகீம் மேலும் போதிக்கிறது:-

لِتُؤْمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَتُعَزِّرُوْهُ وَتُوَقِّرُوْهُ وَتُسَبِّحُوْهُ بُكْرَةً وَّاَصِيْلًا.

'ஜனங்களே நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய ரஸூலையும் கொண்டு ஈமான் கொள்வதற்காகவும், நீங்கள் அந்த ரஸூலுக்கு சங்கை செய்து அவரை கண்ணியப்படுத்துவதற்காகவும், காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வை தஸ்பீஹு செய்வதற்காகவும் (நாம் தூதரையனுப்பினோம்).'

இவ்விரு திருவசனங்களும் அறிவிப்பது யாதெனில், முதலில் அல்லாஹ்வைக் கொண்டும், அவனுடைய ரஸூலைக் கொண்டும், தீனுல் இஸ்லாமில் பிரஸ்தாபமாக அறியப்பட்ட கருமங்களைக் கொண்டும் ஈமான் கொள்ள வேண்டும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்ணியப்படுத்த வேண்டும்.

அதுதான் ஈமானுடைய உயிர். அதன் பின்னர், அல்லாஹ்வுக்கு இபாதத்து செய்ய வேண்டும். அப்பொழுதுதான் இபாதத்து ஒப்புக் கொள்ளப்படுவதற்குத் தகுதியுடையதாகும் என்பதுவே.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சங்கை படுத்தாமலும், கண்ணியம் செய்யாமலும் புரியப்படுகின்ற வணக்கங்களைப் பற்றி குர்ஆன் மஜீது பின்வருமாறு கூறுகிறது:-

وَقَدِمْنَآ اِلٰى مَا عَمِلُوْا مِنْ عَمَلٍ فَجَعَلْنٰهُ هَبَآءً مَّنْثُوْرًا.

'அவர்கள் செய்த அமல்களளவில் போய் அவைகளைக் காற்றில் பறந்து செல்லும் அற்பத் தூசிகளாய் ஆக்கிவிட்டோம்.'

மார்க்கத்தில் பிரஸ்தாபமாக அறியப்பட்ட இன்றியமையாத கருமங்களில் ஈமான் கொள்ளாமல் கலிமா சொல்வதும், சொல்லிக் கொடுப்பதும், (தப்லீகு) பிரசாரம் செய்வதும் மாத்திரமே பிரயோசனம் கொடுக்கக் கூடியதாக இருக்குமேயானால், இந்த முறையில் வைத்துப் பார்க்கும்போது, மிர்ஸாயி(மிர்ஸா குலாம் காதியானியைப் பின்பற்றியவர்)கள் என்ன தவறு

செய்துவிட்டார்கள்? அவர்களும்தான் கலிமா சொல்லி கொடுக்கிறார்கள். உலகமெல்லாம் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்வதாகவும் தான் தாவாச் செய்கிறார்கள். இந்த மிர்ஸாயிகளை முற்றாக எல்லா தேவுபந்திகளும் காபிர், முர்தத்து என்றே எழுதுகிறார்கள். அவர்கள் தங்களை முஸ்லிம்கள்தான் என்று வாதாடியும் கலிமா சொல்லி இஸ்லாமியப் பிரசாரம் செய்தும், தொழுகை மற்றும் வணக்கங்கள் செய்து வந்துங்கூட அவர்களை இவர்கள் முஸ்லிம்கள் என்று ஒப்புக் கொள்கிறார்களில்லை.

ஆகவே, மிகவும் துலாம்பரமாகிவிட்டது: தன்னை முஸ்லிம் என்று வாதாடும் எவனாவது மார்க்கத்தில் பிரஸ்தாபமாக அறியப்பட்ட இன்றியமையாத அடிப்படைக் கருமத்தில் எதையாவது மறுதலிப்பானேயானால், அவன் தன்னை முஸ்லிம் என்று வாதாடுவதையும், கலிமா சொல்வதையும், மார்க்கப் பிரசாரம் செய்வதையும் மற்றவைகளையும் பார்க்கப்படாது. எனினும் அவன், மார்க்கத்தில் பிரசித்தியான அந்த இன்றியமையாத அடிப்படைக் கருமத்தை மறுதலித்ததின் காரணத்தினால் ஷரீஅத்தின் தீர்ப்புப் படி காபிர் முர்தத்தாகிவிட்டான்.

وَاللہ و رسُوْلہ اعلم جل جلالہٗ وَصَلّی اللہ تعالٰی علیہ وعلٰی آلہ وسلّم

வல்லாஹு வரஸூலஹு அஃலம் ஜல்லஜல்லாலஹு வ ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஅலா ஆலிஹி வஸல்லம்.

**விடை:2**

பெயரளவில் தப்லீகு என்ற போர்டை மாட்டிக் கொண்டு இந்தத் தப்லீகு பார்ட்டிகள் தங்களின் மூலக் கொள்கைகளையும், திட்டங்களையும் மற்றும் தங்களின் யதார்த்தமான சொற் செயல்களையும் வெகுதூரம் மறைத்துக் கொண்டு நயவஞ்சகத் தந்திரங்கள் செய்தும் (மக்களை) ஏமாற்றப் பார்க்கிறார்கள். என்றாலும் அவர்களின் உண்மை ரூபம் வெளியாகியே விடுகிறது. அந்த இல்யாஸிக் கூட்டாத்தார்களுடைய வஹ்ஹாபிஸம், தேவுபந்திஸம் எனும் ஆபாசக் கெட்ட, அருவறுப்புடைய அவலட்சண உருவம் வெளியாகி அவர்களின் மேக்கப் கலைந்தே விடுகிறது. ஆனாலும், நிச்சயமாக இல்யாஸித் தப்லீகு ஜமாஅத்தாரின் குபாடத் தந்திரம் வஹ்ஹாபிகளின் இதர கூட்டத்தார்களின் போக்கைவிட அதிசீக்கிரம் குணபாடு செய்கிறது. எவ்விதமாக (மதஹபுடைய இமாம்களை ஒப்புக் கொள்ளாத) வஹ்ஹாபிகளின் தந்திரத்தில் அகப்படுவதைப் பார்க்கிலும் ஏமாற்றுக்கார வஹ்ஹாபி தேவுபந்திகளுடைய தந்திரத்தில் பாமர ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்கள் அகப்பட்டுக் கொள்கிறார்களோ அதேபோன்று ஏமாற்றுக்கார வஹ்ஹாபி தேவுபந்திகளின் இதர கூட்டங்களான அஹ்ராரி பார்ட்டி, கபூரி பார்ட்டி, காக்ஸாரி பர்ட்டி, ஜமீஅத்துல் உலமா பார்ட்டி, நமாஜி பவுஸ் பார்ட்டி, மவ்தூதி பார்ட்டி முதலிய ஏனைய பார்ட்டிகளை எல்லாம் விட அதிவேகமாக இல்யாஸித் தப்லீகு பார்ட்டியின் தந்திரம் பலிதமாகிறது. ஏனென்றால் இவர்களின் ஏமாற்று தந்திர வேலைகள் மற்றவைகளில் குறைவாகவே உள்ளன.

இவர்களுடைய இயக்கம் நிச்சயமாக இபுனு அப்துல் வஹ்ஹாபுடைய (வஹ்ஹாபிய)இயக்கமேதான். ஆனால், பாத்தினிய்யாக்களைப் போன்று இவர்கள் நிரம்பவும் மறைவாக ஒளித்துச் செய்கிறார்கள். தங்கள் கொள்கைகளை வெளிக்கு விபரிக்கமாட்டார்கள். தங்களின் அந்தரங்க நோக்கத்தை மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள் என்பதற்காக தங்களுடைய கெட்ட நோக்கங்களை வெளியிடாமல் மூடி மறைப்பாhர்கள். இபுனு அப்துல் வஹ்ஹாபுடைய கொள்கைகளைத் தெரிய வேண்டுமானால், மௌலானா மௌலவி பள்லே ரஸூல் ஸாஹிபு காதிரி பதாயூனி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் 'ஸைபுல் ஜப்பார்' என்ற அரிய நூலை நோட்டமிடுக.

இந்தப் பெயரளவிலான தப்லீகு பார்ட்டியின் ஸ்தாபகரின் பெயர் மௌலவி இல்யாஸ் என்பதாகும். இவர் ஹிஜ்ரி 1302ல் பிறந்தார். இவரின் வம்சவழியாவது முஹம்மது இல்யாஸ், இவர் இஸ்மாயீலின் குமாரர், இவர் குலாம் ஹுஸைனின் குமாரர், இவர் ஹகீம் கரீம் பக்ஸ்pன் குமாரர், இவர் ஹகீம் குலாம் முஹ்யித்தீனின் குமாரர், இவர் முஹம்மது ஸாஜிதின் குமாரராவார். அபுல்ஹசன் நத்வியால் எழுதப்பட்ட 'ஹளரத்து மௌலானா இல்யாஸ் ' எனும் நூல் 24வது பக்கம் பார்க்க.

அதே நூலின் 45-வது பக்கத்தில் வருகிறது:- 'ஹிஜ்ரி 1314 அல்லது 1315 ன் 'ஆரம்பத்தில் முஹம்மது இல்யாஸ் அவர்கள் ஹளரத்து மௌலானா ரஷிது அஹ்மது அவர்கள் சமூகம் கொங்கோஹ் என்ற ஊருக்கு வந்தார்கள். ஹளரத்து மௌலானா ரஷீது அஹ்மது ஸாஹிபு அவர்களின் சகவாசமும், அவர்களின் மஜ்லிஸ்(சபை)களில் வீற்றிருக்கும் பாக்கியமும் மௌலானா முஹம்மது இல்யாஸ் அவர்களுக்கு இரவும் பகலும் கிடைத்தது.

அதே நூலின் 45வது பக்கத்தில் மேலும் வருகிறது:-

جب (الیاس) گنگوہ آئے تو دس گیارہ سال کے بچے تھے اور جب ۱۳۲۳ھ میں مولانا گنگوہی نے وفات پائی تو بیس سال کے جوان تھے گویا دس برس کا عرصہ مولانا کی صحبت میں گذرا۔

' மௌலானா இல்யாஸ் அவர்கள் கொங்கோஹ் வந்த சமயம் அவர்கள் பத்து பதினொரு வயது சிறுவராயிருந்தார்கள். ஹிஜ்ரி 1323-ம் வருஷம் ஹளரத்து மௌலானா கொங்கோஹி வபாத்தான சமயம் இல்யாஸ் அவர்கள் இருபது வயது வாலிபராக இருந்தார்கள். ஆகவே பத்து வருஷம் மௌலானா அவர்களின் சகவாசத்தில் சென்றிருக்கிறது.'

இப்பொழுது இல்யாஸ் முரீதான சங்கதியைப் பாருங்கள். மேற்குறிப்பிட்ட நூலின் 16-வது பக்கத்தில் வருகிறது:-

مولانا گنگوہی بالعموم بچوں اور طالب علموں کو بیعت نہیں کرتے تھے فراغت اور تکمیل کے بعد اس کی اجازت ہوتی تھی مگر مولانا الیاس کے غیر معمولی
حالات کی بنا پر ان کی خواہش اور درخواست پر بیعت کرلیا۔

' (மௌலானா கொங்கோஹி அவர்கள்) மௌலானா இல்யாஸ் அவர்களின் விசேஷத் தன்மைகளைப் பார்த்துவிட்டு அவர்களின் விருப்பம், தேட்டத்திற்கிணங்க அவர்களிடம்

பைஅத்து(வாக்குறுதி) வாங்கி (தனது முரீதாக்கி)க் கொண்டார்கள்'. அதே பக்கத்தில் மேலும் வந்துள்ளது வருமாறு:-

آپ کو حضرت مولانا رشید احمد صاحب سے ایسا قلبی تعلق پیدا ہو گیا تھا کہ آپ کے بغیر تسکین نہ ہوتی فرماتے تھے کہ کبھی کبھی رات کو اٹھ کر صرف چہرہ دیکھنے کیلئے جاتا اور زیارت کر کے پھر آ کر سو رہتا

'ஹளரத்து மௌலானா ரஷீது அஹ்மது அவர்களைக் காணாத பட்சம் நிம்மதியே உண்டாகிறதில்லை என்ற அளவுக்கு அவர்கள் மீது இல்யாஸ் அவர்களுக்கு மனப்பற்றுதல் உண்டாகி இருந்தது, அடிக்கடி இரவில் தூக்கத்தி(லும் கூட அவர்களுடைய ஞாபகம் ஏற்பட்டு தூக்கத்தி)லிருநு;து விழித்து அவர்களுடைய முகத்தைப் பார்ப்பதற்காக வேண்டி அவர்களிடம் சென்று தரிசித்துவிட்டு திரும்பவும் தூங்குவேன் என்று இவர்கள்(இல்யாஸ்) அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்கள்'.

۱۳۲۳ھ میں حضرت مولانا رشید احمد صاحب گنگوہی نے انتقال فرمایا تو مولانا محمد الیاس صاحب بالین پر موجود تھے اور سورہ یٰسین پڑھ رہے تھے اس حادثہ کا آپ کے قلب پر جو اثر ہوا اس کا اندازہ اس سے ہو گا کہ فرماتے تھے کہ دو ہی غم میری زندگی میں سب سے بڑھ کر ہوئے ایک والد کا انتقال ایک حضرت کی وفات۔

'ஹிஜ்ரி 1323ம் வருஷம் ஹளரத்து மௌலானா ரஷீது அஹ்மது கொங்கோஹி வபாத்தான சமயம் அவர்களுடைய பக்கத்திலிருந்து மௌலானா இல்யாஸ் யாஸீன் ஸூராவை ஓதிக் கொண்டிருந்தார்கள். அந்த (வபாத்தின்) சம்பவத்தால் இவர்களின் (இல்யாஸின்) மனம் பெரிதும் பாதிக்கப்பட்டு அடைந்த கவலையின் அளவை இதனால் தெரிந்து கொள்ளலாம். அதாவது: இல்யாஸ் சொல்லிக் கொண்டிருப்பார்கள், எனது வானாளிலேயே எனக்கு இரண்டு கவலைகள்தான் மிகப் பெரிதாக இருந்தன. ஒன்று என் தகப்பனாரின் வபாத்தைப் பற்றியது. மற்றொன்று ஹளரத்து கொங்கோஹீ அவர்களின் வபாத்தைப் பற்றியது.'

பார்த்தீர்களா! இல்யாஸின் முகத்தின் மீது உண்டான முகமூடி நீங்கிகொண்டு வருவதை! வெகுசீக்கிரத்தில் அதன் யதார்த்தக் கன்னமும் மருக்களும் தெளிவாக வெளியாகி, அதனுடைய வஹ்ஹாபியத்தின் துர்குறியான ஆபாச அவலட்சண உருவமும், அதன் மாறு வேடம் தரித்து ஏமாற்றிவரும் பிண்டமும் தெரியவரும்.

அத்தோடு இல்யாஸிப் பார்ட்டியின் தப்லீகு ஜமாஅத்து என்ற போர்டை பெயரளவில் வெளிக்கு மாட்டிக் கொண்டுள்ள அந்த ஜமாஅத்தின் யதார்த்த அவலட்சண கோலமும், தேவுபந்தியத்தின் உண்மை உருவமும் தோற்றமாகும். வேண்டுமானால் பாருங்கள்! முன்குறிப்பிட்ட கிதாபின் 47வது பக்கத்தில் வருகிறது:

۱۳۲۶ھ میں آپ شیخ الہند مولانا محمود حسن صاحب رحمۃ اللہ علیہ کے حلقۂ درس میں شرکت کے لئے دیوبند تشریف لے گئے اور ترمذی اور بخاری شریف کی سماعت کی۔

'ஹிஜ்ரி 1326வது வருஷம் அவர்கள் (இல்யாஸ்) ஷெய்குல் ஹிந்து மௌலானா மஹ்மூது ஹஸன் ஸாஹிபு ரஹ்மத்துல்லாஹி அலைஹியின் பாடவகுப்பில் சேர்ந்து கொள்வதற்காக தேவுபந்து வந்து திர்மிதி, புகாரி ஷரீபு ஓதினார்கள்.'

حضرت مولانا رشید احمد صاحب کی وفات کے بعد آپ نے شیخ الہند مولانا محمود حسن صاحب سے درخواست کی آپ نے مولانا خلیل احمد صاحب سے رجوع کا مشورہ دیا چنانچہ آپ نے مولانا (خلیل احمد) سہارنپوری (انبیٹھی) سے اپنا تعلق قائم کرلیا۔

'ஹளரத்து மௌலானா ரஷீது அஹ்மது ஸாஹிபு வபாத்தான பி;ன்னர் இவர்கள் (இல்யாஸ்) ஷெய்குல் ஹிந்து மௌலானா மஹ்மூது ஹஸன் ஸாஹிபு இடம் யோசனை கேட்டார்கள். அவர்கள் மௌலானா கலீல் அஹ்மது சாஹிபிடம் போகும்படி யோசனை சொன்னார்கள். அதன் பிரகாரம் இவர்கள் மௌலானா கலீல் அஹ்மது ஸஹாரன்பூரி (அம்பேட்டி)யுடன் தங்களுடைய தொடர்பை வைத்துக் கொண்டார்கள்.'

அதாவது: 'கொங்கோஹிஜீ வபாத்தான பின் அம்பேட்டி சாஹிபுடன் மறுமுறையும் வஹ்ஹாபிய்யத்தின் தொடர்பை வைத்துக் கொண்டார்.' இன்னமும் அதே கிதாபின் 49வது பக்கத்தில் வருகிறது:

مولانا گنگوہی کے دوسرے خلفاء سے عقیدتمندی اور صحبت و استفادہ کا تعلق برابر قائم رہا۔ شاہ عبدالرحیم صاحب رائپوری مولانا محمود حسن صاحب دیوبندی اور مولانا اشرف علی صاحب تھانوی سے ایسا تعلق تھا کہ فرماتے تھے یہ حضرات میرے جسم وجان میں بسے ہوئے تھے اور ان حضرات کو بھی مولانا کی امتیازی خصوصیات کی وجہ سے خصوصی محبت اور لحاظ تھا۔

' மௌலானா கொங்கோஹி அவர்களின் இதர கலீபாக்களுடனும் விசுவாசம், சகவாசம், கல்வி கற்றல் இவைகளின் தொடர்பு (இல்யாஸ்) அவர்களுக்கு நிரந்தரமாக இருந்து கொண்டே வந்தது. ஷாஹ் அப்துர் ரஹீம் ஸாஹிபு றாயபூரி, மௌலானா மஹ்மூது ஹஸன் ஸாஹிபு தேவுபந்தி, மௌலானா அஷ்றபு அலி தானவி இவர்களோடு (இல்யாஸ்) அவர்களுக்கு எத்தகைய தொடர்பு இருந்ததென்றால் இவர்களெல்லாம் என்னுடைய உடலிலும், உயிரிலும் குடி கொண்டுவிட்டார்கள் என்று (இல்யாஸ்) அவர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

மேலும் அவர்களுக்கும், மௌலானாவின் விசேஷத் தன்மையின் காரணத்தினால் இவர்கள்பால் தனிப்பட்ட விசேஷ அன்பும் அலாதியான கவனமும் இருந்துவந்தது.'

தேவுபந்தி பூதங்களோடு இல்யாஸ் கட்டுண்டு கிடப்பதைப் பார்த்துக் கொண்டே வாருங்கள். அந்தக் கிதாபின் 51வது பக்கத்தில் மேலும் வருகிறது:

ایک مرتبہ کاندھلہ میں شاہ عبدالرحیم صاحب رائپوری، مولانا خلیل احمد صاحب سہارنپوری اور مولانا اشرف علی تھانوی موجود تھے نماز کا وقت آیا تو امامت کیلئے آپ کو بڑھایا۔

' ஒரு சமயம் காந்திலா என்ற ஊரில் ஷாஹ் அப்துர் ரஹீம் சாஹிபு றாயபூரி மௌலானா கலீல் அஹ்மது ஸாஹிபு ஸஹாரன்பூரி, அஷ்றபு அலி தானவி இவர்களெல்லோரும் இருந்தார்கள். தொழுகைக்கு நேரம் வந்ததும் இமாமத்துச் செய்ய அவர்களை (இல்யாசை) இவர்கள் முற்படுத்தினார்கள்.'

இன்னும் மேற்படி நூல் 52வது பக்கத்தில் இல்யாஸி (தப்லீகு ஜமாஅத்து)ப் பார்ட்டியின் அதிபர் உடைய நிகாஹ் மஜ்லிஸு பற்றிய விஷயம் பாருங்கள்.

۶- ذیقعدہ ۱۳۳۰ھ (۱۷ اکتوبر ۱۹۱۲ء) کو جمعہ کے دن بعد نماز عصر آپ کے حقیقی ماموں مولوی رؤف الحسن صاحب کی صاحبزادی سے آپ کا عقد ہوا مولانا محمد صاحب نے نکاح پڑھایا مجلس عقد میں مولانا خلیل احمد صاحب سہارنپوری شاہ عبدالرحیم رائےپوری اور مولانا اشرف علی صاحب تھانوی تینوں حضرات موجود تھے مولانا تھانوی کا مشہور وعظ فوائد الصحبت جو بارہا طبع ہو چکا ہے اسی تقریب میں کاندھلہ شریف لے جانے پر اسی دن ہوا۔

'ஹிஜ்ரி 1330 துல்கஃதா மாதம் தேதி 6 (1912 அக்டோபர் 17ம் தேதி) வெள்ளிக்கிழமை அஸர் தொழுகைக்குப் பிறகு தங்களின் தாய் மாமனார் மௌலவி ரவூபுல் ஹஸன் ஸாஹிபுவின் புதல்வியோடு அவர்களுக்கு(இல்யாசுக்கு) விவாகம் நடைபெற்றது. மௌலானா முஹம்மது ஸாஹிபு அவர்கள் நிகாஹ் செய்து வைத்தார்கள். நிகாஹ் மஜ்லிஸில் மௌலானா கலீல் அஹ்மது ஸாஹிபு ஸஹாரன்பூரி, ஷாஹ் அப்துற் றஹீம் ராயப்பூரி, மௌலானா அஷ்றபு அலி தானவி இம்மூன்று பெரியார்களும் இருந்தார்கள். மௌலானா தானவியின் பிரபல்யமானதும், பலமுறை அச்சிடப்பட்டதுமான ' பவாயிதுஸ் ஸுஹ்பத் ' எனும் உபதேசம் அவர்கள் இந்த வைபவத்திற்காக காந்தீலா விஜயம் செய்தபோது இதே தினத்தில் புரிந்ததாகும்.'

இல்யாஸியுடைய முகமூடி நீங்கி சுயரூபம் காண இன்னமும் கொஞ்சம் கேளுங்கள். மேலே குறிப்பிடப்பட்ட நூலின் 77-வது பக்கத்தில் வருகிறது:

اس کے بعد عرصے تک آپ کی میوات میں آمدورفت رہی اور اہل میوات کو آپ سے دینی اور روحانی فیض پہنچتا رہا لوگ کثرت سے آپ کے سلسلہ میں منسلک ہوتے رہے یہاں تک کہ ربیع الاول ۱۳۴۴ھ میں آپ کی اور معتقدین کی درخواست اور خواہش پر علماء اور صلحاء کی ایک جماعت کے ساتھ حضرت مولانا خلیل احمد صاحب بھی میوات تشریف لائے فیروزپور نمک میں تشریف آوری رہی۔

'அதற்குப் பின்னால் சில காலம் வரையிலும் அவர்கள் (இல்யாஸ்) மேவாத்துக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள். மேவாத்து ஜனங்களுக்கு அவர்களால் மார்க்க, ஆத்மீக அனுக்கிரகங்கள் கிடைத்துக் கொண்டிருந்தன. ஜனங்கள் ஏராளமாக அவர்களுடைய ஸில்ஸிலாவில் சேர்ந்து கொண்டிருந்தார்கள். எதுவரையிலுமானால் ஹிஜ்ரி 1344 ரபீவுல் அவ்வல் மாதம் அவர்களும், அவர்களின் பக்தர்களும் வேண்டுதலாக அழைத்தன் பேரில் உலமாக்கள், ஸாலிஹீன்களின் ஒரு கூட்டத்தோடு ஹளரத்து மௌலானா கலீல் அஹ்மது ஸாஹிபு அவர்களும் மேவாத்திற்கு வந்தார்கள். பைறோஜ்பூர் மண்ணில் வந்திறங்கினார்கள்.'

விளக்க, விளக்க அவர்களின் சுய ரூபமான வஹ்ஹாபிஸமும் தேவுபந்திஸமும் வெளியாகிக் கொண்டே வரும். மேற்படி கிதாபின் 120-வது பக்கத்தில் வருகிறது:

اکثر مہینہ میں ایک مرتبہ میوات کے کسی مقام پر اور سال میں ایک مرتبہ نوح کے مدرسہ میں جلسہ ہوتا تھا۔ دہلی کی تبلیغی جماعتیں اور تجار اور نظام الدین کے مقیم حضرات نیز مدرسہ مظاہر العلوم سہارنپور دارالعلوم دیوبند دارالعلوم ندوۃ العلماء اور مدرسہ فتحپوری دہلی کے بعض علماء اور مدرسین شرکت کرتے مولانا رفقاء جماعت کے ساتھ تشریف لے جاتے

'அநேகமாக பெரும்பாலும் மாதம் ஒருமுறை மேவாத்தில் எந்த இடத்திலாவதும், ஆண்டுக்கொரு மறை நூஹுவின் மத்ரஸாவிலும் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. டில்லி தப்லீகு ஜமாஅத்தார்களும், வியாபாரிகளும், நிஜாமுத்தீனில் வசிப்பவர்களும், அத்துடன் ஸஹாரன்பூர் மளாஹிருல் உலூம் மத்ரஸா, தேவுபந்து தாருல் உலூம் மத்ரஸா, நத்வதுல் உலமா தாருல் உலூம் மத்ரஸா, டில்லி முதர்ரிஸுகளும் கலந்து கொள்வார்கள். மௌலானா(இல்யாஸ்) சகாக்களோடு போவார்கள்.'

மேற்படி நூலின் 124-வது பக்கத்தில் வருகிறது:

کہ جلسے کے وسیع شامیانے کے نیچے مولانا حسین احمد صاحب مدنی (اجودھیا باشی) نے جمعہ کی نماز پڑھائی ۔

'மகாநாட்டின் விசாலமான தாழ்வாரத்தின் (பந்தலின்)கீழ் மௌலானா ஹுஸைன் அஹ்மது மதனி (அஜுதயாபாஷி) ஜும்ஆத் தொழுகை தொழுவித்தார்கள்.'

128வது பக்கத்தில் வருகிறது:

لکھنؤ کے قیام میں مولانا عبدالشکور صاحب کے یہاں بھی جانا ہوا ۔

'லட்சுமணபுரியில் இருக்கும் காலத்தில் மௌலானா அப்துஷ்ஷ{கூர் ஸாஹிபிடத்திலும் போகப்பட்டது.'

133-வது பக்கத்தில் வருகிறது. கவனித்துப் பாருங்கள்.

ان دنوں ۱۳۶۳ھ مطابق ۱۹۴۴ء جا بجا جلسے ہوئے جن میں جناب مفتی کفایت اللہ صاحب مولانا عبدالحنان صاحب مولانا عمران خان صاحب اور بعض دوسرے اصحاب نے تقریریں کیں جناب مفتی کفایت اللہ صاحب نے بڑی کھل کر اور بڑے جوش کے ساتھ تحریک کی تائید کی ۔

' (ஹிஜ்ரி 1363 ஈஸவி 1944) இக்காலத்தில் பல இடங்களிலும் கூட்டங்கள் நடைபெற்றன. அவைகளில் முப்தி கிபாயத்துல்லாஹ் ஸாஹிபு, மௌலானா அப்துல் ஹன்னான் ஸாஹிபு, மௌலானா இம்றான்கான் ஸாஹிபு முதலியவர்களும், வேறு சில தோழர்களும் பிரசங்கங்கள் செய்தார்கள். ஜனாப் முப்தி கிபாயத்துல்லாஹ் ஸாகிபு அவர்கள் நிரம்பவும் ஜோடு மிகத் தெளிவாக இயக்கத்தைப் பற்றி ஊக்குவித்தார்கள்.'

139-வது பக்கத்தில் வருகிறது:-

ایک مرتبہ مولانا کے تقاضے سے مدارس کے علما اور ارباب اہتمام بھی جمع ہوئے اور اس پر مشورہ کیا ان کے مدارس اس کام میں کیا حصہ لے سکتے ہیں مولانا طیب صاحب مہتمم دارالعلوم دیوبند مولانا کفایت اللہ صاحب مولانا محمد شفیع صاحب مہتمم مدرسہ عبدالرب دہلی مولانا حافظ عبداللطیف صاحب ناظم مدرسہ مظاہر العلوم سہارنپور مولانا اعزاز علی صاحب استاذ دارالعلوم دیوبند اور شیخ الحدیث مولانا زکریا صاحب نے اس مجلس مشاورت میں شرکت کی ۔

' (1944 வது வருஷம்) ஒரு சமயம் மௌலானா (இல்யாஸ்) உடைய வேண்டுகோளின் பிரகாரம் மத்ரஸாக்களிலுள்ள உலமாக்களும், முக்கியஸ்தர்களும் கூடி இந்த வேலையில் மத்ரஸாக்கள் எந்த அளவு பங்கு பற்ற முடியும் என்பதைப் பற்றி ஆலோசித்தார்கள். அந்த ஆலோசனை சபையில் தேவுபந்து தாருல் உலூம் மத்ரஸா அதிபதி மௌலானா தையிபு ஸாஹிபு, மௌலானா கிபாயத்துல்லாஹ் ஸாஹிபு, டில்லி அப்துர் றப்பு, மத்ரஸா அதிபதி மௌலானா முஹம்மது ஷபீவு ஸாஹிபு, ஸஹாறன்பூர் மளாஹிருல் உலூம் மத்ரஸா நாளிம் மௌலானா ஹாபிஸ் அப்துல் லதீபு, தேவுபந்து தாருல் உலூம் மத்ரஸா ஆசிரியர் மௌலானா இவுஸாஸ் அலி, ஷெய்குல் ஹதீது மௌலானா ஜகரிய்யா ஸாஹிபு இவர்களெல்லாம் கலந்து கொண்டார்கள்.'

151 வது பக்கத்தில் வருகிறது: இது 1944 ஏப்ரல் கடைசியில் நடந்தது.

ایک دن حضرت مفتی کفایت اللہ صاحب دہلی کے ایک مشہور ڈاکٹر کو لے آئے۔

' ஒரு நாள் ஹளரத்து முப்தி கிபாயத்துல்லாஹ் ஸாஹிபு அவர்கள் டில்லியிலுள்ள ஒரு பிரபல்யமான டாக்டரை அழைத்துக் கொண்டு வந்தார்கள்.'

159 வது பக்கத்தில் வருகிறது:

اپریل ۱۹۴۴ء کے آخری ہفتہ میں مولانا سید عطاء اللہ شاہ بخاری زیارت اور مزاج پرسی کے لئے تشریف لائے۔

' 1944 ஏப்ரல் கடைசி வாரத்தில் மௌலானா ஸெய்யிது அதாவுல்லாஹ்ஷா புகாரி அவர்கள் சந்திப்புக்காகவும், ஷேமம் விசாரிக்கவும் வந்தார்கள்.'

170 வது பக்கத்தில் வருகிறது: இது இல்யாஸ் மரணமடைந்ததற்கப்பால், 1946 ஜூலை 13 ந் தேதி நடைபெற்ற விஷயம்:-

مولانا ظفر احمد اور مفتی کفایت اللہ صاحب نے بھی لوگوں کو صبر و استقامت کی تلقین کی۔

' மௌலானா ஜபர் அஹ்மது அவர்களும், முப்தி கிபாயத்துல்லாஹ் ஸாஹிபு அவர்களும் ஜனங்களுக்கு பொறுமையையும், சமாதானத்தையும் பற்றி போதித்தார்கள்.'

230 வது பக்கத்தில் வருகிறது:-

فرمایا کہ میں بچپن سے اپنے بزرگوں سے سن رہا ہوں کہ اس زمانے کے دو قطب تھے پچھم میں حضرت گنگوہی اور پورب میں حضرت مولانا فضل رحمٰن صاحب۔

' (இல்யாஸ்) அவர்கள் சொன்னார்கள், நான் எனது சிறு பிரதாயத்திலிருந்தே என்னுடைய பெரியார் சொல்லக் கேட்டிருக்கிறேன். இக்காலத்தில் இரண்டு குத்புகள் இருக்கிறார்கள். மேற்கில் ஹளரத்து கொங்கோஹி கிழக்கில் மௌலானா பஸ்லுரஹ்மான் ஸாஹிபு.'

பெயரளவில் (நாம்கே வாஸ்த்தே) தப்லீகு பார்ட்டி என்ற தப்பலி பார்ட்டியின் ஆறுதிட்டம் எனும் நூலிலிருந்தும் கொஞ்சம் கேளுங்கள். அதை மறு முறை சரி பார்த்து சுத்தப்படுத்தியவர் தேவுபந்தி கூலிக்கார லீடரும் தானவிஜியின் பொதுக் காரியதரிசியுமான மன்ளூர் ஹுஸைன் ஸம்பேலியாகும். மேற்படி ஆறுதிட்ட (சேபாத்) நூலின் 39 வது பக்கத்தில் வருகிறது.

فائدہ قضا نمازوں کے مسئلے بہشتی زیور حصہ دوم میں دیکھ لیں۔

' **பாயிதா:** களாவான தொழுகைகளின் மஸ்அலாக்களை பெஹிஷ்திஜேவர் இரண்டாம் பாகத்தில் பார்க்கவும்.'



www.sufimanzil.org

மேலே சொல்லி வந்த வாசகங்களைப் படித்த பின்னர் முஸ்லிம்களுக்கு பின்வரும் உண்மை நன்கு தெரியவரும். சரித்திர ரீதியாக, தப்லீகு ஜமாஅத்தின் லீடர் இல்யாஸ் உடைய பிறப்பும், வளர்ப்பும், கல்வி கற்றலும், பைஅத்து (தீட்சை) பெற்றதும், விவாக சம்பந்தம் கொண்டதும், நடைமுறைகளும், அவருடன் அல்லும் பகலும் ஒன்றாக இருந்து பழகிய சகாக்கள் கூட்டம் யாவும் பக்கா வஹ்ஹாபிகளாகவே இருந்து வந்தனர் என்ற செய்தி நன்கு தெளிவாகத் தெரிந்து விடும்.

மேலும் அந்த லீடரின் ஆட்டம், ஓட்டம், அசைவு, ஒடுங்குதல எல்லாமுமே சரித்திர ரீதியான அவருடைய நிறத்தைப் பார்த்த பிறகு என்னவென்று புரிந்துவிடும். அப்பால், கொள்கை(அகீதா) சம்பந்தமாகவும் கவனித்து அவரைச் சீர்தூக்கிப் பாருங்கள். முன் சொன்ன வாசகங்களிலிருந்து அவருக்கு ஓதிக் கொடுத்தவர்கள், கற்றுக் கொடுத்தவர்கள், பைஅத்து (தீட்சை) கொடுத்தவர்கள், இவருடைய சபையில் போக்குவரத்து வைத்திருந்தவர்கள், சேர்ந்து நடந்த கூட்டாளிகள் முழுக்க முழுக்க வஹ்ஹாபிகளாக, தேவுபந்திகளாக உள்ளனர் என்பது தெரியவரும்.

ஆதார ரீதியாக அவர்களுடைய கொள்கையையும் பார்ப்பது அவசியமே. எந்தக் கொள்கை அந்த முதிய தேவுபந்தியா பூதங்களின் கொள்கையோ அதுவேதான் இல்யாஸுடைய கொள்கையுமாகும். ஏனென்றால் தேவுபந்து பூதங்கள் இவரின் சொல்பிரகாரம் இவருடைய உடலையும், உயிரையும் போன்றிருக்கிறார்கள். முதலில் கொங்கோஹி ஸாஹிபின் கொள்கையைப் பாருங்கள். அவர் தன்னுடைய கையொப்பத்துடனுள்ள பத்வாவில் அல்லாஹ் பொய் சொல்லக் கூடும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

وقوع کذب کے معنی درست ہوگئے۔

'பொய் சொல்லக் கூடும் என்பது சரியாகிவிட்டது.'

அவரின் இச் சொல்லுக்கு கருத்தாவது: அல்லாஹ் பொய் சொல்லிவிட்டான், அல்லாஹ் பொய் சொல்வது அவசியந்தான் என்பதாகும். மஆதல்லாஹ்! அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.

மேலும் முறாதாபாது அபுளலுல் மதாபிவு எனும் அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டு, பாடம் போடப்படாத பதாவா ரஷிதியா 23-வது பக்கத்தில் வருகிறது:

بسیار چیز ہست کہ ظہور آں از مقبولین حق از خرق عادات شمردہ میشود حالانکہ امثال آں بلکہ اقوی واکمل از آں از ارباب سحر و اصحاب طلسم ممکن الوقوع باشد۔

'அநேக கருமங்கள் அல்லாஹ்வின் நல்லடியார்களிலிருந்து வெளியாவதை வழக்கத்திற்கு மாற்றமானவை (கறாமத்து, முஃஜிஸாத்து) என்று எண்ணப்படுகிறது.

அம்மாதிரியானவைகளும், அவற்றைவிட சக்தி வாய்ந்தவைகளும், பரிபூரணமானவைகளுமான செய்கைகள் மந்திரவாதிகளிலிருந்தும், சூனியக்காரர்களிலிருந்தும் உண்டாவது சாத்தியமானவைகளேதான்.'


அதாவது: அல்லாஹுதஆலாவின் ரஸூல்மார்கள், நபிமார்களுடைய முஃஜிஸாத்துக்களை விடவும் சக்தியும், பரிபூரணமுமான கருமங்களை சூனியக்காரர்கள், ஜாலவித்தைக்காரர்கள் செய்து காட்டுவார்கள் என்பதாகும். அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.

மேலும், 'தத்கிறதுற் றஷிது' என்ற நூலின் 17-வது பக்கத்தில் கொங்கோஹி சாஹிபின் சிறுநீரை விட துர்நாற்றமான வார்த்தை வருகிறது:


اس زمانہ میں ہدایت و نجات موقوف ہے میرے اتباع پر

' இக்காலத்தில் நேர்வழியும், கதிமோட்சமும் என்னைப் பின்பற்றுவதிலேயே தரிபட்டிருக்கிறது' என்று கொங்கோஹி குறிப்பிடுகிறார்.

கூறப்பட்ட இந்த குப்ரியத்தான கொள்கைகள், எவரில் இல்யாஸ் பனாவாகிக் கிடந்தாரோ, யாரை இவர் குத்பு என்று சொன்னாரோ அவருடைய (கொங்கோஹியுடைய) கொள்கைகளாகும். இனி, இல்யாஸுக்கு ஹதீது கொடுத்த உஸ்தாது மௌலவி மஹ்மூது ஹஸன் தேவுபந்தியுடைய குப்ரிய்யத்தான கொள்கைகளையும் பாருங்கள். இதோ அவரின் 'ஜுஹ்து முகில்' எனும் கிதாபு 3-வது பக்கத்தில் வருகிறது:


قولہ وھو محال لانہ نقص والنقص علیہ تعالی محال قول اگر مراد از محال ممتنع لذاتہ است کہ تحت قدرت الٰہیہ داخل نیست پس لا نسلم کہ
کذب مذکور محال بمعنی مسطور باشد چہ عقد قضیہ غیر مطابق للواقع والقائے آں بر ملائکہ وانبیا خارج از قدرت الٰہیہ نیست والا لازم آید کہ قدرت انسانی ازید از قدرت
ربانی باشد چہ عقد قضیہ غیر مطابق للواقع والقائے آں بر مخاطبین در قدرت اکثر افراد انسانی است۔

'அவருடைய (பளுலுர் ரஹ்மானுடைய) வாசகம் அது (பொய் சொல்வது) அசம்பாவிதமாகும். ஏனென்றால் அது குறைவாகும். அல்லாஹுத்தஆலா பேரில் குறைவு என்பது அசம்பாவிதமாகும். நான் சொல்கிறேன்: அசம்பாவிதம் என்று சொல்வதைக் கொண்டு கருத்து மும்தனிஉன்லிதாதிஹி அதாவது தெய்வ சக்திக்குட்பட்டதல்ல என்பதனால் கூறப்பட்ட பொய் சொல்வது என்பது (இப்போது) எழுதப்பட்ட கருத்துப்படி அசம்பாவிதம் என்பதை நாம் ஒப்புக் கொள்ள மாட்டோம்.

ஏனென்றால், யதார்த்தத்திற்கு மாற்றமான ஒரு சம்பவத்தை கற்பிதமாக முடிவுகட்டி அதை மலக்குகள், நபிமார்களுக்கு சொல்வது தெய்வசக்திக்கு புறம்பானதல்ல. அவ்வாறில்லையானால் (தெய்வ சக்திக்கு புறம்பானதென்றால்) மனித சக்தி தெய்வ சக்தியை விடவும் அதிகமானதென்று ஆகும். ஏன்? யதார்த்தத்திற்கு மாற்றமான சம்பவங்கள் கற்பிதமாக உண்டுபண்ணி தங்களுக்கு முன்னாலிருப்பவர்களிடம் சொல்வது மனித கோடிகளில் அநேகரிடம் சாத்தியமாகக் கூடியதாக இருக்கிறது.'

அதாவது ஹளரத்து மௌலான பள்லுற்றஹ்மான் ஸாஹிபு கைறாபாதி (றஹ்மத்துல்லாஹி அலைஹி) சொன்னார்கள்: அல்லாஹ் பொய் சொல்வது அசம்பாவிதம் என்றால், பொய் சொல்வது வடுவாகும். வடு அல்லாஹ் பேரில் அசம்பாவிதமாகுமென்று. இதன்பேரில் இமாமுல் வஹ்ஹாபிய்யா மஹ்மூது ஹஸன் தேவுபந்தி ஜவாபு கொடுக்கிறார்: 'நான் பொய்

(மும்தனிஉன் பிதாத்திஹி) தெய்வ சக்திக்குள்பட்டதில்லை என்பதனால் இந்தக் கருத்துப்படி அல்லாஹ் பொய் சொல்வது அசம்பாவிதம் என்பதை நாம் ஒப்புக்கொள்ள மாட்டோம். ஏனென்றால் பொய்யான ஒரு வசனத்தை இட்டுக்கட்டி அதை மலாயிக்கத்துகளுக்கும், நபிமார்களுக்கும் எடுத்தோதுவது தெய்வசக்திக்கு புறம்பானதல்ல. இல்லையானால், மனித சக்தி தெய்வ சக்தியைப் பார்க்கிலும் அதிகமானதென்று ஏற்படும்.

பொய்யான வார்த்தைகளை உண்டாக்கி முன்னாலிருப்பவர்களிடத்தில் உரைப்பது அநேக மனிதர்களால் சாத்தியமாகிறது'. இந்த இதே மஹ்மூது ஹஸன் தேவுபந்திதான் தனது குரு கொங்கோஹி பேரில் சொல்லிய மர்திய்யாவின் 11வது பக்கத்தில் எழுதுகிறார்:

قبولیت اسے کہتے ہیں مقبول ایسے ہوتے ہیں ۔ عبید سود کا ان کے لقب ہے یوسف ثانی

' தெய்வ அங்கீகாரம் என்று அதையே சொல்ல வேண்டும். அங்கீகரிக்கப்பட்டவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். அவர்களின் கறுத்த அடிமைக்கு இடுகுறிப் பெயர் (யூசுபுதானீ) இரண்டாவது யூசுபு என்பதாகும்.'

பாருங்கள்! அழகிற் சிறந்த நபி ஸெய்யிதினா யூசுபு ஸித்தீகு அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தனது அடிமைக்கு-அதிலும் கண்ணங்கறேலென்ற கறுத்த அடிமைக்கு ஒப்பிட்டு கடுமையாக ஏசுகிறார் என்பதை.

அவரின் அதே மர்திய்யா 33-வது பக்கத்தில் வருகிறது:

مردوں کو زندہ کیا زندوں کو مرنے نہ دیا ۔ اس مسیحائی کو دیکھیں ذری ابن مریم

'இறந்தவர்களை உயிர் பெறச் செய்தார். ஹயாத்தானவர்களை மரணிக்க விட்டாரில்லை. இந்த அற்புத சக்தியைக் கொஞ்சம் மர்யமுடைய மகன் பார்க்க வேண்டும்.'

பாருங்கள்! ஹளரத்து ஸெய்யிதுனா நபி ஈஸா ரூஹுல்லாஹி அலைஹிஸ்ஸலாம் அவர்களை எப்படிக் கடுமையாக குறைவு படுத்துகிறார். சகிக்கவும் முடியாது.

மன்னிக்கவும் முடியாது. ஏன்? மிர்ஜா குலாம் காதியானி குறைவாகச் சொன்னால் மாத்திரம் அவர் காபிர், முர்த்ததாகி விடுவார். தேவுபந்தி எவ்வளவு தூரம் குறைவுபடுத்தித் தூஷணித்துப் பேசினாலும் அவர் முஸ்லிமாகவே இருப்பாரா?

இப்பொழுது கொங்கோஹிஜிக்குப் பிறகு இல்யாஸ் இரண்டாம் முறையாக எவரிடமிருந்து வஹ்ஹாபிஸம், தேவுபந்திஸம் உடைய முத்திரையைப் பெற்றுக் கொண்டாரோ அவரின் சங்கதியையும் பாருங்கள். இதோ மௌலவி கலீல் அஹ்மது அம்பேட்டியின் கொள்கையை அவர் 'பராஹீனே காதிஆ' என்னும் நூலில் 51-வது பக்கத்தில் எழுதுகிறார்:-

الحاصل غور کرنا چاہیے کہ شیطان و ملک الموت کا حال دیکھ کر علم محیط زمین کا فخر عالم علیہ السلام کو ثابت کرنا شرک نہیں تو کونسا ایمان کا حصہ ہے۔ شیطان و ملک الموت کو
یہ وسعت نص سے ثابت ہوئی فخر عالم کی وسعت علم کی کونسی نص قطعی ہے جس سے تمام نصوص کو رد کر کے ایک شرک ثابت کرتا ہے۔

'முடிவாக அவசியம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஷைத்தான், மலக்குல் மவுத்து இருவரின் நிலைமைகளைப் பார்த்துவிட்டு பூமி முழுவதும் அறியக் கூடிய அறிவு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இருப்பதாகத் தரிபடுத்துவதானது ஷிர்க்கு என்றில்லாமல் ஈமானின் எந்த பாகத்தைச் சார்ந்ததாகும்? ஷைத்தானுக்கும் மலக்குல் மவுத்துக்கும் இந்த விசால அறிவு இருப்பதாக குர்ஆனின் (நஸ்ஸு) ஆதாரத்தைக் கொண்டு தரிபட்டிருக்கிறது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விசால அறிவு உண்டு என்பதாக எண்ணுவதற்கு என்ன (நஸ்ஸு) அதாரமிருக்கிறது? இதனால் (நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விசால அறிவு இருக்கிறது என்று சொல்லுவதனால்) எல்லா ஆதாரங்களையும் மறுத்து ஒரு ஷிர்க்கை ஸ்தாபிக்க வேண்டி ஏற்பாடுகிறது.'

கருத்தாவது: மௌலவி கலீல் அஹ்மது அம்பேட்டியின் தருமத்தில் (கொள்கையில்) மல்வூன் ஷைத்தானுக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைவிட அதிக அறிவு (இல்மு) இருக்கிறது என்றும், எவன் ஷைத்தானுக்கு உலக முழுவதும் அறியக் கூடிய அறிவு இருப்பதாக நம்புகிறானோ அவன் முஸ்லிம் என்றும், ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வால் அருளப்பட்ட அறிவைக் கொண்டு உலக முழுவதையும் அறிவார்களென்று நம்புகிறானோ அவன் தேவுபந்தி தருமப் பிரகாரம் சதாவும் நரக தண்டனையை அனுபவிக்கிற முஷ்ரிக்காவான் என்றும் சொல்கிறார். அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.

மேலும் அதே பறாஹீனே காத்திஆ 26-வது பக்கத்தில் சொல்கிறார்:-

مدرسہ دیوبند کی عظمت حق تعالیٰ کی درگاہ پاک میں بہت ہے کہ صدہا عالم یہاں سے پڑھ کر گئے اور خلق کثیر کو ظلمات ضلالت سے نکالا یہی سبب ہے کہ ایک صالح فخر عالم علیہ السلام
کی زیارت سے خواب میں مشرف ہوئے تو آپ کو اردو میں کلام کرتے دیکھ کر پوچھا کہ آپ کو یہ کلام کہاں سے آگئی آپ تو عربی ہیں فرمایا کہ جب سے علمائے مدرسہ دیوبند سے
ہمارا معاملہ ہوا ہم کو یہ زبان آگئی۔ سبحان اللہ اس سے رتبہ اس مدرسے کا معلوم ہوا۔

'தேவுபந்து மத்ரஸாவின் மகிமை ஹக்குத்தஆலாவின் சமூகத்தில் றொம்பவும் அதிகமாகும். நூற்றுக்கணக்கான ஆலிம்கள் இங்கிருந்து படித்து வெளியேறி இருக்கிறார்கள். அநேக ஜனங்களை வழிகேடு என்னும் இருளைவிட்டு அகற்றியிருக்கிறார்கள். இக்காரணத்தினால் தான் ஒரு ஸாலிஹான மனிதருக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தரிசிக்கும் பாக்கியம் கனவில் கிடைத்தது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உருதுவில் பேசுவதைக் கண்டு நாயகமே, தாங்கள் அரபியாயிற்றே, தங்களுக்கு இந்தப் பாஷை எப்படி தெரியவந்தது? என வினவியதற்கு, எப்பொழுது தேவுபந்து மத்ரஸாவின் உலமாக்களோடு நம்முடைய விவகாரத் தொடர்பு ஆனதோ அப்போதிருந்தே

நமக்கு இந்தப் பாஷை தெரியலாயிற்று என்று அவர்கள் சொன்னார்கள். ஸுப்ஹானல்லாஹ்! இதனால் இந்த மத்ரஸாவின் பதவி நன்றாகத் தெரியவருகிறது.'

அதாவது: நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தேவுபந்து உலமாக்களின் மாணவராகி விட்டார். அல்லாஹ் காப்பாற்ற வேண்டும். இன்னமும், அதே கலீல் அஹ்மது அம்பேட்டியின் சொற்களான 'தத்கிறத்துல் கலீல்' என்ற கிதாபின் 86-வது பக்கத்தில் வருகிறது:

چوری شراب خوری وجہل وظلم سے معارضہ بھی کم فہمی سے ناشی ہے کیونکہ معلوم ہوتا ہے کہ غلام دستگیر کے نزدیک خدا کی قدرت بندہ کی قدرت سے زاید ہونا اور خدا کے مقدورات کا بندہ کے مقدورات سے زاید ہونا ضروری نہیں حالانکہ یہ مسئلہ اہل کلام کا ہے کہ جو مقدور العبد ہے وہ مقدور اللہ ہے اگر اس کا انکار کرتے ہو تو خود اہل سنت سے خارج ہو

' களவு, குடி, மடமை, அநியாயம் இவைகள் சம்பந்தமாக தர்க்கவாதம் செய்வதுவும் விளக்கக் குறைவாலேயே ஏற்பட்டதாகும். ஏனென்றால், அல்லாஹ்வின் சக்தி அடியானின் சக்தியை விட அதிகமாக இருப்பதும், அல்லாஹ்வின் சக்திக்குட்பட்டதானது அடியானின் சக்திக்குள்ளானவைகளை விடவும் மிகுதமானது என்பதும் குலாம் தஸ்தகீர் அவர்களிடத்தில் அவசியமில்லை என்பதாகவே தெரிகிறது. நிலைமையோ, அடியானின் சக்திக்குள் அகப்பட்டவைகளெல்லாம் அல்லாஹ்வின் சக்திக்குள்ளானவைகளேயாம் என்பது அஹ்ல கலாம் (முதகல்லிமீன்)களிடத்தில் ஏகோபித்து ஒப்புக்கொள்ளப்பட்டதோர் விஷயம். இதை மறுதலித்தால் (நீவிர்) ஸுன்னத்து ஜமாஅத்துக் கூட்டத்தை விட்டும் அப்புறப்பட்டு விடுவீர் '

கருத்தாவது: அமபேட்டிஜீயிடத்தில் தேவுபந்தி தர்மத்தில் அல்லாஹ் பொய் சொல்வதும், கள் குடிப்பதும், கள்ளனாகவும், குடிகாரனாக ஆகுவதும், மடையனாக, அநியாயக் காரனாக இருப்பதும் அவசியமாகும். தேவுபந்திஸத்தில் அந்த ஆண்டவன் கள்ளனாக, குடிகாரனாக, மடையனாக, அநியாயக்காரனாக இல்லையானால் கள்ளர்களாக, குடிகாரர்களாக, சூதாடிகளாக, மடையர்களாக, அக்கிரமக்காரர்களாக இருக்கக்கூடிய அடியார்களை விடவும் அவன் சக்தியில் குறைந்தவனாய் இயலாதவனாய் ஆகி விடுவான் என்பதாகும். அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.


இப்பொழுது ஜனாப் அஷ்றபலி தானவி சாஹிபுடைய கொள்கையையும் பாருங்கள். அவருடைய 'ஹிப்ளுல் ஈமான்' 7, 8-வது பக்கங்களில் அவர் சொல்கிறார்:

آپ کی ذات مقدسہ پر علم غیب کا حکم کیا جانا اگر بقول زید صحیح ہو تو دریافت طلب امر یہ ہے کہ اس غیب سے مراد بعض غیب ہے یا کل غیب اگر بعض علوم غیبیہ مراد ہیں تو اس میں حضور کی ہی کیا تخصیص ہے ایسا علم غیب تو زید وعمرو بلکہ ہر صبی ومجنون بلکہ جمیع حیوانات وبہائم کے لئے بھی حاصل ہے۔

'நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பரிசுத்த தாத்துக்கு மறைவான விஷயங்களை அறியும் அறிவு இருக்கிறது என்று சொல்வது (உவமையில்) ஜைது எனும் நபர் சொல்வது போல் சரி என்று வைத்துக் கொண்டால், அந்த மறைவான விஷயங்களைக் கொண்டு (அதாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அறிந்திருக்கக் கூடியவற்றைக் கொண்டு) கருத்து சில மறைவான விஷயங்களா? என அவரை (ஜைது என்பவரைக்) கேட்க வேண்டும். சில மறைவான விஷயம் என்பது கருத்தானால் அதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு என்ன விசேஷம் இருக்கிறது?

அம்மாதிரியான (நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அறிந்திருக்கக் கூடிய அறிவு (சாதாரண மனிதர்களான) ஜைதுக்கு, அம்றுக்கு, சிறு பிள்ளைகளுக்கு, பைத்தியக்காரர்களுக்கும் தான் ஏன் எல்லா ஜீவபிராணிகளுக்கும், மிருகங்களுக்கும் கூடத்தான் உண்டு.'

கருத்து: நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சிறுபிள்ளைகள், பைத்தியக்காரர்கள், மிருகங்களுக்குள்ளது போன்ற அறிவுதான் உள்ளது என்பதாகும். அல்லாஹ் காப்பாற்ற வேண்டும். மேலும், அதே 'ஹிப்ளுல் ஈமான்' உடைய மூன்றாவது கேள்வி வருமாறு:



اور زید کہتا ہے کہ علم غیب کی دو قسمیں ہیں اول بالذات اس معنی کر عالم الغیب خدا تعالی کے سوا کوئی نہیں ہو سکتا اور دوم بواسطہ اس معنی کر رسول اللہ صلی اللہ علیہ وسلم بھی عالم الغیب تھے زید کا استدلال اور عقیدہ و عمل کیسا ہے بینوا توجروا۔

'ஜைது என்பவர் சொல்கிறார்: இல்முல் கைபு (மறைவான விஷய அறிவு) இரு வகைப்படும். ஒன்று பித்தாத்து. (பிறரால் கொடுக்கப்படாமல் தனக்குத் தானே உள்ள அறிவு). அந்தக் கருத்துப்படி அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் ஆலிமுல் கைபாக(மறைவான விஷயத்தை அறிந்தவராக) ஆக முடியாது. மற்றது பில்வாஸித்தா. (பிறரால் அறிவித்துக் கொடுக்கப்பட்டதன் மூலம் அறிவது). இந்தக் கருத்துப்படி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஆலிமுல் கைபு-மறைவான சங்கதிகளை அறிந்தவர்களாய் ஆவார்கள். ஜெயிது இப்படிச் சொல்வதும், இம்மாதிரி நம்பிக்கை வைப்பதும் எப்படி? (சரியா, இல்லையா?) விளக்கிக் கூறுங்கள். நற்கூலி கொடுக்கப்படுவீர்கள்.

கருத்தாவது: அல்லாஹுத்தஅலா ஒருவராலும் அறிவித்துக் கொடுக்கப்படாமல் தன்னாலேயே சுயமாக மறைவான சங்கதிகளை அறிவான் என்றும், ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வினால் அறிவித்துக் கொடுக்கப்பட்ட அறிவைக் கொண்டு மறைவான சங்கதிகளை அறிவார்கள் என்றும் ஜைது என்பவன் நம்பியிருக்கிறான். ஃபஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி.

இந்த வினாக்களுக்கு தானவி ஸாஹிபு விடைகள் எழுதுவதில் கடைசியாக எழுதுகிறார்:



اجوبہ مذکورہ سے واضح ہو گیا کہ زید کا عقیدہ اور قول سراسر غلط اور خلاف نصوص شرعیہ ہے ہرگز اس کا قبول کرنا کسی کو جائز نہیں زید کو چاہیے کہ توبہ کرے اور اتباع سنت

' மேலே கூறப்பட்ட விடைகளினால் ஜைதின் கொள்கையும், அவரின் வார்த்தையும் ஆதிமுதல் அந்தம் வரையும் தவறானது. மார்க்க ஆதாரங்களுக்கு முறணானது என்பதும் தெளிவாகி விட்டது. யாரும் அதை நம்புவது கூடாது. ஜைது தவ்பாச் செய்து ஸுன்னத்தை (மார்க்கத்தை)ப் பின்பற்றுவது அவசியமாகும்.'

சகோதரர்களே! சிந்தித்துப் பாருங்கள். கேள்வியில், ஜைதின் கொள்கை இருவகை இல்மு என்பதாகும். ஒன்று அல்லாஹ்வுடைய (தாத்தியத்தான) சுய அறிவு. இரண்டாவது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ் அறிவித்துக் கொடுத்த (அதாயி) அருட்கொடை அறிவு. தானவி ஸாஹிபு தன்னுடைய விடையின் சாராம்சம் எழுதுவதில் இந்த இரண்டு வகைகளையுமே தெள;ளத் தெளிய, 'ஜைதின்

கொள்கையும், அவரின் வார்த்தையும் ஆதியோடந்தமாக தவறானது, மார்க்க ஆதாரங்களுக்கு முரணானது என்று எழுதிப் போட்டார்.

அதன் கருத்தாவது: அல்லாஹுத்தஆலாவுக்கு தாத்திய்யான இல்முமில்லை. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அதாயிய்யான இல்முமில்லை என்பதாகும். ஃபஅவூதுபில்லாஹி மின்ஹா.

பாருங்கள்! ஒருவிடுத்தம் பேனா முனையை அசைப்பதைக் கொண்டு எத்தனை கடுமையான, குபிரிய்யத்தான வாசகத்தை எழுதிவிட்டார். ஒவ்வொரு அறிவாளியும், யோசனையுள்ளவனுமென்ன, கற்றவர், கல்லாதாருங்கூட இல்ம் என்பதன் பொருள் ஆதிமுதல் அந்தம் வரையும் அலிபிலிருந்து யாவரையும் என்பதென அறிவான். ஆகவே தானவி ஸாஹிபு அல்லாஹுத் தஆலாவுக்கு (இல்ம கைபு தாத்தி) மறைவான சங்கதிகளை சுயமே அறியும் அறிவு உண்டென்பதையும் தெள;ளத் தெளிய, பகிரங்கமாக மறுத்து விட்டார். இது தானவி சாஹிபுவின் துலாம்பரமான உறுதியான குப்றாக இருக்கும்.

இதே தானவி சாஹிபுவின் முரீதொருவர் கனவிலும், பின்னர் விழிப்பிலும், சுயத்தோடும், ஞாபகத்தோடும் நாள் முழுவதும் பின்வருமாறுள்ள கலிமாவையும் ஸலவாத்தையும் ஓதிக் கொண்டிருந்தார்.

لا الہ الا اللہ اشرفعلی رسول اللہ اللھم صلّ علی سیدنا ونبیّنا و مولٰنا اشرفعلی

'அதாவது: கலிமாவில், தானவியை அல்லாஹ்வுடைய ரஸூல் என்றும் ஸலவாத்தில் தானவியை நபி என்றும் சொல்லிக் கொண்டே இருந்தார். அந்த முரீது, தானவி சாஹிபிடம் என்னுடைய இந்நிலைமை என்ன? இனி நான் என்ன செய்ய வேண்டும்? என்று அது பற்றி கேட்க, தானவி சாஹிபு அது பற்றி வருத்தப்படவுமில்லை, முரீதின் கெட்ட கொள்கையைப் பற்றி எச்சரிக்கை செய்யவுமில்லை. எனினும் பின்கண்டவாறு ஜவாபு கொடுத்திருக்கிறார். பாருங்கள்! அவருடைய பத்திரிகை **'அல்-இம்தாது'** உடைய, ஹிஜ்ரி 1336 ஸபர் மாத மாசிகையின் **35**வது பக்கத்தில் அதன் விபரம் வெளிவந்துள்ளது,

الجواب اس واقعہ میں تسلی تھی کہ جس کی طرف تم رجوع کرتے ہو وہ بعونہ تعالیٰ متبع سنت ہے (دستخط تھانوی)

' **விடை:** இந்த சம்பவத்தில் சாந்தி இருக்கிறது. அதாவது, நீவிர் எவர் பக்கம் மீளுகிறீரோ, அவர்(தானவி) அல்லாஹ் உதவியால் மார்க்கத்தை தொடர்ந்தவராகும்.' -தானவியின் ஒப்பம்.

கருத்தாவது: முரீது எப்பொழுது தானவியை ரஸூலுல்லாஹ் என்றும், நபிய்யுனா என்றும் கனவிலொரு முறையும், விழிப்பில் சுயத்தோடும் ஞாபகத்தோடும் பகல் முழுவதும் ஓதினாரோ, அதனாலே அவர் தன்னுடைய குருவான தானவி மார்க்கத்தைத் தொடர்ந்தவர் மார்க்கத்தின் பேரில் உறுதியாகக் கெட்டியாக நிலைத்திருப்பவர் என்று உறுதி கொள்வது அவசியம் என்பதாக,

ولاحول ولاقوة الا بالله العلى العظيم

தேசகுரு, வஹ்ஹாபியப் பிரசாரகர், 'அன்னஜ்மு' பத்திரிகையாசிரியர், அப்துஷ்ஷகூர் காக்கூறவி உடைய கொள்கையையும் சற்று கேளுங்கள். ஹிஜ்ரி 1352 ரபீயுல் அவ்வல் 22ம் தேதி (1934 ஜூலை 6) அன்னஜ்மு பத்திரிகை 13-ம் வாலியம், 11-ம் நிர். இதழ், 6 வது பக்கம், 2-வது காலம், 24-வது வரியில் அவர் எழுதுகிறார்:

تعریف کے تمام افراد اللہ کے لئے ثابت ہیں کسی طرح کی تعریف کسی دوسرے کے لئے جائز نہیں اللہ کی ذات کے سوا کسی کی تعریف کرنا حرام ہے ۔

' புகழின் எல்லா இனங்களும் அல்லாஹ்வுக்கே உரித்தானது. எந்த வகையான புகழும் வேறு எவருக்கானாலும் ஆகாது. அல்லாஹ்வின் தாத்தைத் தவிர்த்து வேறெவரையும் (தாரீப்) புகழ்ச்சி பண்ணுவது ஹறாமாகும்.'

காகூறவி ஸாஹிபு தானே ஸூரத்துல் பாத்திஹாவுக்கு இப்படி வியாக்கியானம் செய்து அவரே பத்திரிகையிலும் பிரசுரித்திருக்கிறார். எனவே, அவரிடத்தில் சிறப்பான கலிமாவின் இரண்டாம் பாகமாகிய முஹம்மதுர் ரஸூலுல்லாஹி என்ற வாசகத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை (தாரீப்) புகழ்ந்து சொல்லப்பட்டிருப்பதனால் அந்த வாசகத்தை சொல்வதும் ஹறாமாகிறது.

ஆகவே, காகூறவியின் பத்வாப் பிரகாரம் இந்தத் தப்லீகு பார்ட்டிகள் சிறியோர், பொரியோர் அத்தனை பேர்களும் ஹறாமைத்தான் செய்யும்படி சொல்லிக் கொண்டு திரிகிறார்கள் போலும்.

மேலும், காகூறவி சாஹிபு இப்படி எழுதியதனால் குர்ஆன் ஷரீபில் எந்தெந்த ஆயத்துக்களில் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய புகழ் வருணிப்புகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளனவோ அவைகளை எல்லாம் மறுதலித்து விட்டாரா, இல்லையா? எனவே, இது அவரின் கெட்ட குப்ரா, இல்லையா?

இன்னமும் இதே அப்துஷ்ஷகூர் காகூறவி சாஹிபு, தனது 'முக்தஸறு ஸீறத்துன்னபவிய்யா- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜீவிய சரிதைச் சுருக்கம் என்ற நூலில் (லக்னோவ் உம்ததுல் மதாபிவு பிரஸில் அச்சிடப்பட்டது) 22-வது பக்கத்தில் வரைந்துள்ளார்.

اخلاقی محاسن کے تین جز ہیں تہذیب اخلاق تدبیر منزل سیاست مدن ان تینوں سے آپ قطعاً واصلاً بے خبر تھے ۔

'அழகிய நற்குணம் என்பது குணச் சீர்திருத்தம், இல்லறம், தேசியம் என மூன்று வகைப்படும். இம்மூன்றும் தங்களுக்கு (ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு) அறவே தெரியாது.'

அதாவது: அழகிய நற்குணத்தில் என்னென்ன நல்ல இலட்சணங்களாக இருக்கின்றனவோ அவற்றில் ஒன்றையும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அறவே அறியமாட்டார்கள் என்பதாம்.

மேலும், பாருங்கள் 1937 ஜூன் 11-ம் திகதியுடைய அன்னஜ்மு பத்திரிகையின் பக்கம் 5, காலம் 3, வரி 15 முதல் 19 வரை காணப்படுகிறது:

نبی کریم نے فرمایا۔ (انما انا بشر مثلکم یوحی الیّ) میں تمہاری طرح ایک معمولی انسان ہوں اگر تم میں اور مجھ میں فرق ہے تو صرف اتنا ہے کہ میں تمہارے پاس خدا تعالیٰ کا پیام لایا ہوں۔

'அருமை நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள்:

انما انا بشر مثلکم یوحی الیّ

நான் உங்களைப் போன்று ஒரு சாமானிய மனிதன்தான். உங்களுக்கும் எனக்குமிடையில் வித்தியாசம் என்பது இவ்வளவுதான், அதாவது, நான் அல்லாஹ்விடமிருந்து உங்கள் அளவில் தூது கொண்டு வந்தேன் '.

அன்னஜ்முடைய எடிட்டராகட்டும். அல்லது சிறிய பெரிய வஹ்ஹாபிகள் எவருமாகட்டும். மேற்கண்ட இந்த ஆயத்துக்கு பொருள் எழுதப்பட்டதில் சாமானிய என்ற பொருள் எந்த பதத்தின் பொருள் என்பதாகக் காட்ட முடியுமா? கியாம பரியந்தமும் ஒரு வஹ்ஹாபி, தேவுபந்தியினாலும் காண்பிக்கவே முடியாது. முஸ்லீம்களான ஸுன்னத்து வல்ஜமாஅத்துச் சகோதரர்களே! வஹ்ஹாபி தேவுபந்திகள் என்னென்ன விதமாகவெல்லாம் இருளைப் போடுகிறார்கள்!

சகோதரர்களே! தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸின் பெரிய, முதிய பழந்தந்திரிகள், சகாக்கள் உடைய குப்ரிய்யத்தான வாசகங்களை அவரவர்களுடைய நூற்களின் பெயர்கள், பக்க விபரங்களுடன் உங்கள் முன்னால் சமர்ப்பித்திருக்கிறேன். அவர்களில் கொங்கோஹி சாஹிபு அவர்களே பாக்கியவான் இல்யாஸுடைய முதலாவது உஸ்த்தாது (உபாத்தியாயரு)ம், முதலாவது ஷைகு (குரு)வும், அவருக்குகந்த குத்புமாவார். மஹ்மூது ஹஸன் ஸாஹிபு, இல்யாஸுக்கு ஹதீது ஓதிக் கொடுத்த உஸ்த்தாதும் இரண்டாவது ஷெய்குமாவார். அம்பேட்டி சாஹிபு இல்யாஸுக்கு மற்றொரு உஸ்த்தாதும், ஞானவழி நடாத்தும் ஆசிரியரும், மூன்றாவது ஷெய்குமாவார். தானவீஜீ சாஹிபுவோ பாக்கியவான் இல்யாஸின் உடலும் உயிருமாவார். ஜனாப் காக்கூறவி சாஹிபு இல்யாஸின் வயதொத்த தோழரும் ஒரே காலத்தவருமாவார். இவர்களின் கொள்கைகளிலிருந்து இல்யாஸ் சாஹிபு கொள்கையும் தெளிவாக விளங்கும். அதாவது: தப்லீகு பார்ட்டி வஹ்ஹாபி

தேவுபந்தி பார்ட்டி லீடர் மௌலவி இல்யாஸ் உடைய கொள்கையும் இதே விஷமான குப்ரிய்யத்தான கொள்கைதான். ஆகவே, அந்த நஜீஸான, அசுத்தமான குப்ரிய்யத்தான

கொள்கைகளை ஒப்புக்கொண்டு அவர் காபிராகவும் முர்த்ததாகவுமானார். மேலும் அம்மாதிரியான காபிர் முர்த்தத்தை, அவரின் குப்ரிய்யத்தான கொள்கைகளை அறிந்திருந்தும் அவர் காபிர் என்பதில் எவன் சந்தேகம் கொள்கிறானோ அவனையும் அவரோடு ஒரே கயிற்றில்தான் பிணைக்கப்படும். அதாவது அவனும் முர்த்ததாகிப் போவான். மேலும், இதையும் கவனித்துச் சிந்தித்துப் பாருங்கள்!

மௌலவி இல்யாஸின் கொள்கை எப்பொழுது இம்மாதிரி விஷமான கெட்ட குப்ரிய்யத்தானதாகி விட்டதோ அப்பொழுது அவருக்கோ அவரைச் சார்ந்த எந்தக் கூட்டத்தினருக்கோ முஸ்லிம்களுக்கு கலிமா சொல்லிக் கொடுக்க என்ன பாத்தியதையும், யோக்கியதையும் இருக்கிறது? ஏனென்றால், லாயிலாஹ இல்லல்லாஹு என்று சொல்லிக் கொடுப்பதைக் கொண்டு எந்த ஆண்டவனை தேவுபந்தி பெரியார்கள் பொய்யன், கள்ளன், குடிகாரன், சூதாட்டக்காரன், மடையன், அநியாயக் காரன் என்றெல்லாம் எல்லாக் குறைபாடுகளையும் வடுக்களையுமுடையவன், இழி தொழிலத்தனையையும் செய்பவன்' என்று நம்புகிறார்களோ, மேலும் எவனுக்கு மறுவான சங்கதிகளை சுயமாக அறியும் அறிவு கிடையாது என்று மறுக்கிறார்களோ அந்த நாயனைத்தான் வணக்கத்திற்குரியவன் என்று விண்ணப்பம் செய்வதாகும். இது நிச்சயமாக குப்ரியத்தாகும். யாருக்கும் பகிரங்கமாக எளிதில் விளங்கக் கூடியதாகும்.

மேலும், கலிமா தையிபாவின் மற்ற பாகமான முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதில் இந்த தப்லீக்குப் பார்ட்டிகள் மதிப்பிற்குரிய ஹளரத் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மிருகங்களுடைய அறிவைப் போன்ற அறிவைப் பெற்றிருக்கிறவர்களே என்று சொல்கிறார்கள். அது மாத்திரமா? நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஷைத்தானை விடவும் அறிவில் குறைவானவர்கள் என்று எழுதுகிறார்கள். இன்னமும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உருது பாஷை படிப்பதில் தேவுபந்தி மவுலவிகளின் மாணாக்கர் என்று பிரஸ்தாபித்து அதன் மூலம் தேவுபந்து மத்ரஸாவின் மகிமையையும், கீர்த்தியையும் விளக்கிக் காட்டுகிறார்கள். ஹளரத்து நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் முஃஜிஸாவான இறந்தவரை உயிர் பெற்றெழும்பச் செய்யும் அற்புதச் சக்தியை விடவும் கொங்கோஹியின் அற்புத சக்தியை மேன்மையானது, சிறந்தது, உயர்வானது என்கிறார்கள். அல்லாஹ்வைத் தவிர்த்து எந்த நபியையும், ரஸூலையும் எவ்விதமாகவும் தஃரீபு செய்து புகழ்வது ஹறாம் என்கிறார்கள். ஹறாமை செய்விக்கிறார்கள்.

ரஸூல்களிலெல்லாம் மேம்பட்ட ஹளரத் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நாற்பது வயது வரையும் குணவொழுக்கம் ஒன்றும் தெரியாதவர்களென்கிறார்கள். இன்னும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஒரு சாமானிய மனிதரேதான் என்றும் நம்புகிறார்கள், எழுதுகிறார்கள். ஆகவே, இவ்வாறானா அவர்களுடைய இந்தக் கலிமாவைப் படித்துக் கொடுப்பவர்களும், படிப்பவர்களும் முஸ்லிம்களை குப்று, றித்தத்திலேயே தள்ளுகிறார்கள். எந்தக் கூட்டத்தார்களில் இவ்விதமான குப்ரிய்யத்தான கொள்கை இருக்கிறதோ அவர்கள் கலிமாப் படித்துக் கொடுப்பது ஒரு

புறமிருக்கட்டும். அவர்கள் எதுவரையிலும் இந்தக் குப்ரிய்யத்தான கொள்கைகளை விட்டும் பகிரங்கமாகத் தவுபாச் செய்யவில்லையோ அதுவரையிலும் அவர்களை முஸ்லிமகள் என்று சொல்வது ஹறாம். ஹறாம். ஹறாம். அல்லாஹுத் தஆலா, ஸுன்னத்து வல் ஜமாஅத்து முஸ்லிம்களை இவர்களை விட்டுத் தூரமாயிருக்கவும், இவர்களை விட்டகன்று இவர்களுடன் வெறுப்பு கொண்டிருக்கவும் நல்லருள் புரிவானாக. மேலும் இவர்களின் குப்ரிய்யத்தான தப்லீகு விஷக் காற்றை ஸுன்னத்து ஜமாஅத்துச் சகோதரர்களை விட்டும் தூரமாக்கி விடுவானாக. ஆமீன். ஆமீன். ஆமீன்.

آمين امين ثم آمين بجاه حبيبه النبي الامين المكين عليه وعلى آله افضل الصلاة وادوام التسليم

மேலும், தப்லீக்கு பார்ட்டியில் எவராயினும் ஏமாற்றுவதற்காக, மௌலவி இல்யாஸை கூறப்பட்ட தேவுபந்தி குப்ரிய்யத்தான கொள்கையுடையவரில்லை என்று சொல்வார்களேயானால், சொன்னவர் முதன்முதலாக மேலே கூறப்பட்ட கொள்கைகளெல்லாம் குப்ரிய்யத்தான கொள்கைகள் என்பதை ஒப்புக் கொள்வார்.

அத்தோடு கொங்கோஹி, அம்பேட்டி, தானவி, அஜுதயாபாஷி, காகூறவி, தேவுபந்தி இவர்களெல்லாம் தங்களின் இந்தக் குபிரிய்யத்தான கொள்கைகளின் காரணமாக பரிசுத்த ஷரீஅத்தின் தீர்ப்புப் படி திட்டவட்டமாக காபிர்கள், முர்த்தத்துகள், முல்ஹிதுகள்தான். இல்யாஸ் சாஹிபுக்கு தன்னுடைய அந்த பெரியார்கள், தேவுபந்து பைசாசங்களுடைய கெட்ட குப்ரிய்யத்தான கொள்கையைப் பற்றி அறவே தெரியாது என்றும் சொல்வார். இரண்டாவதாக, எப்பொழுது அந்தக் குப்ரிய்யத்தான கொள்கைகளைச் சொன்னவர்கள், நூலில் எழுதினவர்களெல்லாம் பூறாவாக எல்லோருமே மவுலவி இல்யாஸின் முதியோர்களாக, வழிகாட்டிகளாக, இமாம்களாக, முன்மாதிரிகளாக, ஆசிரியர்களாக, உடலும் உயிருமானவர்களாக, குத்புகளாக ஆகிவிட்டார்களோ அந்தக் கெட்ட கொள்கைகளைச் சொன்னவர்கள், அந்தக் கொள்கையை நம்பியவர்களாக இருப்பதோடு மௌலவி இல்யாஸ் அன்னார்களை முஸ்லிம்கள் என்றும், முஸ்லிம்களுக்கு இமாம்கள், முன்னிலையானவர்கள் என்றும் அறிந்தார். அவர்களின் அந்தக் கெட்ட குப்ரிய்யத்தான கொள்கைகளை இஸ்லாமென நம்பினாரோ அதனால் அவரும் காபிர் முர்த்தத்தாகும்.

சரி, தேவுபந்து போதனா திட்ட தொகுப்பாளர் மௌலவி முர்த்தளா ஹஸன் தர்பங்கியின் பத்வாவை சற்றுக் கேளுங்கள். இதோ அவரின் 'அஷத்துல் அதாபு' என்னும் நூலில் இரண்டாவது பக்கத்தில் வருகிறது:

جب کسی کا دل ہی جہنم میں جانا چاہے اور خود ہی اسلام کے وسیع دائرہ سے خارج ہو جائے تو علمائے اسلام مجبور ہیں جس طرح مسلمان کو کافر کہنا کفر ہے اسی طرح کافر کو مسلمان کہنا بھی کفر ہے۔

' எப்பொழுது ஒருவனுடைய மனமே நரகத்திற்குப் போக விரும்பிவிட்டதோ, மேலும் அவன் தானாகவே இஸ்லாமின் விசாலமான கோட்டின் சுற்றளவை விட்டு அப்புறப்பட்டு விட்டானேயானால் இஸ்லாமிய உலமாக்கள் (என் செய்வார்கள்?) நிர்ப்பந்தத்திலாகிவிட்டார்கள்.

எப்படி முஸ்லிமை காபிர் என்று சொல்வது குப்ராகுமோ அதே போலவே காபிரை முஸ்லிமென்று சொல்வதும் குப்ராகும்.'


அதே கிதாபின் 9-வது பக்கத்தையும் பாருங்கள். அதில் தர்பங்கீஜீ எழுதுகிறார்:


جب ایک شخص نے قطعاً یقیناً ایک ضروری دین کا انکار کیا اور وہ انکار محقق ہو گیا تو اب اس کو کافر نہ کہنا خود بے احتیاطی سے کافر و مرتد ہونا ہے۔

' எப்பொழுது ஒரு மனிதன் நிச்சயமாக மார்க்கத்தின் பிரஸ்தாபமானவொன்றை மறுதலித்தானேயானால், மேலும் அவன் (அவ்வாறு) மறுதலிப்பதுவும் நிச்சயமாக ருசுவாகி விடுமானால் அப்பொழுது அவனை காபிர் என்று சொல்லாமலிருப்பதானது (மார்க்கத்தில்) பேணுதல் இல்லாமையின் காரணத்தால் தானும் காபிர் முர்த்ததாகிப் போவதாகும்.'

கருத்தாவது: தேவுபந்தியா பைசாசங்கள் காபிர்கள் முர்த்தத்துகளாகும். இன்னும், அவர்களை காபிர்கள் என்று சொல்லாததால், மர்க்கத்தைப் பேணாததன் காரணத்தால் மௌலவி இல்யாஸும் காபிர் முர்த்ததாகும்.

மேற்படி நூலில் அதே பக்கத்தில் தார்பாங்கீஜீ மேலும் எழுதுகிறார்:


جیسے کسی مسلمان کو اقرار توحید و رسالت و دیگر عقائد اسلامیہ کی وجہ سے کافر کہنا کفر ہے کیونکہ اس نے اسکے اسلام کو کفر بتا دیا اسی طرح کسی کافر کو [illegible]
کہنا بھی کفر ہے کیونکہ اس نے کفر کو اسلام بتا دیا حالانکہ کفر کفر ہے اور اسلام اسلام ہے اس مسئلہ کو مسلمان خوب اچھی طرح سمجھ لیں کہ [illegible]
بے احتیاطی یہ ہے کہ جو منکر ضروری دین ہو اسے کافر کہا جائے۔ کیا منافقین توحید و رسالت کا اقرار نہ کرتے تھے پانچوں وقت قبلہ کی طرف نماز نہ پڑھتے تھے [illegible]
مدعیان نبوت اہل قبلہ نہ تھے کیا انھیں بھی مسلمان کہو گے۔

' எப்படி ஒரு முஸ்லிம் (ஆண்டவனின்) ஏகத்துவத்தைக் கொண்டும் (நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்) தூதுத்துவத்தைக் கொண்டும், மற்றும் இஸ்லாமியக் கொள்கைகளைக் கொண்டும் விண்ணப்பம் செய்திருக்க அவனைக் காபிர் என்று சொல்வது, இஸ்லாமை குப்று என்றுக் காட்டுவதினால் குப்றாகுமோ? அதேபோல், ஒரு காபிரை அவனின் குப்ரிய்யத்தான கொள்கைகள் பற்றி தெரிந்திருக்க, அவனை முஸ்லிம் என்று சொல்வதும் குப்றாகும். ஏனென்றால், இவன் குப்றை இஸ்லாம் என்று காட்டுகிறான். குப்று குப்றேதான். இஸ்லாம் இஸ்லாமேதான். இந்த மஸ்அலாவை முஸ்லிம்கள் மிகவும் நல்லவிதமாக விளங்கிக் கொள்ள வேண்டும். மிகுந்த ஜனங்கள் இதில் பேணுதல் செய்கிறார்கள்.

பேணுதலோவென்றால், எவன் மார்க்கத்தில் பிரஸ்தாபமாக அறியப்பட்டதை மறுதலிக்கிறானோ அவனை காபின் என்று சொல்வதேயாகும். ஏன்? முனாபிக்குகள், ஏகத்துவத்தையும், தூதுத்துவத்தையும் கொண்டு விண்ணப்பம்

செய்கிறார்களில்லையா? ஐந்து வேளையும் கிபுலாவை நோக்கித் தொழுகிறார்களில்லையா? முஸைலமத்துல் கத்தாபும் மற்றும் நபித்துவத்தைத் தாவா பண்ணியவர்களெல்லாம் (அஹ்ல


கிபுலா) கிபுலாவை நோக்கித் தொழுகிறவர்களில்லையா? ஏன் இவர்களையும் முஸ்லிம்களென்று சொல்வீர்களோ?'

மேலும் மேற்படி நூலின் 14-வது பக்கத்தில் சொல்கிறார்:


جو کافر کو کافر نہ کہے وہ خود کافر ہے۔

'எவன் காபிரை காபிர் என்று சொல்லவில்லையோ அவன்தானும் காபிராவான்.'

மேற்படி நூலின் 5-வது பக்கம் 8-வது வரியில் வருகிறது:



'அந்தத் துர்ப்பாக்கியனுக்கு மாற்றமாக அவன் தொழுகை, நோன்பையும் நிறைவேற்றுகிறான். மேலும் இந்தியாவில் மாத்திரமல்ல, ஐரோப்பா முழுவதிலுங்கூட இஸ்லாமியப் பிரச்சாரம் புரிகிறான். மேலும், அவனுடைய பிரயாசை, முயற்சியினால், அல்லாஹ் ஐரோப்பா முழுவதற்குமே உண்மையான ஈமானையும், இஸ்லாமையும் கொடுத்துவிட்டானென்றே வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானாலும், இவன் தன்னை முஸ்லிம், முஃமின் என்று வாதாடுவதோடும், மேலும் இந்தவிதமான கடும் முயற்சி பெரும் பிரயாசையோடும் நபிமார்களை (அலைஹிமிஸ்ஸலாம்) ஏசுவானேயானால் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இறுதி நபி என்ற பெருள்பிரகாரம் காத்தமுல் அன்பிய்யா என்று ஒப்புக் கொள்ளவில்லையானால்-அல்லாஹுத் தஆலாவை பொய்யன் என்று நம்புவானேயானால் அவன் (அல்லாஹ்) பொய் சொல்வது அவனுடைய வழக்கம் என்று சொல்வானேயானால், (மூன்று வரிக்குப் பின்னர்) மேலும், மார்க்கத்தில் பிரசித்தமாக அறியப்பட்டவைகளை மறுதலிப்பானேயானால், அவன் நிச்சயமாக கண்டிப்பாக, எல்லா முஸ்லிம்களிடத்திலும் முர்தத்து, காபிராக இருக்கும்.'

அதாவது: தானவி, அப்பேட்டி, கொங்கோஹி, நானூத்தவி, காகூறவி இவர்களெல்லாம் அல்லாஹ்(ஜல்லஷானு)வையும் அவனுடைய ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் குறைவுபடுத்தி, குத்துப்பாடு சொன்னதினாலும், மேலும் மார்க்கத்தில் பிரசித்தமாக அறியப்பட்டவைகளை மறுதலித்ததனாலும், எல்லா முஸ்லிம்களிடத்திலும் நிச்சயமாக, கண்டிப்பாக, காபிர்கள் முர்தத்துகளாகும். மேலும் தப்லீக்குப் பார்ட்டிகளுக்கும் எப்பொழுது இதே கொள்கையானதோ, அல்லது குறைந்தது அந்தத் தேவுபந்தி பைசாசங்களை, மார்க்கத்தில் (ளறூரிய்யான) பிரசித்தமான இன்றியமையாத கருமத்தை மறுதலித்தவர்களை முஸ்லிம்கள் என்று நம்பினார்களோ அவர்கள் எவ்வளவுதான் தொழுதாலும், நோன்பு வைத்தாலும், ஐரோப்பாவிலும்(தப்லீகு) பிரச்சாரம் செய்தாலும், கலிமா சொன்னாலுங்கூட


தர்பங்கி சாஹிபுவின் பத்வாப்படி எல்லா முஸ்லிம்களிடமும் மேற்படி கூட்டம் கண்டிப்பாக, நிச்சயமாக முர்தத்துகளும் காபிர்களுமேயாவார்கள்.

முஸ்லிம்களே! ஸுன்னத்து ஜமாஅத்து சகோதரர்களே! மார்க்கக் கள்ளர்கள்

பிடிபடுகிறார்கள் பாருங்கள்! ஃபல் ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

தர்பங்கீஜியின் இன்னமொரு காரசாரமான, ருசிகரமான பத்வாவையும் பாருங்கள்.

'அஷத்துல் அதாபு' என்ற அதே நூலின் 12, 13-வது பக்கங்களில் எழுதுகிறார்:


بعض علمائے دیوبند کو (اعلیٰ حضرت مولانا احمد رضا) خان صاحب بریلی یہ فرماتے ہیں کہ رسول اللہ صلی اللہ علیہ وسلم کو خاتم النبیین بمعنی آخر الانبیاء نہیں جانتے
علیہ وسلم) کے علم کے برابر کہتے ہیں۔ شیطان کے علم کو آپ (صلی اللہ علیہ وسلم) کے علم سے زائد کہتے ہیں لہذا وہ کافر ہیں۔ تمام علمائے دیوبند فرماتے ہیں کہ خانصاحب کا یہ حکم
ایسا کہے وہ کافر ہے مرتد ہے ملعون ہے لاؤ ہم بھی تمہارے فتوے پر دستخط کرتے ہیں بلکہ ایسے مرتدوں کو جو کافر نہ کہے وہ خود کافر ہے یہ عقاید بیشک کفریہ عقیدے ہیں
حضرت مولانا احمد رضا) خانصاحب کا یہ فرمانا کہ بعض علمائے دیوبند ایسا اعتقاد رکھتے بلکہ کہتے ہیں یہ غلط ہے افترا ہے بہتان ہے جب ہم ان عقاید کو کفر و ارتداد کہتے ہیں تو ہم
نہ یہ کلمات کفریہ ہم نے کہے نہ ہمارے بزرگوں نے نہ ایسے مضامین خبیثہ ہمارے قلب میں آئے ہم تو ایسے شخص کو جس کا یہ اعتقاد ہو قطعی کافر جانتے ہیں۔

' (ஹளரத்து மௌலானா அஹ்மது ரிளா) கான் சாஹிபு பரேலி அவர்கள், சில தேவுபந்தி உலமாக்களைப் பற்றி, இவர்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இறுதி நபி என்ற அர்த்தங் கொண்டு ' காத்தமுன் னபிய்யீன் ' என்று நம்புகிறார்களில்லை-நாற்கால் மிருகங்களுடைய அறிவை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அறிவுக்குச் சமமானது என்றும், ஷைத்தானுடைய அறிவானது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அறிவைப் பார்க்கிலும் விசாலமானது என்றும் சொல்கிறார்கள்.-ஆகையால், இவர்கள் காபிர்கள் என்று சொல்கிறார்கள். (அஹ்மது ரிளா) கான் சாஹிபின் இந்தத் தீர்ப்பு றொம்பவும் சரியானதே. எவன் அப்படிச் சொல்வானோ அவன் காபிர், முர்தத்து, மல்ஊனாக இருக்கும். கொண்டு வாருங்கள் உங்கள் பத்வாவை, நாங்களும் கையொப்பமிடுகிறோம். மேலும், இம்மாதிரியான முர்தத்துகளை எவன் காபிர் என்று சொல்லவில்லையோ அவன்தானும் காபிராகிவிடுவான். இக் கொள்கை சந்தேகமின்றி குப்ரிய்யத்தான கொள்கைகளேயாகும். ஆனால், (அஃலா ஹளரத்து மௌலானா அஹ்மது ரிளா) கான் சாஹிபு அவர்கள், சில தேவுபந்து உலமாக்கள் இம்மாதிரியான

கொள்கையை உடையவர்கள், இம்மாதிரி சொல்கிறார்கள் என்று சொல்வது தவறாகும். பொய்க் கட்டாகும். படுதூறாகும். நாங்கள் இக்கொள்கைகளை குப்று, ரித்தத்து என்று சொல்லும்போது எப்படி நாங்கள் இம்மாதிரியான கொள்கையை நம்பினவர்களாக ஆவோம்? இந்தக் குப்ரிய்யத்தான கொள்கைகளை நாங்களும் சொல்லவில்லை. எங்களுடைய பெரியார்களும் சொல்லவில்லை. இம்மாதிரியான கெட்ட கருத்து எங்கள் மனதிலும் ஊசாடுவதில்லை. நாங்கள் இம்மாதிரி கொள்கையை உடையவனை கண்டிப்பாக காபிர் என்று கருதுகிறோம்.

தர்பங்கீஜீ பொய் மூடடையை அவிழ்க்கிறார். இருட்டடிப்புச் செய்கிறார். கண்களில் மண்ணைத் தூவ கடும் பிரயத்தனம் செய்கிறார். ஆனாலும் (தக்தீர்) ஆதி கற்பனையில் அவர் பேரில் எழுதப்பட்ட குப்று அவர் மீது ஸவாரி செய்து கொண்டே இருக்கிறது. இன்று வரையிலும் அந்தப் பைசாசம் பிடித்த கிதாபுகள் 'ஹிபுளுள் ஈமான்' 7, 8 வது பக்கம்- 'பறாஹீனே காத்திஆ' 51வது பக்கம்- கொங்கோஹியின் கையொப்ப போட்டோ பத்வா 'தஹ்தீறுன்னாஸ்' 3, 14, 28 வது பக்கங்கள்-'தத்கிறத்துல் கலீல்' 86 வது பக்கம்-'தத்கிறதுர் ரஷிது' இரண்டாம் பாகம் 18 வது பக்கம் ஆகியவற்றில் இந்தக் குப்ரியத்தான கொள்கைகள், சபிக்கப்பட்ட வாசகங்கள், ஆபாசக் கட்டுரைகள் இருக்கவே செய்கின்றன. ஆகவே, தர்பங்கீயின் பத்வா பிரகாரம், அவரது எழுத்துப்படி, எல்லா தேவுபந்திகளின் பத்வாப் பிரகாரம் தானவி, கொங்கோஹி, அம்பேட்டி, நானூத்தவி, காகூறவி இவர்களெல்லாம் காபிர்கள், முர்தத்துகளாவார்கள். மேலும் அவர்களை முஸ்லிம்கள் என்று நம்பிய மௌலவி இல்யாஸும் அவருடைய பார்ட்டிகளும் காபிர்களும், முர்தத்துகளுமாவார்கள். الحجر القاهرة وللهமேற்படி கிதாபு அதே 13வது பக்கம் 21வது வரியில் அவர் மேலும் எழுதுகிறார்:



' (மௌலானா அஹ்மது ரிளா) கான் சாஹிபு அவர்களிடத்தில் சில தேவுபந்தி உலமாக்கள், அவர்களை இவர் நினைப்பது போலவே வாஸ்த்தவத்திலுமிருப்பார்களேயானால், அந்தத் தேவுபந்தி உலமாக்களை காபிர்கள் என்று சொல்வது கான் சாஹிபு பேரில் கடமையாகும். இவர், அவர்களை காபிர்களென்று சொல்லவில்லையானால் இவர்தானும் காபிராகிவிடுவார்.'


والفضل ما شهدت به الاعداء

' விரோதிகளே சாதகமாக சாட்சியம் பகருவது அதி விசேஷமாகும்.'



' தலைக்கு மேலே ஏறி நின்று சொல்வதுதான் சத்தியம்.'

ஆகவே, தர்பங்கயின் பத்வாப்பிரகாரம் தானவி, அம்பேட்டி, கொங்கோஹி, நானூத்தவி, காகூறவி, இல்யாஸ் சாஹிபு எல்லோர்களும் காபிர்கள், முர்தத்துகளென்பது ஸ்தரமாகிறது. இன்னமும், 'அஷத்துல் அதாபு' 14வது பக்கத்தில் வருகிறது




' எவன் காபிரை காபிர் என்று சொல்லவில்லையோ அவன்தானும் காபிராகிவிடுவான். எப்பொழுது தேவுபந்து உலமாக்கள் சொல்கிறார்கள்: எவன் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இறுதி நபி என்ற பொருள்பட காத்தமுல் அன்பியா என்று

நம்பவில்லையோ, எவருக்காயினும் நுபுவ்வத்தின் பதவி கிடைப்பது மார்க்கத்தில் ஆமானதாகுமென்று நம்புகிறானோ, அவன் நிச்சயமாக காபிராகவே இருக்கும்.'

இத் தர்பங்கீ, தேவுபந்தி பத்வாவின் பிரகாரம் நானூத்தவி சாஹிபும், தூக்கத்திலும் விழிப்பிலும் தன்னை நபி, ரஸூல் என்று தன்னுடைய முரீது சொல்லிக் கொண்டிருந்ததை சரிகண்ட தானவி சாஹிபும் காபிர்கள், முர்தத்துகளாவார்கள்.

மேலும், மேற்படி பகக்கம் 7வது வரியில் எழுதுகிறார்:-


علمائے دیوبند فرماتے ہیں کہ جو کوئی رسول اللہ صلی اللہ علیہ وسلم کی تنقیص شان کرے آپ کے علم سے علم شیطان لعین کو زیادہ کہے یا آپ کے علم کے برابر علم صبیان
مجانین پاگلوں و بہائم جانوروں کو کہے وہ کافر ہے مرتد ہے ملعون ہے۔

' தேவுபந்து உலமாக்கள் சொல்கிறார்கள்: எவனொருவன், ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தகுதியைக் குறைவுபடுத்துவானேயானால், அவர்களின் அறிவைப் பார்க்கிலும் ஷைத்தான் லயீனுடைய அறிவை அதிகமென்று சொல்வானேயானால், அல்லது அவர்களுடைய அறிவும், சிறுபிள்ளைகள், பைத்தியக்காரர்கள், பேயன்கள், மிருகங்கள் உடைய அறிவும் சமமானது என்று சொல்வானேயானால் அவன் காபிர், முர்தத்து மல்ஊனாகும்.'

இந்தத் தேவுபந்தி பத்வாப் பிரகாரம் தானவி, அம்பேட்டி, கொங்கோஹி இவர்கள் நிச்சயமாக காபிர்கள், முர்தத்துகள், மல்ஊன்களாவார்கள். மேலும், தர்பங்கீயின் பத்வாப்படி மௌலவி இல்யாஸும் காபிராவார், முர்தத்தாவார், மல்ஊனாவார்.

மேற்படி கிதாபு 16வது பக்கத்தில் எழுதுகிறார்:-


اور جو شخص کسی ضروری دین کا انکار کرے چاہے تاویل کرے یا نہ کرے بہر صورت کافر ہے مرتد ہے پھر جو اسے کافر و مرتد نہ کہے وہ بھی کافر ہے۔

' எவனொருவன் மார்க்கத்தில் பிரபல்யமாக அறியப்பட்டவைகளிலொன்றை மறுதலித்தானேயானால், பின்னர், அதற்கு (தஃவீல்) வலிந்துரை செய்யட்டும்.

செய்யாதிருக்கட்டும். எந்தவிதத்திலும் அவன் காபிர், முர்தத்தாவான். பின்பு எவன் அவனை காபிர் என்று சொல்லவில்லையோ அவன்தானும் காபிராவான் '.

தர்பங்கியீயின் இந்த இறுதி பத்வாவின் படி தானவி, கொங்கோஹி, நானூத்தவி, காகூறவி, மௌலவி இல்யாஸ் எல்லாருமே பூறா, பூறாக் கும்பல்களும் காபிர் முர்தத்துகளாவார்கள்.

மேலும் எவன் அவர்களை காபிர்கள் என்று சொல்லவில்லையோ அவனும் காபிர். والعياذ بالله வல் இயாது பில்லாஹ். அல்லது அந்த வாதி ஆதாரம் காட்டட்டும். இந்த குப்ரிய்யத்தான கொள்கைகளை குப்று என்றும், இந்தக் கொள்கைகளை சொன்னவர்களாகிய கொங்கோஹி, அம்பேட்டி, தானவி, காகூறவி முதலியவர்களை இவர்களின் குப்ரியத்தான கொள்கையின் காரணமாக மௌலவி இல்யாஸ் காபிர்கள், முர்த்தத்துகள் என்று எழுதியிருப்பதாக

காண்பிக்கட்டும். எந்தக் கிதாபில் அப்படி எழுதியிருக்கிறார்.? எந்தப் பக்கத்தில், எந்த வரியில் அந்த வாசகம் இருக்கிறது? மெய்ப்பிக்கட்டும்! எதுவரையிலும் இதற்கு ஆதார அத்தாட்சி மெய்ப்பிக்கப்படவில்லையோ அதுவரையிலும் கட்டாயமாக, அவசியமாக மௌலவி இல்யாஸ் காபிர், முர்தத்தாகும். மேலும், அவருடைய இந்த இயக்கமும், குப்ரிய்யத்தான இயக்கமேயாகும். முஸ்லிமகள் இந்த இயக்கத்தில் சேருவது ஹறாம். ஹறாம். ஹறாம்.

அசல் சங்கதி என்னவென்றால், தேவுபந்தி வஹ்ஹாபிகள் தங்களின் இந்தக் குப்ரிய்யத்தான கொள்கையின் காரணத்தால் எந்த அளவுக்கு (நஸீபு) பேறு கெட்டுப் போனார்களென்றால் அவர்களை வஹ்ஹாபி தேவுபந்தி என்று அழைப்பதுவுங் கூட அவர்களுக்கு வெட்கமாகிறது. ஆகவே, இந்தக் கேவல அவமானத்தைவிட்டுத் தப்பித்துக் கொள்வதற்காகவும், ஏமாந்து கிடக்கும் பாமர ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களைத் தங்கள் வலையில் சிக்க வைப்பதற்காகவும், (ஸுன்னி) ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களுடைய ஈமானை நாசமாக்குவதற்காகவும் வேண்டி, மௌலவி இல்யாஸ், அதே வஹ்ஹாபி தேவுபந்தி இயக்கத்திற்கு தப்லீகு ஜமாஅத் என்ற பெயரை மாற்றி வைத்துக் கொண்டு விஷயத்தை நடத்துகிறார். ஆகவே, பெயர்தான் வேறு. கொள்கையும் வேலையும் நிச்சயமாக, மெய்யாக அதுவேதான. (பழைய கறுப்பனே கறுப்பன்தான்.)

نام ہی کا فرق ہے اور کام سب کا ایک ہے

'பெயர்தான் வித்தியாசம். வேலையோ எல்லாம் ஒன்றுதான்.'

மேலும், இன்றுள்ள சிறிய, பெரிய வஹ்ஹாபி தேவுபந்தி, கபூரி, நத்வி பூறாவாக எல்லோருமே இந்த இல்யாஸி இயக்கத்தில் சேர்ந்துதான் இருக்கிறார்கள். மௌலவி சுலைமான் ஸாஹிபு நத்வி, இவர்தான் தானவிஜீயின் கடைசி கலீபாவாக இருக்கக் கூடும். இவரும் இந்த இயக்கத்தில் முன்னால் நிற்கிறார். ஆம்! நத்வத்துல் உலமாக்காரர்களின் கெட்ட நச்சுக் கொள்கையை ஒருக்கால் ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்கள் மறந்திருப்பீர்களேயாயின் இவ்வளவையாகிலும் கேட்டுக் கொள்ளுங்கள்.

நத்வத்துல் உலமாக்காரர்களின் அஸ்திவாரமான கொள்கையாவது: எவனாவது வாயால் லாஇலாஹ இல்லல்லாஹு என்று சொல்லிவிட்டானேயானால், அவன் குர்ஆனை குறைபாடுள்ளது என்று சொன்னாலும் சரி, அல்லாஹ்வை ஏசினாலும் சரி, ரஸூலை திருடர்களுக்குச் சமம் என்று சொன்னாலும் சரி, கியாமத்தை மறுதலித்தாலுமென்ன, ஏன் மார்க்கத்தில பிரசித்தியுடைய, அறியப்பட்ட கருமங்கள் அத்தனையுமே மறுத்தாலுமென்ன, அவர்களிடத்தில் அவன் பக்கா முஸ்லிமேதான். நரகத்தை விட்டும் விடுதலை பெற்றவனேதான். சுவர்க்கவாதியேதான் என்பதே அவர்கள் முடிவு. ஆகவே தேவுபந்து போதனாத் திட்டத் தொகுப்பாளர், மௌலவி முர்தளா ஹஸன் தர்பங்கீ உடையவும், இன்னும் அவரது சாட்சியப்படி தேவுபந்திக்காரர்கள் எல்லோர்களுடையவும் பத்வாப் பிரகாரம் நத்வது(ல் உலமா)க்காரர்கள் கண்டிப்பாய், நிச்சயமாக காபிர் முர்த்தத்துகளாவார்கள். ஏனென்னறால்,

நத்வத்துக்காரர்கள் மார்க்கத்தில் பிரசித்தியாக அறியப்பட்ட ஒன்றை மறுத்தவனை முஸ்லிம், ஈடேற்றமடைந்தவன் என்று நம்புகிறார்கள். இப்பொழுது, மேலே தேவுபந்திய்யாக்கள் எல்லோர்களும் ஏகோபித்துக் கொடுத்த பத்வாவை எழுதி இருக்கிறோம். அதில் அவர்கள் சொல்வதாவது: 'எவனொருவன் மார்க்கத்தில் பிரசித்தியாக அறியப்பட்ட கருமங்களில் எதையாவது மறுதலிப்பானேயானால் அவன் காபிர், முர்தத்து, மல்வூன். மேலும் அவனை காபிரென்று சொல்லாதவனும் காபிர். எனவே நத்வாக்காரர்களுக்கு தேவுபந்தியாக்களின் ஏகோபித்த பறக்கத்தான (பத்வா) மார்க்கத் தீர்ப்பு உண்டாகுக.

ஆகவே, இவ்விதமான கெட்ட கொள்கையுடையவர்கள், இத்தகைய மோசக் கருத்தை மறைத்து வைத்துக் கொண்டு, ஏமாற்றுப் போர்வையைப் போர்த்திக் கொண்டு, ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களுடைய ஸுன்னத்து ஜமாஅத்து கொள்கைகளைச் சிறுகச் சிறுகப் போக்கச் செய்து, செல்லரித்து, ஹதமாக்கி, அறவே இல்லாமலாக்கி விட வேண்டுமென்பதற்காக வேண்டியே,

வஹ்ஹாபிய்யத்தின் சுய ரூபத்தை மறைத்து தப்லீகு என்ற முகமூடியைப் போட்டு உருவம் மாற்றி அந்தப் பெயருடன் வஹ்ஹாபியத்தின் வேலையைச் செய்து பரப்பி வருகிறார்கள். இது சந்தேகமின்றி, முஹம்மது இபுனு அப்துல் வஹ்ஹாபு தமீமீ நஜ்தியினாலேயே எழுப்பப்பட்டது. உதாரணமாக, அவரின் 'கிதாபுத் தவ்ஹீது' உருதுவில் மொழி பெயர்க்கப்பட்டு விரிவுரை எழுதப்பட்டதும், டில்லி குனூல்பாக் ஜாமியா மில்லியா அச்சகத்தில் அச்சிடப்பட்டதுமான கிதாபின் முகவுரையில் இதுபற்றி விபரித்திருக்கிறார். அந்தக் கிதாபின் 18வது பக்கம்:



' பிது அத்துக்காரர்களோடும், மார்க்கமில்லா ஜனங்களோடும் யுத்தம் செய்யப்பட்டது. ஹலாலை ஹலால் எனவும், ஹறாமை ஹறாம் எனவும் உணராத அந்தப் பெயரளவிலான முஸ்லிம்களுடன் போர் செய்யப்பட்டது. இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் என்னென்ன கஷ்டம், துன்பம், தொல்லைகள் வந்தனவோ அவையத்தனைகளையும் சகித்தோம்.'


அதாவது: இபுனு அப்துல் வஹ்ஹாப் நஜ்தி, வேண்டுமென்றே ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களை அபாண்டமாக, பலவந்தமாக காபிர் முர்தத்து என்று சொல்லி அவர்களைக் கொன்றான். அவர்களோடு போர் தொடுத்தான். அவர்களை வெட்டுவது ஹலால் என முடிவு கட்டினான். இந்த வஹ்ஹாபிகளான, தேவுபந்திகளான இல்யாஸிக் கூட்டங்களுக்கு அம்மாதிரியான வலிமையோ சக்தியோ இல்லை. எனினும், ஸுன்னி முஸ்லிம்களை காபிர், முஷ்ரிக்கு, முர்தத்து என்று மதித்து அவர்களுக்கு கலிமா சொல்லிக் கொடுத்து இப்போதூன் அவர்களை புதிதாக முஸ்லிம்களாக ஆக்கிக் கொள்ளும் செயலைச் செய்கிறார்கள்.

قاتلهم الله انى يوفكون

'அல்லாஹ் அவர்களை நாசமாக்குவானாக! எப்படி பொய்யை இட்டுக் கட்டுகிறார்கள்.' இதே கருத்தின் விபரம் தெளிவாக, மஸ்வூது ஆலிம் நத்வியால் கோர்வை செய்யப்பட்ட 'முஹம்மது இபுனு அப்துல் வஹ்ஹாபு' எனும் நூலில் வருகிறது.

இறுதியாக, இந்த வஹ்ஹாபிகளான தேவுபந்திகளுக்கும், பெயரளவிலான (நாம்கே வாஸ்தே) தப்லீகு பார்ட்டியினருக்கும், வஹ்ஹாபியஸத்தை முதன் முதலாகப் போதித்த இபுனு அப்துல் வஹ்ஹாபோடு தொடர்பு இருக்கவே செய்கிறது. அல்லாஹுத்தஆலா இவர்களுடைய பித்னாவை விட்டும், தீங்குகளை விட்டும் ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களைக் காப்பாற்றுவானாக! ஆமீன்.

ஆம்! ஒரு விஷயம் சொல்லி முடிக்கிறேன். அதாவது: மௌலவி இல்யாஸின் வம்ச பாரம்பரியம் (நஸபு நாமா) வம்சப் பட்டோலையில் வருகிறது:


الیاس بن اسمٰعیل بن غلام حسین بن حکیم کریم بخش بن حکیم غلام محی الدین۔

' இல்யாஸ்-இபுனு-இஸ்மாயில்-இபுனு-குலாம் ஹுஸைன்-இபுனு-ஹகீம் கரீம் பக்ஸ்- இபுனு-குலாம் முஹிய்யத்தீன்

' இல்யாஸ் உடைய பாட்டனாரின் பெயர் குலாம் ஹுஸைன், முப்பாட்டனாருடைய பெயர் குலாம் முஹிய்யத்தீன். இம்மாதிரி பெயருடையவர்கள், தக்வியத்துல் ஈமான், பெஹஷ்தீ ஜேவர் முதலாம் பாகத்தின் பத்வாத் தீர்ப்புப்படி பக்கா முஷ்ரிக்குகள் என்றாகிறது. அதாவது: இஸ்மாயில் திஹ்லவி (அஷ்ரபு அலி) தானவி இருவர்களும் ஏகோபித்துச் சொன்ன பத்வா:'குலாம் ஹுஸைன், குலாம் முஹிய்யதீன் என்ற பெயருடையவர்கள் முஷ்ரிக்குகளாகும். ஒரு முஷ்ரிக்கானவனுக்கும் ஒரு முஸ்லிமான பெண்ணுக்கும் நிகாஹ் செய்வது அறவே கூடாது. செய்தாலும் நிகாஹ் நிறைவேறாது. அப்படியானால், மௌலவி இல்யாஸ் மேற்கண்ட இருவரின் பத்வாப்பிரகாரம் எப்படி பிறந்தவராகிறார்? ஹலாலான பிள்ளையாகவா அல்லது....?

بینواتوجروا

' விபரித்துச் சொல்லுங்கள். கூலி கொடுக்கப்படுவீர்கள் '

இவைகளெல்லாம் வஹ்ஹாபிஸத்தின் துற்குறிதான். ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களின் கடமையாதெனில் இந்தப் பெயரளவிலான தப்லீகு ஜமாஅத்துப் பார்ட்டிகளின் பேரில் அதிருப்தியடைந்து, வெறுத்து அவர்களை விட்டும் நீங்கி அகன்றிருப்பதாகும்.

வல்லாஹு தஆலா வரஸூலிஹி அஃலம். அல்லாஹ்வும், அவனுடைய ரஸூலும் நன்கறிந்தவர்கள்.

**மூன்றாவது விடை:**

இயக்கத்தின் ஸ்தாபகரின் கொள்கை, சொல், செயல்களையே அந்த இயக்கத்தினர் பிரச்சாரம் செய்யும்பொழுது ஸ்தாபகரின் கொள்கையை விட்டும் எப்படி எவராலும் நீங்கி இருக்க முடியும்? கரி வியாபாரம் செய்பவர் இரவு பகலாக அதிலேயே மூழ்கிக் கிடந்து கொண்டு தனது வெள்ளை வஸ்திரங்களை அழுக்கு, கறுமை, கறைபடாது காப்பாற்றிக் கொள்ள எவராலும் சாத்தியப்படுமா? ஆகவே, ஸ்தாபகரின் குப்ரிய்யத்தான கொள்கைகளினால் வெறும் குணம் பெறுவது மட்டுமல்ல. அந்தக் கொள்கையின் நிறத்தையே பெற்று அவர்களின் அக்கொள்கையையே பிரச்சாரம் செய்யவும் ஏற்படும். ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது :

اعتبروا الصاحب بالصاحب

(இனம் இனத்தோடே)

' சிநேகிதனை, சிநேகிதிகளின் கொள்கை மார்க்கத்தைக் கொண்டே விபரம் தெரிந்து கொள்ளுங்கள்.'

மவுலவி இல்யாஸ் என்பவரோ ஸ்தாபகர். குப்ரிய்யத்தான கொள்கையை உடைய மற்றவர்களெல்லாம் இந்த இயக்கத்தின் பிரசாரகர்கள்: நாம்கேவாஸ்த்தே தப்லீக்கு காரர்களின் இந்த ஏமாற்று வேலி ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களைப் பிடித்து இழுப்பதற்கான பொறி, ஏமாற்றுத் தந்திர ஜாலங்களால் பின்னப்பட்ட கடுமையான பயங்கர வலை. 'நாங்கள் கலிமாவைப் படித்துக் கொடுக்கிறோம், தொழும்படி சொல்கிறோம். இவ்வளவுதான். எங்களுக்கு கொள்கைகளைப் பற்றி யாதொரு சம்பந்தமும் இல்லை என்றும் அவர்களில் பெரியவர்களும், சிறியவர்களும் கூட சொல்கிறார்கள். முஸ்லிம் சகோதரர்களே! இது எத்தனை தூரம் உண்மை என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

முதலாவதாக: கலிமா சொல்லிக் கொடுப்பதன் கருத்தாவது: அல்லாஹ் வணக்கத்திற்குரியவன், இணை இல்லாதவன் என்று விண்ணப்பம் செய்யச் சொல்வதும், பொய்யான நாயன்களெல்லாம் வணக்கத்திற்குரியன அல்ல என்று மறுதலிக்கச் செய்வதும், மேலும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நபித்துவத்தையும், தூதுத்துவத்தையும் ஒப்புக் கொள்ளச் செய்வதும் பொய்யாக நபித்துவத்தை தாவாப் பண்ணியவர்களான முஸைலமதுல் கத்தாபு, மிர்ஸா குலாம் காதியானி, கொங்கோஹி, தானவி, பாபுல்லாஹ் முதலியவர்களை விட்டும் விலக்குவதுமாகும். ஆகவே, இவர்கள் எங்களுக்கு கொள்கைகளைப் பற்றி பேச்சில்லை என்று சொல்வது பெருந்தவறாகும். சுத்தப் பொய்யாகும். பொய்யர்களின் பேரில் அல்லாஹ்வின் சாபம் உண்டாகுக.

فلعنت الله على الكاذبين




www.sufimanzil.org


இரண்டாவதாக: கொள்கையைப் பற்றி பேச்சு இல்லை என்றால் பின்னர் எதற்காக கலிமாச் சொல்லிக் கொடுக்கிறார்கள். கலிமாவைச் சொல்லிக் கொடுப்பதற்கு என்ன காரணம்? இவர்கள் இப்படி கலிமாச் சொல்லிக் கொடுப்பதுவே இவர்கள் பொய்யர்கள் என்பதற்கு பகிரங்கமானதோர் அத்தாட்சியாகும். குர்ஆன் ஷரீபு முன்னமேயே அவர்களின் பெரியோர்களின் விஷயத்தில் சொல்லி முடிந்தது.

'நிச்சயமாக நயவஞ்சகர்கள் பொய்யர்கள் என அல்லாஹ் சாட்சி சொல்கிறான்.'

மூன்றாவதாக: ஸ்தாபகரின் வாக்கு மூலத்தையே கேளுங்கள். ஆறுதிட்டம் என்னும் கிதாபைப் பாருங்கள். அதைத் திருத்திச் சரிபடுத்தியவர் பக்கா வஹ்ஹாபி தேவுபந்தி மன்ளூர் ஹுஸைன் ஸம்பேலி. அதன் 43வது பக்கத்தில்,


تبلیغی کام کرنے والوں کو ہدایت۔

' தப்லீக்கு வேலை செய்பவர்களுக்கு உபதேசம் ' என்று ஒரு தலைப்பு முகவரி இருக்கிறது. அதன் கீழ் வரும் கட்டுரை தப்லீக்கு ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸ் சாஹிபு உடையதேயாகும். அதிலிருந்துள்ளது:


ہماری جماعت کا اصل مقصد ہے کہ مسلمانوں کو حضور صلی اللہ علیہ وسلم کا لایا ہوا دین پورا پورا سکھا دیں یہ تو ہمارا اصل مقصد ہے رہی تحریک [illegible]
تو یہ اس مقصد کے لئے ابتدائی ذریعہ ہے اور کلمہ و نماز کی تلقین گویا ہمارے پورے نصاب کی الف ب ت ہے۔

' நம்முடைய ஜமாஅத்தின் அசல் நோக்கம்: முஸ்லிம்களுக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வந்த மார்க்கம் பூறாவையும் கற்றுக் கொடுப்பதாகும். இதுதான் நம்முடைய அசல் நோக்கம். இனி, கூட்டமாகப் போவதும் திரிவதும் அந்த நோக்கத்திற்கு ஆரம்ப வழியாகும். கலிமா, தொழுகையை சொல்லிக் கொடுப்பதானது நம்முடைய பூரண திட்டத்திற்கு அலிபுபே- தே யைப் போன்றதாகும்.'

ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம் சோதரீர்! உஷார், எச்சரிக்கை! எது பகைவநன கட்டக்கூடிய கயறு என நினைக்கிறீர்களோ அது கொடிய நஞ்சையுடைய கருநாகமாகும். அதிசீக்கிரமாக அதை விட்டகன்றோடுங்கள். எவ்வாறாயினும் அவர்கள் உங்களை வழி கெடுத்து விடக் கூடாது. எங்காகிலும் உங்களை பித்னாவிலாக்கி விடக்கூடாது. அவர்கள் கலிமா சொல்லிக் கொடுப்பதை பாராதீர்கள். அவர்களின் வழுவழுத்த பசப்பு வார்த்தைகளை கேளாதீர்கள். அப்படியில்லையாயின், இப்போது அவர்கள் உங்களை அலிபு-பே-தேயில் (பாலர் பாடத்தில்) போட்டிருக்கிறார்கள். Û வரையும் செல்லச் செல்ல உங்களை கைரு கள்-அதாவது அல்லாஹ், ரஸூல் உடைய கைறுகள் மோசக்காரர்களான வஹ்ஹாபி தேவுபந்திகளோடு சேர்த்துவிடுவார்கள்.

பாருங்கள், பாருங்கள்! அவர்களின் கொள்கையின் தரத்தை அவர்களின் குரு தெளிவாகச் சொல்லி விட்டார்,

دین پورا پورا سکھا دینا ہمارا اصل مقصد ہے

' மார்க்கம் பூறா கற்றுக் கொடுப்பது நம்முடைய அசல் நோக்கம் ' என்று. மார்க்கத்தை (தீனை) கற்றுக் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டு அந்த தேவுபந்து வஹ்ஹாபியப் பிசாசுகள் உண்டாக்கிய (மார்க்க முரணான) வைகளைத்தான் இவர்கள் கற்றுக் கொடுப்பார்கள். அவற்றில் ஒரு சில, இரண்டாவது விடையில் கூறப்பட்டுள்ளன. ஆனால், நீங்கள் பயப்படாதிருப்பீர்களேயானால், இல்யாஸ் சாஹிபு தனது நாவால் சொல்வதிலிருந்தும், இன்னும் தானவி ஸாஹிபுவின் பொதுக்காரியதரிசியின் சாட்சியம் பகருவதிலிருந்தும் கேளுங்கள். 'பூறா பூறா கற்றுக் கொடுப்பதன் அசல் நோக்கம் என்னவென்று' இதோ பாருங்கள்:

முஹம்மது மன்ளூர் ஹஸன் ஸம்பேலியால் தொகுக்கப்பட்டு, லக்னோ நாமி பிரஸ்ஸில் அச்சிடப்பட்ட 'ஹளரத்து மவுலானா இல்யாஸின் மல்பூளாது' எனும் நூலின் 47வது பக்கத்தில் வருகிறது:

ایک بار فرمایا حضرت مولانا تھانوی نے بہت بڑا کام کیا ہے بس میرا دل یہ چاہتا ہے کہ تعلیم تو ان کی ہو اور طریقہ تبلیغ میرا ہو اس طرح ان کی تعلیم عام ہو جائے گی۔

' ஒரு சமயம் (இல்யாஸ்) சொன்னார்கள்: ஹளரத்து மௌலானா தானவி றொம்பவும் பெரிய வேலை செய்திருக்கிறார்கள். ஆகவே என் மனம் விரும்புகிறது, போதனை அவர்களுடையதாகவும், தப்லீகின் முறை என்னுடையதாகவும் இருக்க வேண்டும், இவ்விதம் அவர்கள் போதனை (எங்கும்) பொதுவாக (பிரஸ்தாபம்) ஆகவேண்டும், என்று'

அன்பிற்குரிய முஸ்லிம்களே, பாருங்கள்! பாருங்கள்! அலிபு-பே-தேக்குப் பின்னால் அந்தத் தேவுபந்தி வஹ்ஹாபியத்தையே தான் கற்பிக்கப்படும். இங்கு இல்யாஸ் சாஹிபு தன் மனதிலுள்ளதைத் திறந்து சொல்லிவிட்டார். அவரின் மனதில் இதே நாட்டம், இதே அபிலாசை, இதே கருத்து, இதே தேட்டம்தான் இருந்தது. அதாவது ஸுன்னி முஸ்லிம்களை இப்படி குபாடமாக தேவுபந்திகளாகவும், வஹ்ஹாபிகளாகவும் ஆக்கிவிட வேண்டும் என்பதுதான். இந்த எல்லா ஏமாற்று வேலைகளின் கருத்தும் இதுவேயாகும்.

ولاحول ولاقوة الا بالله العلی العظیم

இதோ இந்த திருமறையை படியுங்கள்,

واذا خلوا عضوا علیکم الانامل من الغیظ قل موتوا بغیظکم

'அவர்கள் (உங்கள் சமூகத்தை விட்டும் வெளியாகி) தனித்துப் போவார்களேயானால், உங்கள் பேரில் எரிச்சல் கொண்டு அவர்கள் (தங்களது) விரல்களைக் கடித்துக் கொள்வார்கள். (நபியே! அவர்களுக்குச் ) சொல்லுங்கள். உங்கள் எரிச்சலைக் கொண்டே நீங்கள் செத்து மடியுங்கள்.'

மேற்படி நூல் மேற்படி பக்கத்தில் மேலும் வருகிறது:

ایک بار فرمایا حضرت مولانا تھانوی کے لوگوں کی مجھے بہت قدر ہے کیونکہ وہ قریب العہد ہیں ۔

' ஒரு சமயம் (இல்யாஸ்) சொன்னார்கள், ஹளரத்து மௌலானா தானவியுடைய ஜனங்களுக்கு என்னிடம் ரொம்பவும் மதிப்பிருக்கிறது. ஏனென்றால், அவர்கள் (தானவி) அவர்களின் சகவாசத்திலிருந்து புதிதாக வந்தவர்கள்.'

மேற்குறிப்பிட்ட நூலின் 57-வது பக்கத்தில் வருகிறது:

چند روز پہلے حکیم الامت حضرت تھانوی کا وصال ہوا تھا حضرت ممدوح سے تعلق بیعت رکھنے والے ایک صاحب زیارت کیلئے تشریف لائے راقم سطور نے ان کا [illegible]
اس پر حضرت نے فرمایا جن حضرات کا حلقہ محبت و تعلق اتنا وسیع ہو جتنا ہمارے حضرت تھانوی کا تھا چاہئے ان کی تعزیت عامہ کی فکر کی جائے [illegible]
ہے کہ اس وقت حضرت کے تمام تعلق رکھنے والوں کی تعزیت کی جائے اور خاص طور سے یہ مضمون آج کل پھیلایا جائے کہ حضرت تھانوی سے تعلق [illegible]
کی برکات سے استفادہ کرنے اور ساتھ ہی حضرت کے ترقی درجات کی کوششوں میں حصہ لینے اور حضرت کی روح کی مسرتوں کو بڑھانے کا سب سے [illegible]
یہ ہے کہ حضرت کی تعلیمات حقہ اور ہدایات پر استقامت کی جائے اور ان کو زیادہ سے زیادہ پھیلانے کی کوشش کی جائے ۔

' சிறிது காலத்திற்கு முன்பு ஹகீமுல் உம்மத், ஹளரத் தானவி வபாத்தாகிவிட்டார்கள். அவர்களிடம் பைஅத்துச் செய்த ஒருவர் (மௌலானா இல்யாஸ் அவர்களை) சந்திப்பதற்காக வந்தார். இதன் தொகுப்பாசிரியரான நான் அவரை (ஹளரத் இல்யாஸுக்கு) அறிமுகப்படுத்தினேன். அதன்பேரில் ஹளரத்து (இல்யாஸ்) அவர்கள் சொன்னார்கள்: எந்தப் பெரியார்களுடன் பாசமும், தொடர்பும் வைத்தக் குழுக்கள் நமது ஹளரத்து தானவி அவர்களுடன் தொடர்பு வைத்த குழுக்களைப் போல் அதிகமாக இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் பொதுவாக த.:ஸியா செய்வது (மரணம் பற்றி சமாதானப்படுத்துவது)பற்றி அவசியம் கவனிக்க வேண்டும். என் மனம் விரும்புகிறது. இதுசமயம் ஹளரத்து அவர்களுடன் தொடர்பு வைத்தவர்கள் அனைவர்களுக்கும் பொதுவாக த.:ஸியா செய்ய வேண்டும். மேலும், குறிப்பாக இப்பொழுது ஹளரத்து அவர்களுடன் (மக்களுக்கு) தொடர்பை வளர்க்கக் கூடியதும், அவர்களுடைய பரக்கத்தைக் கொண்டு பிரயோசனம் பெறுவதை அதிகப்படுத்தக் கூடியதுமான கட்டுரைகளை எங்கும் பரப்ப வேண்டும். அத்தோடு, ஹளரத்து அவர்களுடைய பதவியில் அபிவிருத்தியடைவதற்கான முயற்சிகளிலும் பங்குபற்ற வேண்டும். அவர்களின் ஆன்மாவிற்கு சந்தோஷத்தை அதிகப்படுத்துவதற்கு எல்லா வழிகளையும் விட உயர்வானதும், உறுதியானதுமான வழியாகிறது, ஹளரத்து அவர்களின் மெய்யான போதனைகளின் பேரில் ஸ்திரமாக இருக்கச் செய்ய வேண்டும். மேலும், அப்போதனைகளை மிகமிக அதிகமாக பரவச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.'

இன்னமும் அதே, மல்பூளாத்து என்னும் நூலில் 114வது பக்கத்தில் வருகிறது:

فرمایا حضرت گنگوہی اس دور کے قطب ارشاد اور مجدد تھے ۔

'ஹளரத்து (றஷீது அஹ்மது)கொங்கோஹி இக் காலத்தில் நேர்வழி காட்டும் குத்பாகவும், முஜத்திதாகவும் இருக்கிறார்கள் என்று (இல்யாஸ்) அவர்கள் சொன்னார்கள்.'

முஸ்லீம்களே! கொங்கோஹியின் குப்ரிய்யத்தான கொள்கையை வியக்தமாக மேலே பார்த்திருக்கிறீர்கள். அதாவது: கொங்கோஹிஜீ, அல்லாஹ் இப்பொழுது பொய் சொல்லி விட்டான் என்பதாக நம்புகிறார். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை லஃனத்து செய்யப்பட்ட இபுலீஸை விடவும் மட்டமான அறிவுடையவர்கள் எனவும் நம்புகிறார் தன்னைப் பின்பற்றியவர்கள் மாத்திரம் சுவர்க்கவாதிகள் எனவும், மற்றவர்களெல்லாம் நரகவாதிகள் எனவும் நம்புகிறார்.

இன்னும் இவைபோன்ற மற்றும் பல்வேறு கொள்கைகளையும் வைத்திருக்கிறார். இம்மாதிரி குப்ரிய்யத்தான கொள்கைகளை உடையவரை எவர் நேர்வழி காட்டும் குத்பு எனவும், முஜத்திது எனவும் ஒப்புக் கொண்டிருக்கிறாரோ அவர் அதே குப்ரிய்யத்தான கொள்கைகளைத்தானே பிரச்சாரம் செய்வார். அந்த குப்ரிய்யத்தான கொள்கைகளைத்தானே கற்றுக் கொடுத்து அவர்களை காபிர்களாக ஆக்குவார். معاذالله رب العٰلمين

இவர், ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பரிசுத்த ஜீவிய சரித்திரம் என்ற பெயரை வைத்து அந்த சரித்திரத்தைத்தான் சொல்லிக் காட்டுவார். அதிலிருந்து ஒரு வாசகத்தை நீங்கள் மேலே பார்த்திருக்கிறீர்கள். இப்பொழுது, மற்றொன்றையும் படித்துப் பாருங்கள். இதோ! வஹ்ஹாபிய்யாக்களின் பிரச்சாரகர் அப்துஷ் ஷகூர் காகூறவியால் எழுதப்பட்டதும், லக்னோ உம்ததுல் மதாபிவு எலக்டிரிக் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டதுமான முக்த்தஸறே ஸீரத்தே நபவிய்யா (நபிகள் நாயகத்தின் ஜீவிய சரித்திர சுருக்கம்) எனும் நூலில் 22து பக்கத்தில் வருகிறது:

لیکن باوجود ان محاسن عقلیہ کے محاسن شرعیہ سے آپ بالکل بے خبر تھے محاسن شرعیہ کی اصل اصول یعنی ایمان باللہ کی حقیقت بھی آپ نہ جانتے تھے ۔
اللہ تعالیٰ ووجدک ضالا فھدیٰ اور پایا اس پروردگار نے آپکو راہ سے بے خبر پس ہدایت کی اس نے آپکو

'ஆனாலும், அக்லிய்யத்தான அந்த அழகிய குணங்களெல்லாம் இருப்பதோடு ஷறஇய்யத்தான அழகிய குணங்களை (ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒன்றுமே அறியாதவர்களாக இருந்தார்கள். ஷறஇய்யான அழகிய குணங்களின் அஸ்திவாரத்திற்கும் அஸ்திவாரத்தையும் அதாவது அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதன் அந்தரங்கத்தையும் கூட (நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)அவர்கள் அறிய மாட்டார்கள். அல்லாஹ் திருவுளமாகி இருக்கிறான், அவன் (அல்லாஹ்) உம்மை வழி தவறியவராக தெரிந்து அவன் உம்மை நேர்வழி காட்டினான்.'

இந்த அருவறுப்பான, ஆபாசமான, (முஃமினின் இரத்தங் கொதிக்கும்) வாசகத்திற்கு விரிவான மறுப்புரை இத்தமியேனின், பரக்கத்துப் பெற்ற 'பற்க குதாவந்தி'- 'அல்லாஹ்வின் இடி' என்னும் நூலில் பாருங்கள். அந்நூல் மௌலவி யூனுஸ் பகீறவி, அப்துற்றஹீம் கோசக், காக்கூறுவி முதலியவர்களின் உளறல்களுக்கு ஆணித்தரமான வாயாப்பு மறுப்பாக எழுதப்பட்டது. இவ்விடத்தில் இவ்வளவு மட்டும் தெரிந்து கொள்ளுங்கள். அதாவது 'திருநபி சரித்திரம்' என்று பெயர் வைத்து நூல் எழுதி இம்மாதிரியாக ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நிந்தனை செய்து தூஷிக்கப்படுகிறது. அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதையும் அறியாதவர்கள், தெரியாதவர்கள் மெய்யான பாதையை உணராதவர்கள் என்றெல்லாம் வழிகெட்ட காகூறவி, சர்வ சிருஷ்டிகளிலும் மேம்பட்ட அறிவுடைய ஹளரத்து ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி இப்படியாக எழுதியிருக்கிறார். இம்மாதிரியான கெட்ட, வழிகேடுடைய கொள்கைகளைத்தான் குப்ரியத்துக்களைத்தான் வஹ்ஹாபிய்யா தேவுபந்தியாக்கள் இந்தப் பெயரளவிலான தப்லீகு ஜமாஅத்து என்ற பெயரை வைத்துக் கொண்டு பிரச்சாரம் செய்வார்கள். இதுவேதான் இல்யாஸி ஜமாஅத்தின் அதிபருடையவும் ஒவ்வொரு வஹ்ஹாபி தேவுபந்தியாக்களுடையவும் அசல் நோக்கம்.

நான்காவதாக: கலிமா, தொழுகையைப் படித்துக் கொடுப்பதும் பிரச்சாரம் செய்து அதை நிறைவேற்றுவதும் இதன்பேரில்தான் ஈடேற்றம் தரிபட்டிருக்கிறது. வேறு எந்தக் கொள்கைகளைப் பற்றியும் பிரச்சனையில்லை என்றிருந்தால் மிர்ஸாயிகள், பாபியூன்கள், பஹாயியூன்கள், தபற்றாயி, றாபிளியாக்கள், நேச்சரியாக்கள், சகடாலவியாக்கள் முதலிய இவர்களுடைய தொழுகைகளைப் பற்றி தேவுபந்து உலமாக்கள் என்ன சொல்கிறார்கள்? இவர்களுடைய தொழுகை அல்லாஹ்விடத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது இல்லையா? ஷரீஅத்தின் ஆதாரத்தோடு விபரித்துக் கூறுங்கள்.

ஆகவே, இயக்க ஸ்தாபகரின் கொள்கையின் பூரண குணபாடு அவருடைய இயக்க (ஜமாஅ)த்தில் குணம் செய்யும், அவசியம்-அவசியம் குணம் செய்யும். வெளிரங்கமான மேக்கப், டிப்டாப், வேஷப் பகட்டு, மினுக்குகளைப் பற்றி கொஞ்சமும் கவனிக்கப்படாது என்கிலும், அசலையும் அந்தரங்கத்தையும் கவனிக்கப்படும். உதாரணமாக, இப்படி வைத்துப் பாருங்கள். ஒரு பள்ளிவாசலை மிகவும் உயரமாகவும், அற்புத அழகுடனும் கட்டப்பட்டது. அதில் வகைவகையான கண்கவர் விரிப்புகளாலும், மற்றும் தளவாடப் பொருள்களாலும் அலங்கிர்தம் செய்யப்பட்டது. பள்ளிக்கு வரக்கூடியவர்கள் எல்லோரும் அழகிய ஆடைகளை அணிந்து கொண்டுதான் வந்தார்கள். ஆனாலும் இமாம் ஒரு பாபி, பஹாயி, றாபிளி அல்லது மிர்ஸாயி, காதியானியாக இருப்பாரேயானால் இந்த அழகு வடிவு அலங்கிர்தம் ஆகியவைகளைக் கொஞ்சமும் கவனிக்கவே படாது. பரிசுத்த ஷரீஅத்தின் கட்டளை பிறக்கும். இந்த இமாமைத் துயர்வதும், இந்த ஜமாஅத்தில் சேர்வதும் ஹறாம்-ஹறாம்-ஹறாம். ஆகாது-ஆகாது-ஆகாது. இதே நிலைமைதான் இல்யாஸி பார்ட்டியுடையதும், குருடனை மாலுமியாகவும், கபோதியை கப்பித்தானனாகவும் கொண்ட கப்பலும், மரக்கலமும் கருதிய துறைமுகத்தை எப்படிப் போய் அடையும்?

வலுப்பம் நிறைந்த குர்ஆன் ஷரீபு போதிக்கிறது:

واما ينسينك الشيطن فلا تقعد بعد الذكرى مع القوم الظالمين

'உம்மை ஷைத்தான் மறதியிலாக்குவாரேயானால் ஞாபகம் வந்தபின்னர் அநியாயக்காரர்களான கூட்டங்களோடு உட்கார வேண்டாம் '

மேலும், போதிக்கிறது:

'உங்களில் எவரேனும் அவர்களை (தனக்கு) காரியஸ்தர்களாக ஆக்குவானாகில் அவனும் அவர்களோடு சேர்ந்தவனேயாவான்.'

يا ايها الذين امنوا لا تتخذوا اباءكم واخوانكم اولياء ان استحبوا الكفر على الايمان ومن يتولهم منكم فاولئك هم الظلمون ○

' ஈமான் கொண்டவர்களே! உங்கள் தகப்பன்மார்களும், சகோதரர்களும் ஈமானைப் பார்க்கிலும் குப்ரை நேசிப்பார்களேயானால் அவர்களை(உங்களுக்கு) காரியஸ்தர்களாக ஆக்காதீர்கள். உங்களில் எவர்கள் அவர்களை காரியஸ்தர்களாக ஆக்குவார்களோ அவர்களே அநியாயக்காரர்கள்.'

يا ايها الذين امنوا لا تتخذوا الذين اتخذوا دينكم هزوا ولعبا من الذين اوتوا الكتٰب من قبلكم والكفار اولياء واتقوا الله ان كنتم مؤمنين.

' ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கு முன் வேதம் கொடுக்கப்பட்டவர்களிலிருந்து உங்கள் மார்க்கத்தை கேலி விளையாட்டுக் கூத்தாக்கினவர்களையும், காபிரீன்களையும், காரியஸ்தர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் ஈமான் கொண்டவர்களாயின் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்.'

அல்லாஹ்வின் இக்கட்டளைகளும், குர்ஆன் போதனைகளும் கெட்ட கொள்கைக்காரர்களை, கெட்ட நம்பிக்கையுடையவர்களை விட்டும் தூரப்பட்டு அகன்றிருக்கவும், அவர்களின் சகவாசத்தை விட்டு விலகி இருக்கவுமே வந்திருக்கிறது. எப்பொழுது அவர்களின் சகவாசத்தை விட்டுங்கூட தூரமாகியிருக்க வேண்டும் என்று தெளிவாக குர்ஆனில் கட்டளை வந்துவிட்டதோ, அதற்கப்பாலும் நன்கு தெரிந்திருந்தும் கெட்ட (அகீதா) கொள்கை, தவறான மார்க்க நெறி உடையவர்களை தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் ஆக்கிக் கொள்வதானது, சிநேகிதத் தொடர்பு வைப்பதை விடவும் எத்தனையோ மடங்கு கடுமையாக இருக்கத்தக்க அது எப்படி ஜாயிஸ் (ஆமானதாக) ஆகும்? எவ்வாறு அனுமதிக்கப்படும்?

ஹதீது ஷரீபில் வந்துள்ளன:

قال النبي صلى الله عليه وسلم اياك وقرين السؤ فانك به تعرف .(ابن عساكر)

'கெட்ட (கொள்கையுடைய)வர்களின் சிநேகத்தை விட்டகன்றிரு.'

المرء مع من احبّ

' மனிதன் (உலகில்) யாருடன் நேசம் பூண்டிருந்தானோ அவருடனேயே (ஆகிரத்திலும்) இருப்பான்.'

ஆகவே, முஸ்லிம்கள் பெயரளவில் தப்லீகு ஜமாஅத்து என்ற பெயரைத் தாங்கியுள்ள இல்யாஸித் தப்லீகு ஜமாஅத்தில் ஒருபோதும்-ஒருபோதும் சேரவே கூடாது. சேரவே கூடாது. அல்லாஹுத்தஆலா அந்தக் கெட்ட கொள்கைக்காரக் கூட்டத்தை விட்டும் நம்மைத் தூரப்படுத்தி ஸலாமாத்தாக்கி வைப்பானாக. ஆமீன்.

آمين فآمين ثم آمين والله ورسوله اعلم

**நான்காவது விடை:**

எந்தக் கூட்டத்தார், தங்களை முஸ்லிம்களென்பதாக வாதாடிக் கொண்டு எல்லா நபிமார்களிலும் முற்ஸலீன்களிலும் சிரேஷ்டரான எம்பெருமானார் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஷைத்தானை விடவும் அறிவில் குறைந்தவர்கள். மேலும், அவர்கள் அறிவில் பைத்தியக்காரர்களுக்கும், மிருகங்களுக்கும் சமமானவர்கள்-தேவுபந்து மவுலவிமார்களிடத்தில் அவர்கள் உருது பாஷை கற்ற மாணவர், தங்கள் மவுலவிகளுக்கு சமையல் வேலை செய்யும் சமையல்காரர் என்று இவ்வாறெல்லாம் உணர்ந்திருக்கிறார்கள் அந்தக் கூட்டத்தார். மேலும் ஹளரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மூத்த சகோதரனைப் போன்றவர்கள்-செம்மானை விடவும் தாழ்வானவர்கள்- மரணித்து மண்ணோடு மண்ணாகிப் போனவர்கள் எனவும், அவர்களுக்குப் பின்பு கோடிக்கணக்கான எண்ணிறந்த நபிமார்கள் வருவது ஆகும்தான், வரக்கூடும்தான் எனவும், சங்கையான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நாற்பது வயது வரையிலும் ஈமான் இன்னது, தீன் இன்னது என்றும் தெரியாது, அத்துடன் அவர்கள் குண விசேஷங்களையும் இன்னதென அறவே தெரியாத மடையர் எனவும், அவர்கள் ஒரு சாமானிய மனிதரேதான் எனவும் அறிந்து அவ்வாறே நம்பி எழுதுகிறார்களோ அக்கூட்டத்தார்-அதெப்பெடியெனில், முஹம்மது காசிம் நானூத்தவியால் எழுதப்பட்டதும் தேபுபந்து காஸிமி பிரஸில் அச்சிடப்பட்டதுமான 'தஹ்தீருன்னாஸ்' என்ற நூலில் 6முதல் 8வது பக்கம் வரையில் வருகிறது:

انبیاء اپنی امت سے اگر ممتاز ہوتے ہیں تو علوم ہی میں ممتاز ہوتے ہیں باقی رہا عمل تو اس میں بسا اوقات بظاہر امتی مساوی ہو جاتے بلکہ بڑھ جاتے ہیں

' நபிமார்கள் தங்கள் உம்மத்துக்களை விடவும் பிரத்தியேகமாக மேம்பாடுடையவர்கள் என்றால் கல்வியிலேயேதான் பிரத்தியேகமானவர்கள்.

அமலிலோ அநேக வேளைகளில் உம்மத்துக்கள் (நபிமார்களுக்கு) சமமாகவும், மேம்பட்டவர்களாகவும் ஆவார்கள்.'

இவ்வாறெல்லாம் குப்ரிய்யத்தான கொள்கைகளைக் கொண்டவர்களாக இருக்கின்றார்களோ அந்த கூட்டத்தார், தங்களுடைய வேலைகளை ஸஹாபாக்களுடைய வேலை என்று மாத்திரமா சொல்வார்கள்! இல்லை!

நபிமார்களுடைய வேலை என்றுதான் சொன்னபோதிலும் அதில் என்ன ஆச்சரியம்! இவர்களோ தங்களின் முன்னோர்களுடைய வார்த்தைகளை விடவும் றொம்பவும் குறைவான வார்த்தைகளைத்தான் சொல்கிறார்கள். ஆனாலும், இதற்கு(தங்களுடைய வேலை ஸஹாபாக்களின் ஸுன்னத்து என்பதற்கு)ஆதாரம் காட்ட தப்லீகு பார்ட்டியில் எவராலுமே முடியாது. இந்த இயக்கம் திரைமறைவுக்குள் வஹ்ஹாபிஸம், தேவுபந்திஸம், கபூரிஸம், நத்விஸம், காரிஜம் முதலியவற்றைத்தான் பிரசாரம் செய்கிறது. சங்கை மிகுந்த நபிமார்களுடைய சமூகத்தின் பேரிலும், கண்ணியம் நிறைந்த ஸஹாபாக்களுடைய சமூகத்தின் பேரிலும் பொய்யையும், வீண் படுதூறையுமே இட்டுக்கட்டுகிறார்கள்.


ஸஹாபாக்கள் ரலியல்லாஹு அன்ஹும் காபிர்களுக்கு கலிமா தையிபாவைச் சொல்லிக் கொடுத்தார்கள். ஒரு ஸஹாபியாவது வேறே எந்த ஒரு ஸஹாபிக்காவது கலிமாவைப் படித்துக் கொடுக்கவில்லை. எந்த ஒரு ஒரு ரிவாயத்தைக் கொண்டாவது எந்த வஹ்ஹாபியோ, இல்யாஸியோ, ஹளரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹளரத்து உமர் பாரூக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு கலிமா படித்துக் கொடுத்தார்கள்-ஹளரத் உமர் பாரூக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹளரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு கலிமா படித்துக் கொடுத்தார்கள் என்று ஆதாரம் காட்ட ஒருபோதும் முடியாது. அகவே, இல்யாஸி தேவுபந்திகள் பொய்யர்கள் என்பது தெளிவாகிவிட்டது.

மெய்தான்! சங்கையான நபிமார்களும், முற்ஸலீன்களும் على نبيّنا وعليهم الصلاة والسلام(எங்கள் நபிநாயகம் அவர்கள் மீதிலும், மற்றும் நபிமார்கள் மீதிலும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக) அவர்களின் ஊழியர்களும், அடிமைகளும், அடிமைகளின் அடிமைகளும் இம்மாதிரியான குப்ரிய்யத்தான இயக்கத்தை மறுத்திருக்கிறார்கள்.

எனவே, வாஸ்தவத்தில் இம்மாதிரியான இயக்கத்தை கண்டனம் செய்வதுதான் நபிமார்களுடைய சுன்னத்தும், ஸஹாபாக்களுடைய சுன்னத்தும், நேர்வழிக்குரிய இமாம்களுடைய சுன்னத்துமாகும். பரிசுத்தத் திருமேனி நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய திருவசனங்களை நன்கு பார்த்திருக்கிறவர்களுக்கு உண்மை நன்கு தெளிவாக தெரியவரும்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஈமானுக்கு என்ன பொருள் சொன்னார்கள்? ஸஹாபாக்களுக்கு (ரலியல்லாஹு அன்ஹும்) மார்க்கப் பிரச்சாரம் செய்வதற்கு எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்ன கற்றுக் கொடுத்தார்கள்? எதைப் பிரச்சாரம் செய்யச் சொன்னார்கள்? யாவராலும் அறியப்பட்ட பிரஸ்தாபமிக்க இந்த ஹதீதை, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வினால் அகில உலகின் ஆட்சியையும் கொடுக்கப்பட்ட எம்பிரான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பறக்கத்தான, அருள் நிறைந்த சமூகத்தில் வந்து கேட்ட விஷயங்களைப் பொதிந்த இந்த ஹதீதைப் பாருங்கள்.

ஸெய்யிதுனா உமருபுனு கத்தாபு ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டுள்ள இந்த ஹதீது ஸஹீஹு முஸ்லிமில் வந்துள்ளது:-


قال اخبرني عن الاسلام قال ان تشهد ان لا اله الا الله وان محمدا رسول الله وتقيم الصلاة وتؤتي
الزكوة وتصوم رمضان وتحج البيت ان استطعت اليه سبيلا قال صدقت فعجبنا له يسأله ويصدقه
قال اخبرني عن الايمان قال ان تؤمن بالله وملائكته وكتبه ورسله واليوم الآخر وتؤمن بالقدر خيره
وشره - رواه مسلم عن سيدنا عمر بن الخطاب وابي هريرة رضي الله عنهما -

'(எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சமூகத்திற்கு ஓர் மனிதர் வந்து) 'எனக்கு இஸ்லாமைப் பற்றிச் சொல்லிக் காட்டுங்கள் எனக் கேட்டார். இஸ்லாமாகிறது லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி என்று நீர் விண்ணப்பம் செய்வதுவும் தொழுகையை நிலை நிறுத்தாட்டுவதுவும், ஸக்காத்தை கொடுப்பதுவும், றமளானில் நோன்பு நோற்பதுவும், பைத்துல்லாஹ்வை ஹஜ்ஜு செய்வதற்கு உமக்கு சக்தி, இயல்பு இருக்குமாயின் ஹஜ்ஜு செய்வதுமாகும் என்று எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உரைத்தார்கள். உண்மையே நவின்றீர் என்றார் அம் மனிதர். இது என்ன வினாவும் கேட்டுக் கொண்டார், உண்மையே நவின்றீர் என்று சரியும் கண்டுக் கொண்டார் என்று அவரைப் பற்றி நாங்கள் புதுமைப்பட்டோம். ஈமானைப் பற்றி எனக்குச் சொல்லிக் காட்டுங்கள் என்று மேலும் அம்மனிதர் கேட்டார். ஈமானாகிறது அல்லாஹ்வைக் கொண்டு நம்பிக்கை கொள்வதும், அவனுடைய மலக்குகளைக் கொண்டு நம்பிக்கை கொள்வதும், அவனுடைய வேதங்களைக் கொண்டு நம்பிக்கை கொள்வதும், அவனுடைய ரஸூல்மார்களைக் கொண்டு நம்பிக்கை கொள்வதும், இறுதித் தீர்ப்பு நாளைக் கொண்டு நம்பிக்கை கொள்வதும், நன்மை தீமை அல்லாஹ்வின் கற்பனையிலுள்ளது என்பதைக் கொண்டு நம்பிக்கை கொள்வதுவுமாகும் என்று எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உரைத்தார்கள்.'

فقال هذا جبريل عليه السلام جاء يعلم الناس دينهم

(அம்மனிதர் போனபிறகு எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்: இதோ (மனித உருவில் வந்த இவர் ஜிபுரீல். மனிதர்களுக்கு அவர்களுடைய சன்மார்க்கத்தைச் சொல்லிக் கொடுப்பதற்காக வந்து போனார்- ஸஹீஹுல் புகாரி.)

இமாம்களிடம் ஈமான், இஸ்லாம் இரண்டும் ஒன்றேதான். ஆகவே, ஒவ்வொரு முஃமின் முஸ்லிமும் மார்க்கத்தில் பிரசித்தமாக அறியப்பட்ட எல்லாக் கருமங்களையும் ஒப்புக் கொள்வது அவசியமாகும். எனவே, எவனொருவன் மார்க்கத்தில் பிரசித்தமாக அறியப்பட்ட எந்த ஒரு விஷயத்தையாவது மறுதலித்தானேயானால் மறுதலித்த அந்தவொரு விஷயத்தின் காரணத்திற்காக அவன் முர்தத்து காபிராகி விடுவான்.

அன்வர் ஷாஹ் கஷ்மீர் அவர்களின் இக்பாருல் முல்ஹிதீன் என்னும் கிதாபையும், முஹம்மது ஷபீவு தேவுபந்தி அவர்களின் கத்மநுபுவ்வத் என்னும் நூலையும் பாருங்கள்! மேலும், தர்பங்கீயின் அஷத்துல் அதாபு எனும் நூலின் 16வது பக்கத்தில் உள்ள பின்வரும் வாசகத்தையும் படித்துப் பாருங்கள்!

' எந்த மனிதனாவது, மார்க்கத்தில் பிரசித்தமாக அறியப்பட்ட கருமத்தில் எதையாவது மறுதலிப்பானேயானால் அவன் அதற்கு வலிந்துரை (தஃவீல்) செய்யட்டும் அல்லது செய்யாதிருக்கட்டும். எந்த விதத்திலும் அவன் காபிர் முர்தத் ஆவான். பின்னர், எவனொருவன் இவனை காபிர் முர்தத்து என்று சொல்லவில்லையோ அவனும் காபிராவான்.'

இம்மூன்று (கிதாபின்) வாசகத்தையும் எந்த தேவுபந்தியும், எந்த தப்லீகுகாரரும் ஒரு போதும் மறுதளிக்கவே முடியாது. எல்லாப் புகழும் றப்புல் ஆலமீனாகிய அல்லாஹ்வுனக்கே உரியன.

மேலும் இவ்விஷயமே யதார்த்தமாகும். அதாவது, சங்கையான ஹதீது ஷரீபுகளுக்கு விபரமும், விரிவுரையும் அதன் வெளிரங்க சுருக்கு மொழிகளுக்கு விரிவான விபரமும் கூறி தெளிவுபடுத்துவதை சங்கையான இமாம்களே செய்வார்கள். எப்படியெனில், ஸப்யானுபுனு அப்துல்லாஹ் துகபீ ரலியல்லாஹு அன்ஹு (அவர்களின் இந்த ஹதீது முஸ்லிம் ஷரீபில் வருகிறது) அவர்கள் சொல்கிறார்கள்: 'நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தர்பாரில் நான் ஆஜராகிக் கேட்டேன்,

قل لی فی الاسلام قولا لا اسأله عن احد ابعدك قال قل آمنت بالله ثم استقم.

'நாயகம் அவர்களே! எனக்கு இஸ்லாமில் (அதனை நான் அமல் செய்தால் ஒளிப்பிரகாசமும், ஈடேற்றமும் எனக்கு கிடைக்குமே அத்தகைய, மேலும்) உங்களுக்குப் பின்பு வேறெவரிடமும் நான் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படாதே அத்தகைய ஒரு விஷயத்தை எனக்கு சொல்லித் தாருங்கள்' என்று. நீவிர், அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொண்டேன் என்று சொல்லி அதிலேயே ஸ்திரமாக இரும் என்று எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரைத்தார்கள்.'

இவ்விடத்தில் ஆமந்துபில்லாஹி (அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொண்டேன்) என்பதை முஸ்லிம் ஆவதற்கு அடையாளமாக வைக்கப்பட்டிருக்கிறது. எது போலெனில், இன்னுமொரு ஹதீதில், 'அல்ஹம்துலில்லாஹ் என்பது எல்லா வியாதிக்கும் சௌக்கியமாகும்' என்பதில் அல்ஹம்துலில்லாஹ் என்று மட்டும் வந்திருப்பதைப் போல், ஏனெனில், இங்கு அல்ஹம்துலில்லாஹ் என்ற வசனம் மாத்திரம் கருத்தல்ல, ஸூரத்துல் பாத்திஹா பூறாவுமே தான் கருத்தாகும். எனவே, ஆமந்துபில்லாஹி அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொண்டேன் என்று சொல் என்பதன் கருத்து ஈமான் கொள்ள வேண்டிய விஷயங்கள் அத்தனையைக் கொண்டும், மார்க்கத்தில் பிரஸ்தாபமாக அறியப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றைக் கொண்டும் ஈமான் கொள்ள வேண்டும் என்பதுவேயாகும். மிஷ்காத்து ஷரீபு கிரந்தத்தில், ஆமந்துபில்லாஹி என்ற திருவசனத்திற்குக் கீழாக, اى بجميع ما يجب به الايمان 'ஈமான் கொள்வதற்குக் கடமையான அத்தனை விஷயங்களைக் கொண்டும் ஈமான் கொண்டேன்' என்று விளக்கம் கொடுத்து எழுதி இருக்கிறார்கள். அதாவது: ஆமந்துபில்லாஹி அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொண்டேன் என்று சொல் என ஹதீது ஷரீபில் வந்துள்ளதைக் கொண்டு கருத்து: அல்லாஹ்வைக் கொண்டு மாத்திரம் ஈமான் கொண்டேன் என்று சொல் என்ற கருத்தல்ல, என்னென்ன விஷயங்களைக் கொண்டெல்லாம் ஈமான் கொள்ள வேண்டியது அவசியமோ அவை அத்தனையைக் கொண்டும் ஈமான் கொண்டேன் என்று சொல்வதுதான் கருத்தாகும். அப்டியல்லவாயின், தர்பங்கீஜீ சொல்வது போல, முனாபிக்கீன்களையும், மிர்ஸாயிகளளையும் கூட முஸ்லிம்கள் என்று சொல்வீர்களா?

குர்ஆன் ஷரீபில் இடத்திற்கு இடம் இந்த மஸ்அலாவைத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அது போன்ற ஒரு ஆயத்து முன்னமேயே கூறப்பட்டு விட்டது. மற்றும் சில ஆயத்துக்களை கவனியுங்கள்:

يا ايها الذين اٰمنوا امنوا بالله و رسوله والكتٰب الذي نزّل علىٰ رسوله والكتٰب الذي انزل من قبل ؕ ومن يكفر بالله

وملٰئكته وكتبه و رسله واليوم الاٰخر فقد ضل ضلالا بعيدا.

' ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வைக் கொண்டும், அவனது ரஸூலைக் கொண்டும், அவனது ரஸூலின் மீது அவன் இறக்கி வைத்துள்ள வேதத்தைக்

கொண்டும், முன்னர் அவன் இறக்கி வைத்துள்ள வேதத்தைக் கொண்டும் ஈமான் கொள்ளுங்கள். எவன் அல்லாஹ்வைக் கொண்டும், அவனது மலக்குகளைக் கொண்டும், அவனது வேதங்களைக் கொண்டும், அவனது ரஸூல்மார்களைக் கொண்டும், இறுதிநாளைக் கொண்டும் ஈமான் கொள்ளவில்லையோ நிச்சயமாக அவன் தூரமான வழிகேடாக வழிகெட்டுவிட்டான்.'

தன்னை முஸ்லிம் என்று வாதாடும் யாராவது இவைகளில் எதையாவது மறுதலிப்யானேயானால் ஷரஇன் தீர்ப்புப்படி அவன் காபிர், முர்த்தத்தாகி விடுவான்.

எதுவரையிலுமென்றால் கலிமா சொல்லி, தொழுது முத்தகீயாக இருக்கக் கூடிய ஒருவன் எல்லாவற்றையும் கொண்டு ஈமான் கொண்டான், நம்பிக்கை கொண்டான்.

எல்லா மலாயிகத்துகளையும் ஒப்புக் கொண்டான். ஆனால், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அல்லது மீக்காயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மாத்திரம் மறுதலித்தான், அவர்களோடு பகைமை கொண்டான் என்று வைத்துக் கொள்வோம்.

அப்படியானால், குர்ஆன் ஷரீபின் தீர்ப்புப்படி அவனும் காபிரும், முர்த்தத்துமாகி விடுகிறான். இதோ, திருமறை குர்ஆன் வசனம் போதிக்கிறது:

من كان عدوا الله وملئكته ورسله وجبريل وميكل فان الله عدو للكفرين.

'எவனொருவன் அல்லாஹ்வுக்கும், அவனுடைய மலாயிகதுகளுக்கும், அவனுடைய ரஸூல்களுக்கும், ஜிபுரயீல்களுக்கும், மீக்காயீலுக்கும் பகைவனாக இருக்கிறானோ (அத்தகைய) காபிரீன்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் பகைவனாக இருக்கிறான்.'

அதாவது, ஹளரத்து ஜிபுரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மட்டும் அல்லது ஹளரத் மீகாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மட்டும் மறுதலிப்பதானது, அல்லாஹுத் தஆலாவை மறுதலிப்பதைக் கொண்டு குப்றாவதைப் போன்று இதுவும் குப்றாகும். கலிமா சொன்னவன் அல்லாஹ்வை மறுதலித்தால் எப்படி முர்தத்தாகி விடுவானோ அப்படியே ஹளரத்து ஜிபுரயீல், ஹளரத் மீகாயீல் அலைஹிமுஸ்ஸலாம் அவர்களை மறுதலிப்பவனும் முர்த்தத்தாகி விடுவான். கொங்கோஹி, 'அல்லாஹ் பொய்யன்' என்று எழுதியதனால் முர்த்தத்தாகி போனது போல. ஆகவே, குப்ரிய்யத்தான கொள்கைகளை வைத்துக் கொண்டு, கலிமா தையிபாவின் இரு பாகங்கள் (லாஇலாஹ இல்லல்லாஹு, முஹம்மது ரஸூலுல்லாஹி) உடனும் சொல்லப்பட்ட, குப்ரிய்யத்தான கொள்கைகளை சரிகண்டு, ஒப்புக் கொண்டு நம்பிக்கை கொண்டு வெறும் கலிமாவை படித்துக் கொடுப்பதையும், தொழுகையைக் கற்றுக் கொடுப்பதையும் இந்த இல்யாஸிப் பார்ட்டிகள், சங்கையான நபிமார்களுடைய ஸுன்னத்து என்று சொல்வதானது வெட்ட வெளிச்சமான பொய்யாகவும், குப்றாகவும் இருக்கும்.

فلعنت الله على الكاذبين

'பொய்யர்களின் பேரில் அல்லாஹ்வின் சாபம் உண்டாகக் கடவது.'

குர்ஆன் ஷரீபில் மேலும் வந்துள்ளது:

' எல்லோர்களும் அல்லாஹ்வைக் கொண்டும், அவனுடைய மலாயிக்கத்துகளைக் கொண்டும், அவனுடைய வேதங்களைக் கெணண்டும், அவனுடைய ரஸூல்களைக் கொண்டும் ஈமான் கொண்டார்கள்.'

சங்கையான ஸஹாபாக்கள் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்தார்கள் என்றால் அவர்கள் மார்க்கத்தில் பிரஸ்தாபமாக அறியப்பட்ட எல்லா சங்கதிகளைக் கொண்டும்தான் பிரசாரம் செய்தார்கள். மேலும் முஸ்லிமல்லாதார்களிடத்தில் இஸ்லாமைப் பற்றி பிரசாரம் செய்து அவர்களை முஸ்லிம்களாக ஆக்கினர்கள்.

சங்கையான அந்த ஸஹாபாக்கள் கலிமாவையும், தொழுகையையும் படித்துக் கொடுப்பதுடனே தீனுல் இஸ்லாமுடைய அவசியமான, பிரதானமான கொள்கைகளையும் படித்துக் கொடுத்தார்கள். அவர்கள் எங்களுக்கு கொள்கையைப் பற்றிய பிரச்சனையே இல்லை என்று சொல்லி, தங்களது முந்தாணியை இழுத்துக் கொள்ளவில்லையே, ஏன்? அவர்கள் சத்திய சீலர்கள், உண்மையையே பிரச்சாரம் செய்தார்கள். இந்த வஹ்ஹாபி இல்யாஸி ஜனங்களோ முழுக்க முழுக்கப் பொய்யர்கள். பொய்யின் சிகரத்தை எட்டிப் பிடித்த பொய்யர்கள். தங்கள் நாயனையும் கூட பொய்யன் என்று எழுதி தீர்த்து விட்டார்கள்.

காழி அத்ஹர் அவர்களின் சொற்பிரகாரம், அந்த கொங்கோஹி, அம்பேட்டி, தானவி, நானூத்தவிகளாகிய செட்டிமார்(பனியாக்)கள், வஹ்ஹாபியத்தென்ற தராசில் தேவுபந்தியாக்களுக்கு (அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்) அல்லாஹ்வை எடைபோட்டு காட்டிவிட்டார்கள். அதாவது அல்லாஹ் பொய் சொல்வது நியாயந்தான்-அல்லாஹ் பொய் சொல்ல முடியவில்லை என்றால் அவனுடைய சக்தி, பொய் சொல்லக் கூடிய அவனுடைய அடியார்களின் சக்தியை விடவும் குறைவானது என்றல்லவா ஆகிவிடும?- மேலும் ஒவ்வொரு குறைபாடுகளிலும் தேவுபந்து வஹ்ஹாபிகளின் கற்பனைக் கடவுளின் சக்தியை அந்த தேவுபந்து வஹ்ஹாபியச் சாத்தான்கள் இப்படியே எடைபோட்டு எழுதி கிறுக்கித் தள்ளிவிட்டார்கள். அதாவது: தேவுபந்திகளின் கடவுள், கள் குடிக்கவில்லையானால் குடிகாரர்களை விடவும் குறைந்தவனாகி விடுகிறான்.-திருடவில்லை என்றால் திருடர்களை விடவும் குறைந்தவனாகி விடுகிறான்-சூதாடவில்லை என்றால் சூதாடிகளை விடவும் குறைந்தவனாகி விடுகிறான். இப்படியே மற்றவைகளிலும் அல்லாஹ்வைப் பற்றி அவதூறு படுத்தி இருக்கிறார்கள்.

وماقدرواللهحق قدره

'அவர்கள் அல்லாஹ்வை அவனது தகுதிப்படி மதிப்பிடவில்லை.'

பாருங்கள்! தத்கிறதுல் கலீல்-ஜஹ்து முகில்-எக்றோஸி எனும் நூல்களை இமாம் றப்பானீ, முஜத்திது அல்பதானீ, ஹளரத்து ஷெய்கு அஹ்மது ஸர்ஹிந்தி (குத்திஸஸிர்ருஹுன்னூறானீ) அவர்கள் தங்களது 'மக்தூபாத்து' மூன்றாவது பாகம் 38-வது பக்கத்தில் சொல்லுகிறார்கள்:




' இந்த பிதுஅத்துக்காரர்கள் அஹ்ல கிபுலாக்கள்தான். இவர்களை காபிர்கள் என்று சொல்வதில் துணிச்சல் கூடாது. இவர்கள் மார்க்கத்தில் பிரஸ்தாபமாக அறியப்பட்டவைகளில்

யாதாவதொன்றை மறுதலிக்கிறவரையிலும், அப்படி மறுதலித்தார்களேயானால், இவர்கள் கண்டிப்பாக காபிர் முர்த்தத்துகளேயாவார்கள்.'

ஹளரத்து முஜத்திது ஸாஹிபு அவர்களின் வாசகத்தில் அஹ்ல கிபுலா எனும் பதம் வந்திருப்பதனால் அஹ்ல கிபுலா என்று யாருக்கு சொல்வது? கலிமா சொல்லி இஸ்லாமைத் தாவாச் செய்பவர்களை எதுவரையிலும் அஹ்ல கிபுலா என்று சொல்லலாம்? என்பன பற்றி தேவுபந்தி போதனா முறை தொகுப்பாளர், தானவி சாஹிபு தானே தேர்ந்தெடுத்த அவரது பொதுக் காரியதரிசி, மௌலவி முர்த்தளா ஹஸன் தர்பங்கியிடத்தில் கேட்டுத் தெரியலாமா? இதோ, பாருங்கள்.

புதுடில்லி, முஜ்த்தபா பிரஸ்ஸில் அச்சிடப்பட்ட, அவரது 'அஷத்துல் அதாபு' என்னும் நூலில் 9வது பக்கத்தில் கூறப்பட்டுள்ளது:-



' பேணுதலாகிறது மார்க்கத்தில் பிரஸ்தாபமாக அறியப்பட்ட கருமங்களை மறுதலித்தவனை காபிர் என்று சொல்வதுதான். ஏன்? முனாபிக்குகள் தவ்ஹீதைக் கொண்டும், நுபுவ்வத்தைக் கொண்டும் விண்ணப்பம் செய்யவில்லையா? ஐந்து வேளையும் கிபுலாவை நோக்கித் தொழவில்லையா? முஸைலமத்துல் கத்தாபும், மற்றும் நுபுவ்வத்தை வாதாடியவர்களும் அஹ்ல கிபுலாக்களாக இல்லையா? இவர்களையும் முஸ்லிம்கள் என்றா சொல்வீர்கள்? அஹ்ல கிபுலா என்பது யார் என்றால், மார்க்கத்தில் பிரசித்தமாக அறியப்பட்ட கருமங்கள் அத்தனையும் ஒப்புக் கொள்கிறவன்தான். அப்படியல்லவானால், பின்னர், தயானந்த சரஸ்வதியும், ஷர்த்தானந்தஜீயும் என்ன தவறு செய்தார்கள்? உங்களிடத்தில் இஸ்லாம் இந்த அளவுக்கு மலிவாகவும், விரிவாகவும் இருக்குமென்றிருந்தால் மற்ற காபிரீன்கள் விஷயத்தில் ஏன் உலோபத்தனம்? (எல்லோரையுமே முஸ்லிம்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்! இந்த இஸ்லாம் நீங்கள் உண்டாக்கிக் கொண்ட உங்களின் மேல் வேஷமேயாகும். (யதார்த்தமான இஸ்லாம் அல்ல.)'

கருத்தாவது: தங்களை முஸ்லிம் என்று வாதாடும் அஹ்ல கிபுலாக்காரர்கள் எப்பொழுது (ழுறூறிய்யாத்தே தீனிய்யாவான) மார்க்கத்தில் பிரசித்தமான இன்றியமையாத விஷயங்களில் ஒன்றை மறுதலி;த்தானேயானால், அவனை முர்த்தத்து காபிர் என்றுதான் சொல்லப்படும். இதுவே பேணுதலாகும்.

ஆகவே, ஹளரத்து ஷெய்கு முஜத்திது அல்பதானி குத்திஸ ஸிர்ருஹுஸ் ஸுபுஹானி) அவர்களின் பத்வா, இன்னமும் தர்பங்கீஜீயின் பத்வாக்களின் பிரகாரம் தானவி, கொங்கோஹி, அம்பேட்டி, நானூத்தவி, காகூறவி ஆகியவர்களையும் இன்னமும் மௌலவி இல்யாஸையும் இவர்களெல்லாம் மார்க்கத்தில் பிரசித்தமாக அறியப்பட்ட இன்றியமையாத கருமங்களை

மறுதலித்ததனால் முர்த்தத்து காபிர்கள் என்று சொல்வதுவும், இவர்களை அஹ்ல கிபுலாவை விட்டும் அப்புறப்படுத்துவதும் அவசியமாகும். இதுதான் ஸலாமத்தும், பேணுதலுமாகும். வல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

மேலும், இதே ஹளரத்து முஜத்திது அல்பதானி பாறூகி ஸர்ஹந்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தங்களின் மக்தூபாத்து, முதல் பாகம், 323- வது பக்கம், 266-வது லிகிதத்தில் எழுதி இருக்கிறார்கள்:

مجرد تفوہ بکلمہ شہادت در اسلام کافی نیست تصدیق جمیع ما علم مجیئہ من الدین ضرورۃ باید و تبری از کفر و کافری نیز درکار است تا اسلام صورت بندد و دونہ خرط القتاد

'வாயினால் கலிமா ஷஹாதத்தை மொழிவது மட்டும் மனிதன் முஸ்லிமாவதற்குப் போதுமானதாகாது. மார்க்கத்தில் பிரசித்தமாக அறியப்பட்டவைகள் அனைத்தையும் கொண்டு உண்மை கொள்வது அவசியமாகும். மேலும், குப்றை விட்டும், காபிராகி போவதை விட்டும் நீங்கி இருப்பதுவும் அவசியமாகும். அப்பொழுதுதான் அவன் முஸ்லிமாக ஆவான். இதல்லாமல் இருட்டில் விறகு பொறுக்கிய கதையாம் ' கருத்தாவது ஒருபோதும் முஸ்லிமாக முடியாது.

வஹ்ஹாபி தேவுபந்தி இல்யாஸிக் கூட்டத்தினர் இவ்வாசகத்தை நன்றாக முத்தி முகரட்டும். கண்களில் ஒத்திக் கொள்ளட்டும். ஹளரத் முஜத்திது ஸாஹிபு (குத்திஸஸிர்ருஹு) அவர்கள், இந்தப் பதினான்காம் நூற்றாண்டின் பொய்யர்களான இந்தத் தப்லீக்குப் பார்ட்டிகளுக்காகவென்றே தான் இந்த லிகிதத்தை எழுதி இருக்கிறார்கள் போலும்.

இல்யாஸ் ஸாஹிபுவோ அவரின் கூட்டத்தார்களோ இந்த வழிகெட்ட தப்லீகு வேலையை நபிமார்களுடைய வேலை என்று ஏன் சொல்ல மாட்டார்கள்? மிர்ஜா காதியானியைப் போன்று இல்யாஸ் ஸாஹிபுக்குங் கூட நபித்துவத்தின் நட்பாசைக் கனவுகள் வந்து கொண்டுதானிருந்தன. இன்னும் கொஞ்சம் மேலே போய் நபித்துவத்தின் தாவா(ஒளிவு மறைவில்லாது) தெளிவாகவும் வந்து விடக்கூடும்.

எப்படியெனில், பாருங்கள்! தானவியின் காரியதரிசி மன்ளூர் ஹுஸைன் ஸம்பேலியால் தொகுக்கப்பட்ட இல்யாஸின் மல்பூளாத்து என்னும் நூலில் 40-வது பக்கத்தில் வருகிறது:

ایک بار فرمایا کہ خواب نبوت کا چھیالیسواں حصہ ہے بعض لوگوں کو خواب میں ایسی ترقی ہوتی ہے کہ ریاضت و مجاہدے سے نہیں ہوتی کیونکہ ان کو خواب میں علوم صحیحہ القا ہوتے ہیں جو نبوت کا حصہ ہے پھر ترقی کیوں نہ ہوگی پھر فرمایا آج کل خواب میں مجھ پر علوم صحیحہ کا القا ہوتا ہے اس لئے کوشش کروں کہ مجھے نیند زیادہ آئے

آپ نے فرمایا کہ اس تبلیغ کا طریقہ بھی مجھ پر خواب میں منکشف ہوا اللہ تعالی کا ارشاد كنتم خير امة اخرجت للناس تامرون بالمعروف وتنهون عن المنكر وتؤمنون بالله کی تفسیر خواب میں یہ القا ہوئی کہ تم مثل انبیاء علیہم السلام کے لوگوں کے واسطے ظاہر کئے گئے ہو۔

' ஒரு சமயம் (மௌலவி இல்யாஸ்) சொன்னார்கள், கனவு நுபுவ்வத்திலிருந்து நாற்பத்தாறு பங்கில் ஒரு பங்காகும். சில ஜனங்களுக்கு ரியாளத்து, முஜாஹதா(ஜப, தப வழிபாடு)

முதலியவைகளினாலும் கூட உண்டாகாத அவ்வளவு உயர் பதவி கனவில் அவர்களுக்கு கிடைக்கிறது. ஏனென்றால், கனவில் அவர்கள் மனதில் நுபுவ்வத்தின் பாகத்திலுள்ளதாகிய சுத்தமான அறிவுகளைப் போடப்படுகிறது. பின்னர் ஏன் அவர்களுக்கு பதவி ஏற்றம் உண்டாகாது? பின்பு (மௌலவி இல்யாஸ் அவர்கள்) சொன்னார்கள், இக்காலத்தில் எனக்கு கனவில் பரிசுத்தமான அறிவுகளை கொடுக்கப்படுகிறது. இதனாலேயே, எனக்கு தூக்கம் அதிகம் வரவேண்டுமென்று பிரயாசை செய்கிறேன்,' பின்னும் 'அவர்கள் சொன்னார்கள்: இந்தத் தப்லீகு முறையுங்கூட எனக்கு கனவிலேயே வெளியாயிற்று. அல்லாஹ்வின் திரு வசனமாகிய

كنتم خير امة اخرجت للناس تأمرون بالمعروف وتنهون عن المنكر وتؤمنون بالله

என்ற வாக்கியத்தின் வியாக்கியானமும் கனவில் பின்வருமாறு அறிவிக்கப்பட்டது. அதாவது நீங்கள் நபிமார்களைப் போன்றவர்கள். ஜனங்களுக்காக வெளியாக்கப்பட்டிருக்கிறீர்கள், என்று சொன்னார்கள்.


பாருங்கள்! பாருங்கள்! பயந்து பயந்து நபிமார்களைப் போல், நபிமார்களுக்கொப்பானவர் என்று தாவா செய்கிறார். இதற்குப் பின்பு நல்ல தெளிவாக திறந்து நபித்துவ தாவா வெளிவந்து விடும். மிர்ஜா காதியானியும் மெதுமெதுவாகத்தான் உயர்ந்து கொண்டு போனார். தானவி ஸாஹிபும் கூட 'லாஇலாஹ இல்லல்லாஹு அஷ்றபு அலி ரஸூலுல்லாஹி' எனவும், 'அல்லாஹும்ம ஸல்லி அலா ஸெய்யிதினா வ நபிய்யினா வ மவ்லானா அஷ்றபு அலி' எனவும் நல்ல ஞாபகத்தோடு பகல் பூறாவாகச் சொல்லிக் கொண்டிருந்தவனையும் ஒன்றும் தட்டி விலக்கவில்லை. மாறாக, தன்னை ரஸூல் எனவும், நபி எனவும் குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டே இருந்த அவனை அப்படியே சொல்லும்படியாக விட்டு வைத்தார். மேலும், அப்படிச் சொல்வதைத் தான் மார்க்கத்தைப் பின்பற்றியதற்கு ஆதாரம் எனவும் ஸ்தாபிக்கிறார்.

ولاحول ولا قوة الا بالله العلی العظم

முஸ்லிம்கள் அனைவரும் இந்த இல்யாஸி பார்ட்டிகளை விட்டும் கண்டிப்பாக விலகி தூரப்பட்டிருக்க வேண்டும். அவர்களை விட்டும் விலகி இருப்பதில்தான் ஈடேற்றம் இருக்கிறது. இல்யாஸ் ஆங்கிலேயர்களின் கைப்பொம்மை, வெள்ளைக்காரர்களின் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் கூலி அடிமை. பிரிட்டிஷ்காரர்களின் சம்பளத்திலிருக்கும் ஏஜண்டு. ஆங்கிலேய கவர்ன்மெண்டில் தனக்கு மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களைத் திருப்தி செய்வதற்காக இந்த கலிமா டீமை, தப்பலி பார்ட்டியை உண்டு பண்ணினார். இந்த இரகசிய அந்தரங்கத்தை ஹிபுளுர் ரஹ்மான் ஸுயூஹாரி தேவுபந்து மத்ரஸாவுக்குள்ளாலேயே தேவுபந்தி பெரியார்களின் முன்னிலையில் அம்பலப்படுத்தி திறந்துவிட்டார்.

தேவுபந்திகளே! முகாலமதுஸ் ஸத்றைன் (தலைவர்களின் பேச்சு) எனும் நூலைப் பாருங்கள். தய்யிபு தேவுபந்தியின் சகோதரர் தாஹிர் அஹ்மது காஸிமீயால் அந்நூல் தயாரிக்கப்பட்டு, ஷப்பீர் அஹ்மது தேவுபந்தியிடம் காட்டப்பட்டு அவரால் கொஞ்சம் கூடுதல் குறைவு

செய்யப்பட்டு, தேவுபந்து கமால் பிரிண்டிங் திஹ்லி பிரஸ்ஸில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அதில் 8வது பக்கத்தில் வருகிறது:



مولانا حفظ الرحمن (سیوہاروی) صاحب نے کہا کہ مولانا الیاس رحمۃ اللہ علیہ کی تبلیغی تحریک کو ابتداء حکومت کی جانب سے بذریعہ حاجی رشید احمد صاحب کچھ روپیہ ملتا تھا پھر بند ہو گیا

'மௌலானா ஹிபுளுர் ரஹ்மான் (ஸுயூஹாறவி) ஸாஹிபு சொன்னார்கள்,' மௌலானா இல்யாஸ் உடைய தப்லீகு ஜமாஅத்திற்கு ஆரம்பத்தில் ஹாஜீ ரஷிது அஹ்மது ஸாஹிபு மாறலாக அரசாங்கத்திலிருந்து கொஞ்சம் பணம் கிடைத்துக் கொண்டிருந்தது. பின்னால் நின்று விட்டது.'

பஜார் திறந்தபின்பு அரசாங்கத்தினர் வேறொருவர் மாறலாக மாதச் சம்பளத்தை கொடுத்து வர தொடங்கி விட்டார்கள் போலும். எப்படியானாலும் இல்யாஸி வஹ்ஹாபி தப்லீகு இயக்கம் இங்கிலீஷ்காரர்களின் இயக்கமேயாகும். அதாவது அந்த இயக்கத்தின் மாறலாக முஸ்லிம்களை மார்க்கத்தை விட்டும் வழி தவறியவர்களாகவும் வஹ்ஹாபி தேவுபந்திகளாகவும் ஆக்கவேயாகும்.

இதுவல்லவென்றால், எந்த வஹ்ஹாபியாவது சொல்லட்டும் கலிமாவை பிரசாரம் செய்வதனால் பிரிட்டிஷாருக்கு வேறென்ன அபிலாசைதான் இருந்திருக்கக் கூடும். ஆகவே இல்யாஸ் வெள்ளையரின் கையாயுதம், அடிமை, நம்பிக்கையான உஷாரான ஏஜண்டு என்பது ஸ்தாபிதமாகி விட்டது.

இதுவும் ஞாபகத்திலிருக்கட்டும். அதாவது: நஜ்தி வஹ்ஹாபிகளுடனும், நஜ்தி அரசாங்கத்துடனும் இல்யாஸுக்கு தொடர்பு இருக்கிறது. பாருங்கள்! மௌலவி இல்யாஸின் 'தீனி த:்வத்து' எனும் நூலில் 100 வது பக்கத்தில் வருகிறது:


ہفتہ کے بعد ۱۴ مارچ ۱۹۳۸ء کو مولانا حاجی عبداللہ دہلوی عبدالرحمن مظہر شیخ المطوفین اور مولوی احتشام الحسن کی معیت میں سلطان (ابن سعود نجدی وہابی) کی ملاقات کو تشریف لے گئے جلالۃ الملک نے بہت اعزاز کے ساتھ مسند سے اتر کر استقبال کیا اور اپنے قریب ہی معزز ہندی مہمانوں کو بٹھایا ان حضرات نے تبلیغ کا معروضہ پیش کیا جس پر سلطان (نجدی وہابی) نے تقریباً چالیس منٹ تک توحید و کتاب و سنت اور اتباع شریعت پر مبسوط تقریر کی اس کے بعد بہت اعزاز کے ساتھ مسند سے اتر کر رخصت کیا۔

مولوی احتشام الحسن صاحب نے مقاصد تبلیغ کو اختصار کے ساتھ نوٹ کر کے شیخ الاسلام رئیس القضاۃ عبداللہ بن حسن کے یہاں پیش کیا مولانا (الیاس) اور مولوی احتشام صاحب ان کے یہاں خود بھی گئے انہوں نے بہت اعزاز و اکرام کیا اور مہمات کی خوب تائید کی اور زبانی ہمدردی و اعانت کا وعدہ کیا۔


' இரண்டு வாரங்களுக்கு பின்பு 1938 மார்ச் மாசம் பதினான்காம் திகதி மௌலானா ஹாஜி அப்துல்லாஹ் திஹ்லவி அவர்கள், ஷெய்குல் முதவ்விபீன் அப்துற்ரஹ்மான் மள்ஹர், மௌலவி இஹ்த்திஷாமுல் ஹஸன் முதலிய இவர்களோடு ஸுல்தானை (இபுனு ஸுஊது நஜ்தி வஹ்ஹாபியை) சந்திப்பதற்காகச் சென்றார்கள். (இபுனு ஸுஊது) அரசர் மெத்தவும் சங்கை செய்து ஆசனத்தை விட்டு இறங்கி எதிர் கொண்டழைத்து சங்கையான இந்திய விருந்தாளிகளை தன் பக்கத்தில் அமரும்படி செய்தார். அவர்கள் தப்லீகின் நோக்கத்தை எடுத்துக் காட்டிhனார்கள். அதன்பேரில், அரசர் (நஜ்தி வஹ்ஹாபி) ஏறக்குறைய நாற்பது நிமிஷ நேரம் வரையிலும் தவ்ஹீது, கித்தாபு ஸுன்னத்து பற்றியும், ஷரீஅத்தைப் பின்பற்றுதல்

சம்பந்தமாகவும் விரிவானதோர் பிரசங்கம் செய்தார். பின்னர் ஆசனத்தை விட்டிறங்கி மிகவும் சங்கை படுத்தி பயணம் அனுப்பி வைத்தார்.' பின்னால் அந்த நூலில் மேலும் எழுதியிருப்பதாவது:-' மௌலவி இஹ்த்திஷாமுல் ஹஸன் ஸாஹிபு அவர்கள் தப்லீக்கின் நோக்கங்களை சுருக்கமாக குறித்து, ஷெய்குல் இஸ்லாம், றயீஸுல் குளாத்து, அப்துல்லாஹிபுனு ஹஸன் அவர்களிடத்தில் கொடுத்தார்கள். மௌலானா இல்யாஸும், மௌலவி இஹ்த்திஷாம் ஸாஹிபும்(மேற்படியார்) அவர்களிடம் நேரில் சென்றார்கள். அன்னார் இவர்களுக்கு றொம்பவும் சங்கை மரியாதைகள் செய்தார். ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் மிகவும் ஆதரவு காட்டி ஊக்குவித்தார். மேலும், பூரணமாக வாயுபகாரமும், பொருள் உபகாரமும் செய்வதாகவும் வாக்களித்தார்.'

இந்த இரு வாசகங்களினாலும், இல்யாஸ் வஹ்ஹாபி நஜ்திகளுடைய கொள்கைக்காரர் என்றும், அவருடைய இயக்கம் வஹ்ஹாபி நஜ்திகளுடைய இயக்கம் எனினும், இந்த இல்யாஸி இயக்கத்திற்கு நஜ்தி அரசாங்கத்திலிருந்து எல்லா வகையான உதவியும் ஒத்தாசையும் கிடைக்கிறது என்றும் தெரிய வருகிறது. والعياذبالله அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.

இப்பொழுது தானவி ஸாஹிபின் வரலாற்றையும் கொஞ்சம் கேளுங்கள்:

'முகாலமதுஸ்ஸதுறைன்'-(தலைவர்களின் பேச்சு) எனும் நூலில், ஹிபுளுர் ரஹ்மானுடைய கேள்விக்கு உத்தாரமாக ஜனாப் ஷப்பீர் அஹ்மது என்ன வாசகம் சொல்கிறார் என்பதைப் பாருங்கள்:- மேற்படி நூல் பக்கம் 10, 11.


دیکھئے حضرت مولانا اشرف علی تھانوی ہمارے آپ کے مسلم بزرگ و پیشوا تھے ان کے متعلق بعض لوگوں کو یہ کہتے ہوئے سنا گیا کہ ان کو چھ سو روپیہ ماہوار حکومت کی جانب سے دیئے جاتے تھے
اسی کے ساتھ وہ یہ بھی کہتے تھے کہ مولانا تھانوی کو اس کا علم نہیں تھا کہ روپیہ حکومت دیتی ہے مگر حکومت ایسے عنوان سے دیتی تھی کہ ان کو اس کا شبہ بھی نہ گذرتا تھا۔

' பாருங்கள். நாங்களும் நீங்களும் ஒப்புக் கொண்டுள்ள தலைவரும், மேதையுமான ஹளரத்து அஷ்ரபு அலி தானவி (ரஹ்) அவர்களின் விஷயத்தில் சில ஜனங்கள் இம்மாதிரியாச் சொல்லக் கேள்விப்படுகிறோம். அதாவது அவர்களுக்கு அரசாங்கத்தின் மூலமாக மாதவாரி ரூ600:. - சம்பளம் கொடுக்கப்படுகிறது. அத்தோடு, அரசாங்கம் பணம் கொடுத்து வருகிறது என்பது மௌலானா தானவி தனக்குத் தெரியாது. அரசாங்கமும் தாங்கள் கொடுப்பதாக மவுலானாவுக்கு சந்தேகங்கூட உண்டாகாத விதத்தில் கொடுத்து வந்தது என்றும் சொல்லிக் கொள்கிறார்கள்.'

சொல்லுங்கள் பார்ப்போம். இப்பொழுது விஷயம் நன்கு தௌ;ளத் தெளிய வெளியாகி, ருசுவாகிவிட்டது. தானவி சாஹிபு ஆங்கிலேயர்களின் விருப்பம்போல் நடப்பவர். அவர்களுக்கு அனுசரணையானவர். அவர்கள் சொற்பிரகாரம் நடக்கக்கூடிய அடிமை. மேலும், வெள்ளையரின் சயிக்கினைப் பிரகாரம் முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தை விட்டும் வெளியேறக் கூடிய பாடங்களை கற்பித்துக் கொண்டுமிருந்தார் என்றும் தெரியவருகிறது. சாட்சிகளும் அவர்களில் மிக முக்கியமானவர்கள். فسبحان الله وبحمده

இது பற்றிய விபரத்தை بوارق خداوندی بر بد دینے وہابی دیوبندی 'பவாரிகுதாவந்தீ பர்பத்தீனே வஹ்ஹாபி தேவுபந்தி'- மார்க்கத்தை விட்டு புறம்பாகிய தேவுபந்தி வஹ்ஹாபிகளின் பேரில் அல்லாஹ்வின் பேரிடி' என்று, பறாயிச்சி, 'பஸாதி முல்லா'வுக்கு மறுப்பாக எழுதப்பட்ட நூலில் பார்த்து கொள்ளவும். இந்த தப்லீக்குக்காரர்களுடைய தீங்கை விட்டும் அல்லாஹ் எல்லா ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களையும் காப்பாற்றிக் கொள்வானாக. அமீன்.

واللہ تعالیٰ ورسولہ اعلم

**ஐந்தாவது விடை:**

மார்க்க சம்பந்தமான எவ்வித கூட்டங்களிலும், இயக்கங்களிலும் சேர்வதற்கு முன்னதாக, அதன் ஸ்தாபகரைப் பற்றி இஸ்லாம், ஸுன்னத்து ஜமாஅத்து கொள்கை என்ற உரைகல்லில் சோதித்துப் பார்க்க வேண்டும். அவருடைய கொள்கையைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். கொள்கை சம்பந்தமாக வாதிப்பதுவும் மிக அவசியம்.

இஸ்லாமிய சரித்திர ஞானமுள்ள சோதரர்கள் அறிவார்கள், ஸெய்யிதுனா அமீருல் முஃமினீன், கலீபத்துல் முஸ்லிமீன் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஜகாத்து கொடுக்க மறுதலித்தவர்களுடன் போர் செய்ய முற்பட்டதை அவர்களின் உயர்ந்த வலுப்பமான நல்ல காரியம், அழகிய கருமம் என்று சங்கை மிக்க ஸஹாபாக்கள் அனைவர்களும் மதிக்கிறார்கள்.

மேலும், ஹளரத் ஸெய்யிதுனா அமீருல் முஃமினீன் எஃஸூபுல் முஸ்லிமீன், முஷ்கில் குஷா அலி முர்த்தளா கர்ரமல்லாஹு வஜ்ஹஹு ரலயில்லாஹு அன்ஹு அவர்கள் நஹ்றுவான் கரையோரத்தில் காரிஜிய்யாக்களோடு போர் புரிந்தார்கள். அந்த காரிஜிய்யாக்கள் கலிமா சொல்லி, பர்ளான தொழுகையும் தொழுது, ஸுன்னத்தான தொழுகைகளையும் நிறைவேற்றி வந்தவர்களாயிருந்தும், மிகப் பேணுதலோடு நோன்பு நோற்று வந்தவர்களாயிருந்துங்கூட 'துல்பகார ஹைதரி' என்னும் வாளைக் கொண்டு அவர்களில் அறுநூறு காரிஜிய்யாக்களை கலிமா சொன்னவர்களை, தொழுதவர்களை, நோன்பு நோற்றவர்களை, தங்களை முஸ்லிம்களென தாவாச் செய்தவர்களை, இந்த வஹ்ஹாபிய்யாக்களின், தேவுபந்தியாக்களின் தப்லீக்கிய்யாக்களின் முவர்ரிதீன்களை (இவர்களுக்கெல்லாம் தங்களின் கெட்ட கொள்கைகளை அனந்தரமாக விட்டுச் சென்ற பழுத்த பழம் மூதாதைகளை) எல்லாம் வெட்டி வீழ்த்தினார்கள். அவர்கள் இஸ்லாமை தாவாப் பண்ணியதையும் தொழுது நோன்பு நோற்று இஸ்லாமிய பிரச்சாரம் செய்ததையும் சட்டை செய்தார்களில்லை, பொருட்படுத்தினார்களில்லை. சங்கை ஸஹாபாக்களும், மேன்மை தாபியீன்களும், உயர் இமாம்களும் கண்ணியமிகு உலமாக்களும் ஏகோபித்து இவர்களது இச்செயலை போர் புரிந்து வெட்டியதை-நல்ல காரியமே என அழகுறக் கண்டார்கள். இஸ்லாமுக்கு இவர்கள் செய்த அரும்பெரும் தொண்டு எனவும் விளக்கிக் காட்டினார்கள்.

வஹ்ஹாபி, தேவுபந்தி, தப்லீக்குக் காரர்களுடைய அஸ்திவாரமும், கெட்ட கொள்கைகளும் துலாம்பரமாகி விட்டன. அவர்களை அதிருப்தியுடன் விட்டகன்று விட்டார்கள் ஸுன்னத்து வல் ஜமாஅத்து முஸ்லிம்கள். அதனால் அந்த வஹ்ஹாபிகள், தேவுபந்திகள் ஸுன்னத்து ஜமாஅத்துக்களை ஏமாற்றி அவர்களைத் தங்களின் குபிரிய்யத்தான கொள்கையில் கொண்டு வருவதற்காக ஏமாற்றுப் போர்வையைக் கபடமாகப் போர்த்தி தங்களின் கூட்டத்திற்கு பற்பல பெயர்களை சூட்டிக் கொண்டு, அசுத்தமான வஹ்ஹாபியக் கொள்கைகளை பிரச்சாரம் செய்ய முற்படுகிறார்கள். காக்ஸாரி கூட்டமென்றும், அஹ்றார் பார்ட்டி என்றும், நமாஜி பவுஸ் என்றும், ஸீரத்து கமிட்டி என்றும், டில்லி ஜமீயத்துல் உலமா என்றும், கல்கத்தா ஜமீயத்துல் உலமாயே இஸ்லாம் என்றும், ஜமாஅத்தே இஸ்லாமி என்றும் என்னென்னவெல்லாமோ பல பெயர்களைப் போட்டுக் கொண்டு தோற்றமளிக்கிறார்கள். பெயர்கள்தான் வௌ;வேறே தவிர, அவர்கள் எல்லோருடைய பிரதான வேலை நோக்கம் ஒன்றேதான். அதாவது வஹ்ஹாபிஸ தேவுபந்திஸத்தைப் பிரச்சாரம் செய்து பரத்தி தேவுபந்தியாப் பிரசாரகர்களை பிரபல்யப்படுத்துவதேயாகும். இதுவே அவர்களின் எதார்த்த குறிக்கோள்.

نام ہی کا فرق ہے اور کام سب کا ایک ہے

' பேர்தான் வித்தியாசம், வேலையோ எல்லோர்களினதும் ஒன்றேதான்.'

தேவுபந்தி மாசப் பத்திரிகை 'தாறுல் உலூம்', ஹிஜ்ரி 1371, ஜமாதுல் அவ்வல் மாசப் பத்திரிகையில் 29-வது பக்கம் 2-வது காலத்தில் வருவதைப் பாருங்கள்:



' தப்லீகு ஜமாஅத்தோடு இந்த பலஹீனனுக்கு (அஜிஸாகிய எனக்கு) தொடர்பு இருந்தது. மேலும், மௌலானா அவர்களின் எண்ணத்தில் தப்லீகு ஜமாஅத்தானது ஜமாஅத்தே இஸ்லாமிக்கு ஒரு விரோதமான, பகைமையான கூட்டம் என்பதாக இருக்கலாம் என்று கருதியிருந்தேன். ஆகையினாலேயே அந்தத் தப்பபிப்பிராய அடிப்படையிலேயே தான் நான் அந்த கட்டுரையை எழுதிவிட்டேன் போல்.'

ஸுன்னத்து ஜமாஅத்து சகோரதர்களே! சிந்தித்துப் பாருங்கள்! யார் இப்படிச் சொல்கிறார்? இது, தப்லீகுப் பார்ட்டியின் பொறுப்பு வாய்ந்தவரும், தானவீஜீயின் பொதுக் காரியதரிசியுமான மௌலவி மன்ஸூர் ஹுஸைன் ஸம்பேலியின் வார்த்தை.

ஜமாஅத்தே இஸ்லாமி என்று பெயர் சொல்லப்பட்ட வஹ்ஹாபி தேவுபந்தியா, மவுதூதி பார்ட்டிக்கும், தேவுபந்தியாக்களின் ஏமாற்று பார்ட்டியான இல்யாஸி தப்லீகு ஜமாஅத்திற்கும் அறவே கொஞ்சமும் வித்தியாசமில்லை. இரண்டும் கொள்கையில் ஒன்றே என்பதை இது ஸ்தாபிக்கிறது. ஆகவே, அவைகளெல்லாம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதற்கு ஆதாரம் பூரணமாக ருசுவாகிவிட்டது.

www.sufimanzil.org

وللہ الحجرۃ القاهرۃ

இதையும் கொஞ்சம் பாருங்கள்! மன்ளூர் ஸாஹிபு வரைந்த, தாருல் உலூம் மாசிகையின் ஹிஜ்ரி 1371 ஜமாதல் அவ்வல் பிரதி 35-வது பக்கம் 2-வது காலத்தில் வருகிறது:

بے تکلف عرض کرتا ہوں کہ حضرت مولانا الیاس کے آخری دور حیات میں جب ان کے قریب میں رہا ہوا تو میں نے اس شخص کے وجود میں اس عقیدت کو گویا اپنی آنکھوں سے دیکھا کیا عرض کروں اب کوئی ایسا مرد خدا اپنی نظر میں بھی نہیں۔

' நான் தயக்கமில்லாது சொல்கிறேன்: ஹளரத்து மௌலான இல்யாஸ் அவர்களின் ஜீவிய இறுதி காலத்தில் நான் அவர்களின் சமீபத்தில் இருந்தபோது அந்த மனிதரில் அந்த கொள்கையை என் கண்ணால் பார்ப்பது போல் பார்த்தேன். என் சொல்வேன்! இப்பொழுது அம்மாதிரியான அல்லாஹ்வின் அடியார் என் பார்வையில் தென்படவே இல்லை.'

'மௌலானா முஹம்மது இல்யாஸ்' என்ற நூலின் 43, 44 வது பக்கங்களிலுள்ள இவ்வாசகத்தையும் பாருங்கள்:-

امی بی مولانا پر بہت شفیق تھیں (یہ الیاس کی نانی تھیں) فرمایا کرتی تھیں کہ اختر مجھے تجھ سے صحابہ کی خوشبو آتی ہے کبھی پیٹھ پر محبت سے ہاتھ رکھکر فرماتیں کیا بات ہے کہ تیرے ساتھ مجھے صحابہ کی سی صورتیں چلتی پھرتی نظر آتی ہیں۔ مولانا محمد الیاس صاحب میں ابتداء سے صحابہ کرام کی والہانہ شان کی ایک ادا اور انکی دینی بیقراری کی جھلک تھی جس کو دیکھکر مولانا محمود حسن صاحب شیخ الہند بھی فرمایا کرتے تھے کہ جب میں مولوی الیاس کو دیکھتا ہوں تو مجھے صحابہ یاد آجاتے ہیں۔

' (இல்யாஸ் மவுலானாவின் பாட்டி) உம்மீபீ அவர்கள் மவுலானாவின் பால் றொம்பவும் கிருபையுடையவராயிருந்தார்கள். அவர்கள் மகனே! எனக்கு உங்களிலிருந்து ஸஹாபாக்களின் நறுமணம் வீசுகிறது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். சில சமயம் அன்பினால் மவுலானாவின் முதுகில் கையை வைத்துக் கொண்டு சொல்லிக் கொள்வார்கள்: என்ன சங்கதி! உங்களுடன் ஸஹாபாக்களுடைய ஸூரத்துகள் நடந்து திரிவதாக எனக்கு தோற்றமாகிறது. மவுலானா முஹம்மது இல்யாஸ் சாஹிபுடைய ஆரம்ப காலத்திலிருந்தே ஸஹாபாக்களுக்குள்ள மஹப்பத்தின் உயர் குணத்தின் ஒரு அறிகுறியும் அவர்களின் மார்க்காபிமான துடிப்பின் ஜொலிப்புமிருந்தது. அதைப் பார்த்து ஷெய்குல் ஹிந்து மௌலானா மஹ்மூது ஹஸன் அவர்களுங்கூட, மௌலவி இல்யாஸை நான் பார்ப்பதால் எனக்கு ஸஹாபாக்களின் ஞாபகம் வருகிறது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள்.'

இந்த எல்லா வாசகங்களினாலும் மௌலவி இல்யாஸ் பக்கா, கட்டற், ஏமாற்றுக்கார தேவுபந்தியாகவே இருந்தாரென்று நிச்சயமாகிறது. மேலும் இந்த ஏமாற்று வேஷத்தோடு தேவுபந்திகளையும் விட அதிகமாக தேவுபந்திஸத்தைப் பிரச்சாரம் செய்கிறார். பிரபல்யப் படுத்துகிறார் என்றும் தெரிய வருகிறது.

இந்த கிதாபுகளை எல்லாம் அறியாத ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்கள் இல்யாஸ் என்றால் யாருடைய பெயர் என்று எப்படி தெரிவார்கள்.

இங்கு வஹ்ஹாபிய்யா தேவுபந்திய்யாக்களிடமும், பெயரளவில் தப்லீக்கு என்ற பெயரை வைத்துக் கொண்டிருக்கும் தப்லீக்கு பார்ட்டிகளிடமும் ஒரு ஸுவால் கேட்கிறேன். அதாவது, தேவுபந்திகளும், நத்விகளும் இல்யாஸுடைய புகழையும், கீர்த்தியையும் பற்றி இந்த நூற்களில் எழுதி இருக்கிறார்கள். மௌலவி அப்துஷ் ஷகூர் காகூறவியோ அவரின் ஸூரத்து பாத்திஹாவின் வியாக்கியானத்தில்,

خدا کے سوا کسی کی کسی قسم کی تعریف کرنا حرام ہے

'அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் எந்தவிதமாகவும் புகழுவது ஹறாமாகும்.'

என்று எழுதியிருக்கிறார். ஆகவே, காகூறவியின் பத்வாவின்படி, 'மௌலவி இல்யாஸ்' என்ற நூலையும், 'மல்பூளாத்து' என்ற நூலையும் எழுதியவர்களும், அதைப் பிரச்சாரம் செய்தவர்களும் ஹறாமை செய்தவர்கள் தானா அல்லவா?

بينوا توجروا

இது வஹ்ஹாபிய்யத்தின் துற்குறியாகும். அதாவது குப்று, ஷிர்க்கு, ஹறாம் எல்லாமே அவர்களின் வாயிலிருந்தேதான் வந்தது:

والعياذبالله

ஆம்! ஞாபகத்திற்கு வருகிறது முஸ்லிமகள் இதை நன்றாக சிந்திக்க வேண்டும். வஹ்ஹாபி தேவுபந்திகள் முஸ்லிம்களுக்கு ஏன் கலிமா சொல்லிக் கொடுக்கிறார்கள்? முஸ்லிமல்லாத முஷ்ரிகீன்களுக்கு ஏன் கலிமா சொல்லிக் கொடுக்கிறார்களில்லை? இதற்கு ஏதாவதொரு காரணம் இருக்கத்தானே வேண்டும்? இல்லையானால் ஊர் ஊராக இப்படி யாத்திரை போவதற்கும், வீடு வீடாக திரிவதற்கும் என்ன அவசியம் ஏற்பட்டது? தக்வியத்துல் ஈமான் என்ற நூலை பார்த்தீர்களானால் உங்களுக்கு இதற்குரிய தெளிவான சரியான விடை கிடைக்கும்.

லக்னோ பக்றுல் மதாபிவு அச்சகத்தில் அச்சிடப்பட்ட தக்வியத்துல் ஈமான் எனும் நூலில் 8-வது பக்கத்தில் வருவது இதோ:

تیسری یہ بات کہ بعضے کام تعظیم کے اللہ نے اپنے لئے خاص کئے ہیں کہ ان کو عبادت کہتے ہیں۔

'மூன்றாவது கருமமாவது: சில வேலைகளை அல்லாஹ் மரியாதை செய்வதற்காக தனக்கென சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறான். அதற்கு இபாதத்து என்று சொல்வார்கள்.'

இப்பொழுது தேவபந்திகளின், தப்லீகு பார்ட்டிகளின் முஷ்ரிக்காக ஆக்கும் மிஷினை (முஸ்லிம்களை முஷ்ரிக்குகளாக ஆக்கும் மிஷினை) பாருங்கள். அது எப்படி என்பதை (தக்வியத்துல் ஈமான் காரர் தொடர்ந்து) சொல்கிறார்:-

' எவனொருவன் எந்த ஒரு நபியை, எந்த ஒரு ஒலியை கஷ்ட நேரத்தில் தூரத்திலிருந்து கூப்பிடுவானேயானால் அவன் முஷ்ரிக்காகி விடுவான். எவனொருவன் எந்த ஒரு நபி, ஒலியிடத்தில் நாட்டத்தைக் கேட்டானேயானால் அவன் முஷ்ரிக்காகி விடுவான். எவன் அவர்களுக்கு நேர்ச்சை வைக்கிறானோ அவன் முஷ்ரிக்கு. எவன் அவர்களுக்கு காணிக்கை வைத்தானோ அவன் முஷ்ரிக்கு. எவன் நபி, ஒலியிடத்தில் முறைப்பாடு செய்வானோ அவன் முஷ்ரிக்கு. எவன் நபி, ஒலியிடத்தில் முறைப்பாடு செய்வானோ அவன் முஷ்ரிக்கு. எவன் நபி அல்லது ஒலிக்கு முன்பு மரியாதைக்காக கைகட்டி நிற்கிறானோ அவன் முஷ்ரிக்கு. எவன் நபி ஒலியுடைய வீட்டிற்குப் போவானோ அவன் முஷ்ரிக்கு. எவன் நபி ஒலியுடைய மிஸாரை (சமாதியை) தரிசிக்க நாடி தூரத்திலிருந்து பிரயாணம் செய்வானோ அவன் முஷ்ரிக்கு. எவன் அதை (கபுரை) முத்தமிடுகிறானோ அவன் முஷ்ரிக்கு. எவன் அங்கு (கபுரில்) விளக்கேற்றி வைக்கிறானோ அவன் முஷ்ரிக்கு. எவன் கபுரில் கூளங் குப்பைகளை நீக்கி சுத்தப்படுத்துகிறானோ அவன் முஷ்ரிக்கு. எவன் அங்கு விரிப்பு விரிக்கிறானோ அவன் முஷ்ரிக்கு. எவன் நபி, ஒலியுடைய கபுரில் அல்லது வீட்டில் கொட்டாய் போட்டானோ அவன் முஷ்ரிக்கு. எவன் அங்கு மயிலிறகை வைக்கிறானோ அவன் முஷ்ரிக்கு. எவன் நபி ஒலியுடைய கப்றுக்கு அக்கம்பக்கத்திலுள்ள காடுகளில் வேட்டையாடவில்லையோ அவன் முஷ்ரிக்கு. எவன் அங்கு மரம், செடிகளை வெட்டவில்லையோ அவன் முஷ்ரிக்கு. எவன் நபி ஒலியுடைய மிஜாறை (கபுரை) விட்டுப் பிரிந்து வெளியில் வரும்போது முகந்திருப்பாது பிற்காலிட்டு வருகிறானோ அவன் முஷ்ரிக்கு. அங்கு தாகித்த ஒருவனுக்கு எவன் தண்ணீர் புகட்டினானோ அவன் முஷ்ரிக்கு. எவன் அங்கு தொழுகிறவர்களுக்கு உளுச் செய்ய, குளிக்க ஏற்பாடு செய்கிறானோ அவன் முஷ்ரிக்கு. எவன் நபி, ஒலியுடைய கிணற்றுத் தண்ணீரை பறக்கத்துள்ளதென்று நினைக்கிறானோ அவன் முஷ்ரிக்கு. எவன் நபி ஒலியுடைய மிஜாருக்குப் போகின்றபோது வழியில் வீண் பேச்சுக்களைப் பேசாது தவிர்க்கிறானோ அவன் முஷ்ரிக்கு. எவன் நபிமார்களுக்கு, அவுலியாக்களுக்கு அல்லாஹுத்தஆலாவால் கொடுக்கப்பட்ட இல்மு உண்டென நம்புகிறானோ அவன் முஷ்ரிக்கு.'

மேற்படி நூலின் 9-வது பக்கத்தில் மேலும் வருகிறது:-

ایسی قسم کی باتیں کریں تو اس پر شرک ثابت ہوتا ہے اور اس کو اشراک فی العبادت کہتے ہیں۔

' இம்மாதிரியான காரியாதிகளை செய்வானேயானால் அதனால் அவன் பேரில் ஷிர்க்கு உண்டாகிறது. இதற்கு வணக்கங்களில் இணைவைப்பது என்று சொல்வார்கள்.'

மேலும் மேற்படி தக்வியத்துல் ஈமான் 4-வது பக்கத்தில் வருகிறது:-

جو اپنے بیٹے کا نام عبد النبی رکھے تو مشرک جو محمد بخش نام رکھے وہ مشرک جو احمد بخش نام رکھے وہ مشرک نبی بخش نام رکھے تو مشرک علی بخش نام رکھے تو مشرک غلام محمد
رکھے تو مشرک غلام احمد رکھے تو مشرک غلام مصطفیٰ رکھے تو مشرک غلام مجتبیٰ غلام مرتضیٰ رکھے تو مشرک حسن بخش حسین بخش رکھے مشرک پیر بخش مدار بخش سالار بخش
نام والے مشرک غلام حسن غلام حسین غلام محی الدین غلام معین الدین غلام غوث غلام خواجہ غلام نظام الدین نام والے مشرک۔

' எவனொருவன் தன்னுடைய பிள்ளைக்கு அப்துன்னபி என்று பெயர் வைத்தால் அவன் முஷ்ரிக்கு. முஹம்மது பக்ஸ்; என்று பெயர் வைத்தால் முஷ்ரிக்கு. அஹ்மது பக்ஸ்; என்று பெயர் வைத்தால் முஷ்ரிக்கு. நபி பக்ஸ்; என்று பெயர் வைத்தால் முஷ்ரிக்கு. அலி பக்ஸ்; என்று பெயர் வைத்தால் முஷ்ரிக்கு. குலாம் முஹம்மது என்று வைத்தால் முஷ்ரிக்கு. குலாம் அஹ்மது என்று வைத்தால் முஷ்ரிக்கு. குலாம் முஸ்தபா என்று வைத்தால் முஷ்ரிக்கு. குலாம் முஜ்தபா என்று வைத்தால் முஷ்ரிக்கு. குலாம் முர்தளா என்று வைத்தால் முஷ்ரிக்கு. ஹஸன் பக்ஸ்; என்றோ, ஹுஸைன் பக்ஸ்; என்றோ வைத்தால் முஷ்ரிக்கு. பீர் பக்ஸ்;, மதார் பக்ஸ்;, ஸாலார் பக்ஸ்; என்ற பெயர்களை உடையவர்களும் முஷ்ரிக்கு. குலாம் ஹஸன்,குலாம் ஹுஸைன், குலாம் முஹிய்யதீன், குலாம் முயீனுத்தீன், குலாம் கௌது, குலாம் காஜா, குலாம் நிஜாமுத்தீன் என்ற பெயரை உடையவர்களும் முஷ்ரிக்கு.'

இன்னமும் தானவி ஸாஹிபு பெயரளவில் 'பெஹிஷ்தீஜேவர்' என்ற பெயருடைய நூலின் முதற்பாகத்தில் இம்மாதிரியான பெயர்களை உடைய முஸ்லிம்களை காபிர், முஷ்ரிக்கு என்று எழுதி இருக்கிறார்.

இங்கு ஒன்று குறிப்பிடுகிறேன். திஹ்லவி, தானவி இருவர்களும் ஏகோபித்து சொல்லிய பத்வாவின் பிரகாரம் மௌலவி இல்யாஸின் வம்சத்துடைய தூய்மையும் பறந்து ஓடிவிட்டது.

اس گھر کو آگ لگ گئی گھر کے چراغ سے ۔

'அந்த வீடு தீப்பிடித்து எரிந்தது அந்த வீட்டிலிருந்த விளக்கினாலேயே.'

இன்னமும் வஹ்ஹாபி தேவுபந்தி இல்யாஸி நத்விகளின் காபிராக்கும் மிஷினைப் பற்றி 'தக்வியத்துல் ஈமான்' 66, 67-வது பக்கங்களில் வருகிறது:-

' எவன் யாரஸூலல்லாஹ் என்று சொல்வானோ அவன் காபிர். யாஅலி முஷ்கில் குஷா, யா ஹஸன் முஜ்த்தபா, யா ஹுஸைன் ஷஹீதே கர்பலா என்று சொன்னால் காபிர். எவன் யாகௌது, யாகாஜா என்று சொல்வானோ அவன் காபிர். எவன் மீலாது நடத்துகிறானோ அவன் காபிர். நபி பக்ஸ், ரஸூல் பக்ஸ், முஹம்மது பக்ஸ், அஹ்மது பக்ஸ், அப்துன்னபி, அப்துர் ரஸூல், அப்துல் முஸ்தபா, குலாம் முஹம்மது, குலாம் அஹ்மது, குலாம் நபி, குலாம் ரஸூல், குலாம் முஸ்தபா, குலாம் முர்த்தளா, குலாம் அலி, குலாம் ஹஸன், குலாம் ஹுஸைன், குலாம் கௌது, குலாம் காஜா, குலாம் பீர், குலாம் முஹிய்யத்தீன், குலாம் முயீனுத்தீன், குலாம் நிஜாமுத்தீன் முதலிய இத்தகைய மற்றும் பெயர் வைத்தவர்களும் காபிர். எவன் பிள்ளையை குர்ஆன் ஓத வைப்பதற்காக, பிஸ்மில்லாஹ் சொல்லிக் கொடுப்பதற்காக கூட்டத்தை ஏற்படுத்தினானோ அவன் காபிர். கத்னா செய்வதற்காக சந்தோஷம் கொண்டாடினவன் காபிர். கலியாணத்திற்காக கொட்டாய், பந்தல் போடுகிறவன் காபிர் ஹளரத்து குதுபு மதார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கந்தூரிக்குப் போகிறவன் காபிர். பறாஅத்து இரவில் (ஹல்வா) இனிப்புப் பண்டம் ஆக்கினவன் காபிர். கலியாணத்தில் நிகாஹுக்கு முன்பு தஉவத்து (விருந்து) கொடுப்பவன் காபிர். மீலாது ஷரீபில் எழுந்து நிற்பவன் காபிர். யா நபீ ஸலாம் அலைக்கும் ஓதுகிறவன் காபிர். (கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் 11

நாள் மவுலிது விசேஷ) கியாரஹ்வீன் செய்கிறவன் காபிர். ரமலான் மாசத்தின் கடைசி ஜும்ஆவில் அல்விதாஉ குத்பா ஓதுகிறவன் காபிர். பெருநாளில் ஸவிய்hன் (ஒரு வகைப் பலகாரம்) செய்கிறவன் காபிர். பெருநாள் தொழுகைக்குப் பின் கழுத்தோடு கழுத்தைக் கட்டி ஆலிங்கனம் செய்கிறவன் காபிர். பெருநாள் தொழுகைக்குப் பிறகு முஸாபஹா (கைலாகு) செய்கிறவன் காபிர். கபுறுகள் கட்டுகிறவன் காபிர். கபனுடன் ஜானிமாஸ் (தொழுகை விரிப்பு) துண்டை வைப்பவன் காபிர். ஷாஹ் அப்துல் ஹக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுடைய நேர்ச்சை செய்கிறவன் காபிர். கபனில் கலிமா எழுதுகிறவன் காபிர். கபுறுகளில் பூமாலை போடுகிறவன் காபிர். யாருடைய கபுறையாவது ஸியாரத்துச் செய்வதற்காக ஸபர் போகிறவன் காபிர். ஷாஹ் பூ அலி கலந்தர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுக்கு மூன்று மன் சீரணி செய்கிறவன் காபிர். கபுறில் ஷஜறா (ஸில்ஸிலா) வைப்பவன் காபிர். மவுத்தானவர்களுக்கு மூன்றாம் நாள் பாத்திஹா, பத்தாம் நாள் பாத்திஹா, இருபதாம் நாள்-நாற்பதாம் நாள்- மூன்று மாச, அற மாச, வருஷ பாத்திஹாக்கள் ஓதுகிறவன் காபிர். கந்தூரி நடத்துபவன் காபிர். சில்லா இருப்பவன் காபிர். நமாஜே கௌதிய்யா தொழுகுpறவன் காபிர். பெண்களுக்கு அதிக மஹர் ஏற்படுத்துகிறவன் காபிர்.'

இப்படியான வஹ்ஹாபிகளின், இல்யாஸிகளின், நத்விகளின் இந்த குப்ரு ஷிர்க்கு உடைய மிஷின் பீரங்கியை-இல்லை-அணுகுண்டை விட்டும் உலகிலுள்ள எந்த ஒரு முஸ்லிமும் காபிர், முஷ்ரிக்கு என்று ஆக்கப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள மாட்டான். கடைசியாக, இதே குப்று, ஷிர்க்கின் அணுகுண்டைக் கொண்டே வஹ்ஹாபிஸம், தேவுபந்திஸம், நத்விஸம், இல்யாஸிஸம் உடைய கோட்டையும் உடைந்து சுக்கு நூறாகி விட்டது. அவர்களுடைய தரீகத்தின் ஞான குருவும், ஷரீஅத்தின் வழிகாட்டியுமான உயர்மிக்க ஆலிஜனாப் ஸூபி இம்தாதுல்லாஹ் ஸாஹிபு முஹாஜிர் மக்கீ அவர்களும் கூட இவர்களின் கூற்றுப்படி காபிர், முஷ்ரிக்காகி விட்டார்கள். எந்த விஷயங்களை வஹ்ஹாபி தேவுபந்தி நத்வி இல்யாஸிகள் குப்றென்றும், ஷிர்க்கென்றும் குறிப்பிடுகிறார்களோ அந்த விஷயங்களில் அநேகமானவைகளை ஜனாப் ஹாஜி இம்தாதுல்லாஹ் ஸாஹிபு அவர்கள் தங்களின் 'ஏழு மஸ்அலாக்களின் தீர்ப்பு' எனும் நூலில் ஆகுமான அனுமதிக்கப்பட்ட விஷயங்கள் என்று எழுதி இருக்கிறார்கள். ஆகவே முரீதீன்களின் பத்வாப்படி இவர்கள் காபிர், முஷ்ரிக் ஆகிறார்கள். இப்பொழுது தர்பங்கிஜியின் பதவாவைப் படியுங்கள்:

' எவன் காபிரை காபிர் என்று சொல்லவில்லையோ அவன்தானும் காபிராகிவிடுவான்.'

தேவுபந்திகளில் பெரியோர், சிறியோர் அனைவரும் இவர்களை (ஹாஜி இம்தாதுல்லாஹ் ஸாஹிபுவை) முஸ்லிம் என்றும், ஷெய்கு (குருநாதர்) என்றும் நம்பி இருக்கிறார்கள். ஆகவே, இவர்கள் அத்தனை பேர்களும் (அவர்களைச் சேர்ந்த தர்பங்கீஜீ) அவர்களுடைய பத்வாவின் பிரகாரமே காபிர், முஷ்ரிக்குகளென்று ஆகிறார்கள். குப்றும், ஷிர்க்கும் எந்நிலைமையிலும் வஹ்ஹாபி தேவுபந்தி நத்வி தப்லீக்குக்காரர்களின் பேரில் ஆசையாகி சுற்றிக் கொண்டே இருக்கிறது. அவர்கள் எந்த நிலைமையிலும் காபிராகவே ஆகிவிடுகிறார்கள்.

ولاحول ولاقوة الا بالله العلى العظيم

வஹ்ஹாபிகள், தேவுபந்திகள், நத்விகள், இல்யாஸிகளிடத்தில் தக்வியத்துல் ஈமான் எனும் நூலுக்கு என்ன மதிப்பிருக்கிறது என்பதையும், அவர்களிடத்தில் அது எத்தகைய அந்தஸ்துடையது என்பதையும் இதோ பாருங்கள். டில்லி, ஹிந்துஸ்தான் பிரிண்டிங் வர்க்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்ட, பாடம் போடப்படாத பதாவா ரஷீதிய்யா எனும் நூல், முதல் பாகம், 115-வது பக்கத்தில் வருகிறது:


اور کتاب تقویۃ الایمان نہایت عمدہ کتاب ہے اور رد شرک و بدعت میں لاجواب ہے استدلال اس کے کتاب و احادیث سے ہیں اس کا رکھنا اور پڑھنا اور عمل کرنا عین اسلام ہے

'தக்வியத்துல் ஈமான் றொம்பவும் நல்ல கிதாபு. ஷிர்க்கு, பிதுஅத்தை மறுப்பதில் நிகரில்லாதது. அதில் காட்டப்படும் ஆதாரங்கள் யாவும் குர்ஆன், ஹதீதுகளிலிருந்தே காட்டப்படுகிறது. அதை வதை;திருப்பதுவும், அதைப் படிப்பதுவும், அதன்படி அமல் செய்வதுவும் இஸ்லாம்தானாகும்.'

இஃது மௌலவி இல்யாஸின் ஞானத் தந்தை, ஞானப் பாட்டன், ஆசிரியர், ஆசிரியப்பாட்டன், குத்பே இர்ஷாது, முஜத்திது உடைய பத்வாவாகும். அதாவது தக்வியத்துல் ஈமானை கிட்டவே வைத்திருப்பதும் ஐனுல் இஸ்லாம்- இஸ்லாம்தானாகும். தக்வியத்துல் ஈமானில் எழுதியபடி அமல் செய்வது ஐனுல் இஸ்லாம்-இஸ்லாம் தானாகும் என்பதுவே. கருத்தாவது: எந்த ஒரு வஹ்ஹாபி, நத்வி, தப்லீகுகாரர் தன்னுடன் தக்வியதுல் ஈமானை வைக்கவில்லையோ அவன் காபிர். எவன் அதைப் படித்து வரவில்லையோ அவன் காபிர். எவன் அதன் (தக்வியத்துல் ஈமானின்) படி அமல் செய்யவில்லையோ அவன் காபிர் முர்த்தத்து ஆவான் என்பதுவே. கொங்கோஹிஜியின் இந்த பத்வாவினால் தக்வியதுல் ஈமான் உடைய மர்த்தபாவை, அந்தஸ்தை, நன்றாகத் தெரிந்து கொண்டு தான் மௌலவி இல்யாஸ் தேவுபந்தியானவர் தக்வியதுல் ஈமானின் படி அமல் செய்தார். அதாவது, உலகிலுள்ள முஸ்லிம்கள், முஃமின்கள் அனைவர்களையும் காபிர், முஷ்ரிக்குகள் என்று முடிவு கட்டினார். மேலும், அல்லாஹ் காக்க வேண்டும். மஆதல்லாஹு ரப்புல் ஆலமீன். அந்த காபிர்களை, முஷ்ரிக்குகளை, முர்த்தத்துகளை முஸ்லிம்களாயாக்குவதற்காகத் தான், இஸ்லாத்தில் கொண்டுவர வேண்டித்தான் இந்த இயக்கத்தை உண்டாக்கினார். ஆகவே, (அல்லாஹ் காக்க வேண்டும்) இந்த வஹ்ஹாபி, தேவுபந்தி, இல்யாஸி, நத்வி ஜனங்கள், தங்களல்லாத, ஏனைய எல்லா ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களையும் காபிர், முஷ்ரிக்கு, முர்த்தத்து என்று நினைத்து அக்கருத்திலேயே அவர்களுக்கு புதிதாக கலிமா படித்துக் கொடுத்து, இப்பொழுதுதான் புதிதான (நவ் முஸ்லிம்) கூட்டமாக இஸ்லாத்தில் சேர்க்கிறார்கள் போலும்!

ஸுன்னத்து ஜமாஅத்துச் சகோதரர்களே! எச்சரிக்கையாக இருங்கள், உஷாராக இருங்கள்! இல்யாஸி (தப்லீகு) இயக்கத்தின் அடித்தளமும், அஸ்திவாரமும் இதுவே. அதாவது: எல்லா ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களும் காபிர்கள், முஷ்ரிக்குகள், முர்த்தத்துகள் என்பதுவே. இப்படியிருக்கும் போது இந்த இல்யாஸி நத்விகளின் எந்தத் திட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? அவர்களின் அஸ்திவாரத்தின் அஸ்திவாரம் உங்கள் முன்னிலையில்

கண்ணாடி போல துலாம்பரமாக தெளிவாக ஆஜர் படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் தப்லீக்குகாரர்களின் இயக்கத்தின் துற்சகுண, அவலட்சண, ஆபாச முகத்தை விட்டும் அவர்களது ஏமாற்று முகமூடியைக் கழற்றி அந்த முகத்திலுள்ள வியாதி, மாசு எல்லாவற்றையும் பூறாவாகக் காட்டப்பட்டு, இல்யாஸீ இயக்கத்தின் அஸ்திவாரமே குப்ரு என்பதாக நீங்கள் நிச்சயமாக எப்பொழுது அறிந்துகொண்டீர்களோ உடனே, அந்த அசுத்தமான குப்ரிய்த்தான இயக்கத்தை விட்டும் வெறுப்பைக் காட்டி விரண்டோடுங்கள். அதன் வெளித் தோற்றத்தையும், அவர்களின் நடிப்பான மினுக்கு, தளுக்கையும் பார்க்காதீர்கள். அவர்களின் பசப்பு, மயக்கு மொழிகளை கேளாதீர்கள். அவர்கள் (பொய்ச்) சத்தியம் செய்து சொல்லும் வார்த்தைகளை லட்சியம் செய்யாதீர்கள். குர்ஆனுல் அளீம், அவர்களுடைய முன்னோர்களான பெரியார்களுக்கு மறுப்பாகச் சொல்லுகின்றது.

اتخذوا ايمانهم جنة فصدوا عن سبيل الله انهم ساء ما كانوا يعملون ○ ذلك بانهم
امنوا ثم كفروا فطبع على قلوبهم فهم لا يفقهون ○ (سورة المنافقون)

'அவர்கள் தங்களின் சத்தியத்தை ஒரு தடுப்பாயுதமாக ஆக்கிக் கொண்டு அல்லாஹ்வின் பாதையை விட்டும் (ஜனங்களை) தடுக்கிறார்கள். அவர்கள் செய்கின்ற வேலை மிகவும் கெட்டதாகும். அஃது (அப்படி அவர்கள் செய்யக் காரணம்) அவர்கள் ஈமான் கொண்டு பின்னர் காபிராகிவிட்டார்கள். அவர்களின் இருதயங்களின் மீது முத்திரையிடப்பட்டு விட்டது. எனவே அவர்கள் (ஒருபோதும் ) உணர்ந்தறியவே மாட்டார்கள்.' மேலும் குர்ஆனே கரீம் கூறுகிறது:

اتخذوا ايمانهم جنة فصدوا عن سبيل الله فلهم عذاب مهين ○ لن تغني عنهم اموالهم ولا اولادهم
من الله شيئا اولئك اصحب النار هم فيها خالدون ○ (سورة المجادلة)

'அவர்கள் தங்களின் (பொய்) சத்தியங்களை தடுப்பாயுதமாக ஆக்கி வைத்துக் கொண்டு (ஜனங்களை)அல்லாஹ்வின் பாதையை விட்டும் தடுக்கிறார்கள். அவர்களுக்கு கேவலமான வேதனை உண்டு. அவர்களுக்கு அவர்களுடைய பொருள்களும், மக்கள்களும் அல்லாஹ்விடத்தில் எதையும் காப்பாற்றாது. அவர்கள் நரகவாதிகள். அதிலேயே அவர்கள் ஊழியகாலமும் தரிபட்டிருப்பார்கள்.'

يحلفون بالله ما قالوا ولقد قالوا كلمة الكفر وكفروا بعد اسلامهم - (سورة التوبة)

' தாங்கள் சொல்லவில்லை என்று அல்லாஹ்வைக் கொண்டு அவர்கள் சத்தியம் செய்வார்கள். நிச்சயமாக அவர்கள் குப்ருடைய கலிமாவைச் சொன்னார்கள். அவர்கள் இஸ்லாமாக இருந்ததற்கப்பால் காபிராகிவிட்டார்கள்.'

قل ابالله واياته ورسوله كنتم تستهزءون ○ لا تعتذروا قد كفرتم بعد ايمانكم (سورة التوبة)

' (நபியே! அந்த ஜனங்களிடம்) சொல்லுங்கள், அல்லாஹ்வைக் கொண்டும் அவனுடைய ஆயத்துக்களைக் கொண்டும், அவனுடைய ரஸூலைக் கொண்டுமா நீங்கள் பரிகாசம் செய்கிறீர்கள்? போக்குச் சொல்லாதீர்கள். நிச்சயமாக நீங்கள் ஈமான் கொண்டதற்கப்பால் காபிராகி விட்டீர்கள்.'

وقد نزل عليكم في الكتاب ان اذا سمعتم ايٰت الله يكفر بها ويستهزأ بها فلا تقعدوا معهم حتى يخوضوا في حديث غيره انكم اذا مثلهم ان الله جامع المنافقين والكافرين في جهنم جميعا (سورة النساء)

' நிச்சயமாக (அல்லாஹ்) உங்கள் பேரில் வேதத்தில் இறக்கியிருக்கிறான். நீங்கள் அல்லாஹ்வின் ஆயத்துக்களைக் கேட்பீர்களேயானால் அதை நிராகரிக்கவும் படும், அதைக் கொண்டு பரிகசிக்கவும் (என்று). ஆகவே, (அவ்வாறு பரிகசிக்கும்) அவர்களோடு உட்காராதீர்கள். அவர்கள் (அப்பரிகாசத்தை விட்டு) வேறு பேச்சில் மூழ்கின்ற வரையிலும் (அப்படி அவர்களோடு உட்காருவீர்களேயானால்) நீங்களும் அவர்களைப் போன்றவர்களாகவே ஆகுவீர்கள். நிச்சயமாக அல்லாஹ் நயவஞ்சகக்காரர்((முனாபிகீன்)களையும், காபிரீன்களையும் நரகத்தில் ஒன்றாகச் சேர்க்கிறவன்.'

الذين يتخذون الكافرين اولياء من دون المؤمنين ايبتغون عندهم العزة فان العزة لله جميعا (سورة النساء)

'மு.ஃமின்களை விட்டுவிட்டு காபிரீன்களை அதிகாரிகளாக ஆக்குகிறவாகள்,(காபிரீன்களாகிய) அவர்களிடத்தில் சிறப்பைத் தேடுகிறார்களா? நிசசயமாக சிறப்பு அத்தனையும் அல்லாஹ்வுக்கே சொந்தம்.'

ان الذين يؤذون الله ورسوله لعنهم الله في الدنيا والاخرة واعد لهم عذابا مهينا (سورة الاحزاب)

' எவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் வருத்தத்தை கொடுக்கிறார்களோ அவர்களை அல்லாஹ் இம்மையிலும், மறுமையிலும் சபிக்கிறான் (லஉனத்து செய்கிறான்) மேலும் அவர்களுக்கு கேவலமான வேதனையையும் தங்கரியம் பண்ணி இருக்கிறான்.'

والذين يؤذون رسول الله لهم عذاب اليم (سورة التوبة)

'அல்லாஹ்வின் ரஸூலை வருத்தப்படுத்துகிறவர்களுக்கு கொடிய வேதனை உண்டு.'

ولا تركنوا الى الذين ظلموا فتمسكم النار (سورة هود)

'அக்கிரமக்காரர்களோடு சேர்ந்திராதீர்கள். (அப்படிச் சேர்ந்தீர்களாயின்) அப்போது உங்களையும் (அவர்களைத் தாக்கும் வேதனையின்) நெருப்பு தொட்டு விடும்.'

அல்லாஹ்வின் போதனைகளான இந்தக் குர்ஆன் ஆயத்துக்கள் தெரிவிக்கின்றன.

இந்த வஹ்ஹாபிகள், தப்லீகிகள், நத்விகள் போன்ற கூட்டங்களை விட்டும் ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்கள் தூரமாக ஓடி விலகி இருக்க வேண்டியது அவசியம் என்று. அந்தக் கூட்டத்தார்கள் உங்களை மாத்திரமல்ல, பெரியோர்களான நாதாக்கள், உலமாக்கள், அவுலியாக்களையுங் கூட காபிர், முஷ்ரிக்கு, முர்த்ததுகளென்றே நம்புகிறார்கள்.

தற்பொழுது, அவர்களுடைய உருவம், நிறம், ரூபம், கன்னம், அதிலுள்ள ஆபாச மாசு, மருக்கள், உயரம், இறக்கம், குப்ரிய்யத்தான நெற்றியின் மடிப்பு எல்லாவற்றையும் உங்கள் முன்னால் திரையகற்றி வெளியாக்கப்பட்டு விட்டது. தப்லீக்குக்காரர்களின் குப்ரிய்யத்து திறப்பாக்கப்பட்டு விட்டது. அவர்களின் கன்னம் மஞ்சனித்து, முகம் கறுத்து பேதலித்து விட்டது. அவர்களின் குப்ரிய்யத்து நடுப்பகல் சூரியனை விட அதிக துலாம்பரமாகி விட்டது. அவர்கள் தாங்களே காபிர்களாகி விட்டார்கள்.

இவ்வளவும் தெரிந்து இதற்கப்பாலும் எவனொருவன் அவர்களோடு சேருவதை விடவில்லையானால், அல்லாஹ்வின் ஆதாரம் பூர்த்தியாகிவிட்டது. நாளை கியாமத்தில் எவரும் போக்குச் சொல்லி தப்பித்துக்கொள்ள முடியாது. இவனும் அவர்களோடு ஒரே கயிற்றில் கட்டப்படுவான். அந்த வஹ்ஹாபிகள், தப்லீக்குக் காரர்கள் வெளிரங்கத்தில் இப்படி அபிவிருத்தியாகிக் கொண்டு போவதாகிறது இது அவசியமானதேயாம். ஏனெனில்,

1. இந்தப் பார்ட்டிகள் கெட்ட துன்மார்க்கக் கொள்கையின் மரங்களாவர். கியாமத்து சமீபத்திலிருக்கிறது. தஜ்ஜாலுடைய கூட்டத்தார்களுக்கு தஜ்ஜால் வரும் வரையும் கொஞ்சம் கொஞ்சம் அபிவிருத்தி ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கும். எப்பொழுது அவன் வருவானோ முழுக்க முழுக்க இவர்கள் எல்லோர்களும் அவனுடைய மக்களாகவே ஆகிவிடுவார்கள்.

2. இதற்காகத்தான், அல்லாஹ்வின் மஹ்பூபு ஹளரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தங்களுக்கு அல்லாஹ் அறிவித்துக் கொடுத்த மறைவான விஷயத்தை அறியும் அறிவைக்கொண்டு சொன்னார்கள், 'என்னுடைய குலாம்களான அல்லாஹ்வின் நல்லடியார்கள் தங்களுடைய தீனையும், ஈமானையும் காப்பாற்றிக் கொள்வதானது நெருப்பைக் கையில் தாங்கி எடுப்பது போலும், மார்க்கத்தில் ஸ்திரமாக இருப்பதானது நெருப்பின் மத்தியில் நிற்பது போலும் எப்பொழுது ஆகிவிடுமோ அப்பொழுது என்னுடைய பிரதிநிதி இமாம் மஹ்தி வெளிப்படுவார்' என்று.

3. இந்தக் கூட்டத்தார் கடுமையான, தீவிரமான ஏமாற்று குபாடங்களைக் கொண்டே தங்களின் நச்சு விஷத்தைப் பரப்புகிறார்கள்.

4. நஜ்தி ஸுஊதி அரசாங்கத்துடையவும், அதன் அதிபர் இபுனு ஸுஊதுடையவும் உதவி ஒத்தாசை சகாயங்கள் இந்த தப்லீகு ஜமாஅத்திற்குக் கிடைக்கிறது, எப்படி என்பதைப் பாருங்கள். 'மௌலவி இல்யாஸ்' எனும் நூல் 100-வது பக்கத்தில் வருகிறது:-

دو ہفتہ کے بعد ۱۴ مارچ ۱۹۳۸ء کو مولانا حاجی عبداللہ دہلوی عبدالرحمن مظہر شیخ المطوفین اور مولوی احتشام الحسن کی معیت میں سلطان ابن سعود نجدی وہابی کی ملاقات
کیلئے تشریف لے گئے جلالۃ الملک نے بہت اعزاز کیساتھ مسند سے اترکر استقبال کیا اور اپنے قریب ہی معزز ہندی مہمانوں کو بٹھایا ان حضرات نے تبلیغ کا معروضہ پیش کیا جس پر سلطان
(نجدی وہابی) نے تقریباً چالیس منٹ تک توحید و کتاب و سنت اور اتباع شریعت پر مبسوط تقریر کی اس کے بعد بہت اعزاز کے ساتھ مسند سے اترکر رخصت کیا۔

' இரு வாரங்களுக்கப்பால் 1938 மார்ச் 14ம் தேதி மௌலானா ஹாஜீ அப்துல்லாஹ் திஹ்லவீ, ஷெய்குல் முதவ்விபீன் அப்துர் ரஹ்மான் மள்ஹர், மௌலவி இஹ்திஷாமுல் ஹஸன் முதலிய இவர்களோடு ஸூல்தான் இபுனு ஸுஊதை சந்திப்பதற்காகச் சென்றார்கள். அரசர் மெத்தவும் சங்கை செய்து ஆசனத்தை விட்டிறங்கி எதிர் கொண்டழைத்து சங்கையான இந்திய விருந்தாளிகளை தன் பக்கத்தில் அமரும்படி செய்தார். அவர்கள் அறபியில் எழுதப்பட்ட தப்லீக்கின் திட்ட முறைகளை (அரசரிடம்) சமர்ப்பித்தார்கள். அதன்பேரில், அரசர் ஏறக்குறைய நாற்பது நிமிஷ நேரம் தவ்ஹீது, கித்தாபு, ஸுன்னத்து பற்றியும், ஷரீஅத்தைப் பின்பற்றுதல் சம்பந்தமாகவும் விரிவானதோர் பிரசங்கம் செய்தார். பின்னர், ஆசனத்தை விட்டிறங்கி மிகவும் சங்கைப்படுத்தி பயணம் அனுப்பி வைத்தார்.'

இப்படி எதிர் கொண்டழைப்பதும், இந்த சங்கை மரியாதையும் ஏன்? ஸுஊதி அரசமாளிகையில் இத்தகைய விசேஷ முடுகுதல் எதற்காக? இவையெல்லாம்

கொங்கோஹியின் கொள்கை, அவருடைய சீடர் இல்யாஸின் கொள்கை, அவர்களுடைய தக்வியத்துல் ஈமான் எனும் கிதாபின் கொள்கை இவையாவும் இபுனு ஸுஊதுடைய கொள்கையாகவே இருந்தபடியால்தான், அக்கொள்கைகளை இபுனு ஸுஊது தானே தனது குப்ரிய்யத்தான கிதாபு அல்ஹதிய்யதுஸ் ஸனிய்யாவிலும், அதன் உருது மொழி பெயர்ப்பு நூலான துஹ்பா வஹ்ஹாபிய்யாவிலும் சேகரித்திருக்கிறார். மேலும், அதே கெட்ட அருவறுப்பான கொள்கைதான் மௌலவி இல்யாஸின் பிரதான ஆசிரியரும், குருவும், குருவின் குருவும் குத்பே இர்ஷாதும், முஜத்திதுமான கொங்கோஹியின் கொள்கையுமாகும்.

டில்லி, ஹிந்துஸ்தான் பிரிண்டிங் வர்க்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்ட, பாடம் போடப்படாத, 'பதாவா ரஷீதிய்யா' எனும் நூலின் முதல் பாகம் 76வது பக்கத்தில் வருகிறது.

سولہواں سوال وہابی کون لوگ ہیں اور ابن عبدالوہاب نجدی کا کیا عقیدہ تھا اور وہ کیسا شخص تھا اور اہل نجد کے عقائد میں اور سنی حنفیوں کے عقائد میں کیا فرق ہے۔

' **பதினாறாவது வினா:** வஹ்ஹாபிகள் என்றால் யார்? இபுனு அப்துல் வஹ்ஹாபு நஜ்தியின் கொள்கை யாது? அவர் எப்படிப் பட்டவர்? நஜ்திகளின் கொள்கைகளுக்கும், ஸுன்னி ஹனபிகளின் கொள்கைகளுக்கும் என்ன வித்தியாசம்?'

ஸுன்னத்து ஜமாஅத்து சகோதரர்களும், அத்துடன் தேவுபந்தி இல்யாஸி நத்வி அனைவர்களும் இவ்வினாவின் விடையை நன்றாக கவனித்துப் பார்க்க வேண்டும். தேவுபந்திகள், நஜ்திகள், வஹ்ஹாபிகள் இவர்கள் எல்லோர்களுடைய கொள்கைகளும் ஒரே கொள்கையாக இருப்பதையும், இவர்கள் எல்லோர்களும் கொள்கையில் ஒருவரோடொருவர் கட்டுண்டவர்களே என்பதையும் (மேற்படி கேள்விக்கு மேற்படி கிதாபில் அவர் சொல்லும் பதிலில்) பாருங்கள்:

الجواب محمد بن عبد الوہاب کے مقتدیوں کو وہابی کہتے ہیں ان کے عقائد عمدہ تھے اور مذہب ان کا حنبلی تھا البتہ ان کے مزاج میں شدت تھی مگر وہ اور ان کے مقتدی اچھے ہیں۔
مگر ہاں جو حد سے بڑھ گئے ہیں ان میں فساد آگیا ہے اور عقائد سب کے متحد ہیں اعمال میں فرق حنفی شافعی مالکی حنبلی کا ہے۔

' **பதில்:** முஹம்மது இபுனு அப்துல் வஹ்ஹாபைத் தொடர்ந்தவர்களை வஹ்ஹாபி என்று சொல்வார்கள். அவருடைய கொள்கை நல்லதுதான். அவருடைய மதுஹபு ஹம்பலியாகும். அவசியம் அவருடைய சுபாவத்தில் கடுமை இருந்ததுதான். ஆனாலும், அவரும் அவரைத் தொடர்ந்தவர்களும் நல்லவர்கள்தான். மெய்தான்.

எவர்கள் (கடுமை காட்டுவதில்) எல்லையைக் கடந்தார்களோ அவர்களில் கேடு (பஸாது) வந்தது. மேலும் அவர்கள் எல்லோர்களும் கொள்கையில் ஒற்றுமையானவர்கள்தான். செய்கையில் வித்தியாசமாகிறது ஹனபி, ஷாபியீ, மாலிகி, ஹம்பலிக்குள்ள வித்தியாசமே.'

கருத்தாவது: இபுனு அப்துல் வஹ்ஹாபை ஒப்புக் கொள்கிறவர்களே வஹ்ஹாபிகள். அவருடைய கொள்கை நல்லது. அவரைத் தொடர்ந்து பின்பற்றியவர்களும் நல்லவர்கள். அவர்களெல்லோரும் கொள்கையில் ஒற்றுமைமயானவர்கள். அதாவது வஹ்ஹாபி நஜ்திகளுக்கும், வஹ்ஹாபி தேவுபந்திகளுக்கும் கொள்கை ஒன்றேதான். எல்லாவர்களும் கொள்கையால் ஒற்றுமையானவர்கள் என்பதாம்.

சிந்திக்க வேண்டும். கொங்கோஹி ஸாஹிபு தானே வஹ்ஹாபி என்பதற்கு பொருள் இபுனு அப்துல் வஹ்ஹாபின் கொள்கையை ஒப்புக்கொண்டவர் என்பதாகும் என்று சொல்கிறார். பின்னர்தானே இபுனு அப்துல் வஹ்ஹாபை நல்லவர் என்றும் ஒப்புக் கொள்கிறார். அவரைப் புகழுகிறார். துதிக்கிறார். மேலும் தன்னுடைய கொள்கையும், அவருடைய கொள்கையும் ஒன்றெனக் காட்டுகிறார். ஆகவே கொங்கோஹியும், அவரை ஒப்புக்கொண்ட சீடர்களான தேவுபந்தி வஹ்ஹாபிகளும், நத்விகளும், இல்யாஸிகளும் அவர்கள் எல்லோருமே இதன்படி வஹ்ஹாபிகளேயாவர்.

இன்னமும், அந்த கொங்கோஹி ஸாஹிபின் கிதாபான, முறாதாபாது அப்ளலுல் மதாபிவு அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டுள்ள, பாடம் போடப்படாத 'பதாவா ரஷிதிய்யா' மூன்றாம் பாகம் 92வது பக்கத்தில் வருகிறது:

سوال نمبر ۱۱ ابن عبد الوہاب نجدی کیسے شخص تھے الجواب محمد بن عبد الوہاب کو لوگ وہابی کہتے ہیں وہ اچھا آدمی تھا سنا ہے کہ مذہب حنبلی رکھتا تھا۔ اور عامل
بالحدیث تھا بدعت و شرک سے روکتا تھا مگر تشدد اس کے مزاج میں تھی۔

**கேள்வி நிர் 11:** இபுனு அப்புல் வஹ்ஹாபுன்னஜ்தி எப்படிபட்டவர்?

**விடை:** முஹம்மது இபுனு அப்துல் வஹ்ஹாபை ஜனங்கள் வஹ்ஹாபி என்று சொல்வார்கள். அவர் நல்ல மனிதராகவே இருந்தார். கேள்விப்படுகிறேன், அவர் ஹம்பலி மத்ஹபுக் காரரென்று. மேலும், அவர் ஹதீதின்படி அமல் செய்பவர். பித்அத்தையும் ஷிருக்கையும் மறுத்துக் கொண்டிருந்தார். ஆனால், அவரது சுபாவத்தில் கண்டிப்பு இருந்தது.'

பாருங்கள். பாருங்கள். இபுனு அப்துல் வஹ்ஹாபுன்னஜ்தியை கெங்கோஹி வஹ்ஹாபி என்றும் சொல்கிறார். அதே நேரத்தில், நல்லவரென்றும் எழுதுகிறார். ஏன்? வஹ்ஹாபி தேவுபந்திகளும், வஹ்ஹாபி நஜ்திகளும் ஒரே பையிலுள்ள விளையாட்டுக் கருவிகளே. மேலும், அவரை ஷிர்க்கு, பிதுஅத்தை தடுப்பவர் என்றும் இவர் எழுதுகிறார்.

தேவுபந்திகள், தக்வியத்துல் ஈமான்-பெஹஷ்திஜேவர் முதல் பாகம்-நாயி அனில் இஸ்லாம் மவுலவி கிபாயதுல்லாஹ்வின் த..லீமுல் இஸ்லாம் நான்காம் பாகம் - மௌலவி குர்ரம் அலியின் நஸீஹதுல் முஸ்லிமீன் எனும் கிதாபுகளின் போதனையின்படி உலகிலுள்ள எல்லா முஸ்லிம்களையும் காபிர்களாக, முஷ்ரிக்குகளாக ஆக்கிவிட்டார்கள். இல்யாஸும், இல்யாஸி பார்ட்டிகளும், நத்விகளும் இந்தக் கொள்கைகள் எல்லாவற்றையும் சரி காணுகிறார்கள். அது மாத்திரமல்ல, அதே வஹ்ஹாபிக் கொள்கைகளை செல்லுபடியாக்கவே இந்த இல்யாஸி, நத்வி பார்ட்டிகள் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த தேவுபந்தி, இல்யாஸி, நத்வி ஜனங்கள் யாவரும் கொங்கோஹிஜீயின் பத்வாத் தீர்ப்புப்படி பக்கா வஹ்ஹாபிகளேயாவர். இவர்களோடு ஒருபோதும் அன்பு நேசம் பாராட்டவே கூடாது. இவர்களை விட்டும் முற்றாக விலகி விரண்டு அலாதியாக தூரமாகி விட வேண்டும். இவர்களின் (தப்லீக்குப்) பிரசாரம் வஹ்ஹாபிஸம், நஜ்திஸம், தேவுபந்திஸத்தையே பிரசாரம் செய்வதாகும். நஜ்தி வஹ்ஹாபிகளின் வஹ்ஹாபிஸ விதையை விதைப்பதுவேயாகும்.

மேலும், நீங்கள் கவனித்துப் பார்த்தீர்களேயானால், அந்தரங்கத்தில், தப்லீகுஜமாஅத்தின் ஸ்தாபகர் இல்யாஸ் காந்திலவி, வெள்ளைக்காரர்களுடைய ஏஜண்டும், கிருத்துவர்களின் தரகரும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சம்பளக்காரரும் தாசருமாகவேயிருக்கும். வெள்ளைக்காரர்களின் யோசனையின் பேரிலேயே இந்த இயக்கத்தை நடத்தினார். அதெவ்வாறெனில், டில்லி கட்யா மஹல்லா, ரஹ்மானி பிரஸ்ஸில் அச்சிடப்பட்டதும், தேவுபந்து மத்ரஸாவின் ஸ்தாபகர் காசிம் நானூத்தவியின் பவுத்திரர் தாஹிர் அஹ்மது என்பவரால் தொகுக்கப்பட்டதுமான 'முகாலமதுஸ்ஸத்றேன்' (தலைவர்களின் சம்பாஷணை) எனும் நூல் 8-வது பக்கத்தில் வருகிறது:-



' மௌலானா ஹிபுளுர் ரஹ்மான் ஸாஹிபு (டில்லி ஜமீயத்துல் உலமாயே ஹிந்தின் நாளிம், கூட்டத்தைக் கூட்டுபவர் ஸுயூஹாரி சொன்னார்:- இல்யாஸ் சாகிபு (ரஹ்)வின் தப்லீக்கு இயக்கத்திற்கு ஆரம்ப காலத்தில் ஹாஜீ ரஷீது அஹ்மது சாஹிபு மாறலாக அரசாங்கத்திலிருந்து கொஞ்சம் பணம் கிடைத்துக் கொண்டே இருந்தது. பின்னால் நின்றுவிட்டது.'

இப்பொழுது சொல்லுங்கள். தேவுபந்தியின் எவ்வளவு பெரிய நம்பிக்கைக்குரிய பிரதான அறிவிப்பாளர் (றாவீ) சாட்சியம் கூறுகிறார். இந்தப் பெயரளவில் பெயர் கொண்ட தப்லீக்குப் பார்ட்டி வெள்ளையர்களின் பிரயோசனத்திற்காக, அவர்களின் பணத்தைக் கொண்டே நடத்தப்பட்டது என்று, அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.

முஸ்லிம்களே! இந்தக் கூட்டத்தை விட்டும் விரைவாக விலகி விடுங்கள். இவர்கள் நஜ்திகளுடையவும், வெள்ளையர்களுடையவும் நரிகளாகும். உங்களுடைய இஸ்லாமிய (கிடைக்) கூட்டத்திற்கிடையே இவைகள் புகுந்துள்ளன. இவர்களின் (குபாடமான) இனிய வார்த்தைகளைப் பற்றி (அல்லாஹ்வின் புறத்தால் அறிவித்துக் கொடுக்கப்பட்டதன் மூலம்) உண்டானவை, உண்டாகக் கூடியவை யாவும் அறிந்த ஹளரத் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முற்கூட்டியே அறிவித்துள்ளார்கள்.

السنتهم احلى من السكر وقلوبهم قلوب الذئاب

'அவர்களின் நாவுகள் சர்க்கரையை விட அதிக இனிப்புடையன. ஆனால், அவர்களின் ஹிருதயங்களோ ஓனாய்களின் ஹிருதயங்களாயுள்ளன.'

ஆகவே, ஸுன்னத்து ஜமாஅத்தர்கள் இவர்களை விட்டும் சீக்கிரம் விலகி இருக்க வேண்டியது அத்தியாவசியம். ஹதீது ஷரீபில் வந்துள்ளது.

ان النبي صلى الله عليه وسلم قال فاياكم واياهم لا يضلونكم ولا يفتنونكم (رواه مسلم)

'அவர்களை உங்களிடம் வரவிடாதீர்கள். நீங்களும் அவர்களிடம் போகாதீர்கள். அப்படியானால்தான் உயங்களை அவர்கள் வழி கெடுக்கவும் மாட்டார்கள். பித்னாவில் (குழப்பத்தில்) ஆக்கவும் மாட்டார்கள்.

لا تجالسوهم ولا تشاربوهم ولا تواكلوهم ولا تناكحوهم (رواه العقيلي عن انس رضي الله عنه)

'( கெட்ட கொள்கைக்காரர்களான) அவர்களோடு சேர்ந்து உட்காராதீர்கள். அவர்களுடன் சேர்ந்து குடிக்கவோ, புசிக்கவோ செய்யாதீர்கள். அவர்களோடு (நிகாஹ்) கொள்வினை கொடுப்பினை சம்பந்தமும் வைக்காதீர்கள்.'

இந்த ஹதீதை அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் உகைலி இமாம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்துள்ளார்கள். இபுனு ஹிப்பான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் மேலும் ரிவாயத்துச் செய்துள்ளார்கள்.

ولا تصلوا عليهم ولا تصلوا معهم (ابن حبان)

'அவர்களுக்காக (ஜனாஸா) தொழுகை தொழாதீர்கள். அவர்களோடும் (சேர்ந்து) தொழாதீர்கள்.'

அப்துல்லாஹ் இபுனு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் இமாம் அபூதாவூது ரலியல்லாஹு அன்ஹு பின்வரும் ஹதீதை ரிவாயத்துச் செய்துள்ளார்கள்:

٣- وابوداؤد عن ابن عمر رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم وان مرضوا فلا تعودوهم وان ماتوا فلا تشهدوهم

'அவர்கள் வியாதியுற்றால் அவர்களிடம் சுகஷேமம் விசாரிக்கப் போகாதீர்கள்.

அவர்கள் மரணித்து விட்டால் அவர்களின் ஜனாஸாவுக்கு போகாதீர்கள்.' ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் இமாம் இபுனு மாஜா ரலியல்லாஹு அன்ஹு பின்வரும் ஹதீதை ரிவாயத்துச் செய்துள்ளார்கள்.

وابن ماجه عن جابر رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم وان لقيتموهم فلا تسلموهم

'அவர்களைச் சந்தித்தால் அவர்களுக்கு சலாம் சொல்லாதீர்கள்.'

மேலும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளம் பற்றியுள்ளார்கள்:-

والذي نفسي بيده ليخرجن من امتي من قبورهم في صورة القردة والخنازير بمداهنتهم في المعاصي وكفهم
عن النهي وهم يستطيعون (منتخب كنز العمال شريف جلد اول صفحه ١٤٩ عن سيدنا ابن عمر رضي الله عنهما)

' என் ஆத்மா எவன் கைவசம் இருக்கிறதோ அவன் (இறைவன்) மீது சத்தியமாக (சொல்கிறேன்) என்னுடைய உம்மத்தில் சிலர், தங்களுக்கு சக்தியிருந்துங்கூட, விலக்கப்பட்ட காரியத்தை செய்ய விடாது தடுப்பதிலும், பாப காரியங்களைப் புரிவதிலும் தாட்சணியம் செய்த காரணத்தினால் அவர்கள் தங்களின் கபுறுகளிலிருந்து குரங்குகளின் ரூபத்திலும், பன்றிகளின் ரூபத்திலும் கட்டாயம் வெளிப்படுவார்கள்.'

கெட்ட கொள்கைக்காரர்களை விட்டும், மார்க்கப் புரட்டர்களை விட்டும் தூரமாக இருக்க வேண்டும் என்று போதிக்கும்படியாகவும், படித்துக் கொடுக்கும்படியாகவும் ஷெய்குமார்கள், உலமாக்கள், ஞானாசிரியர்கள், அதிகாரிகள் அனைவர்களுக்கும் மார்க்க கட்டளை இருக்கிறது' என்று ஸெய்யிதுனா இபுனு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் சொல்லப்படுகிறது என்ற விபரம் 'முந்தகபு கன்ஜீல் உம்மால் ஷரீபு, முதற்பாகம், 149-வது பக்கத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்காலத்தில் குறிப்பாக வஹ்ஹாபிகள், தேவுபந்திகள், இல்யாஸிகள், நத்விகள், கபூரிகள் ஆகியோர்களின் கெட்ட கொள்கைகளை விட்டும் அவர்களின் குப்ரிய்யத்தான போக்குகளை விட்டும் தூரமாக இருக்கும்படியாக எச்சரிக்கை செய்ய வேண்டும். ஏனென்றால், இவர்கள் ஈமானைப் பறித்துப் போகும் கள்வர்கள். மார்க்கத் திருடர்கள். ஷைத்தானின் சீடர்கள். அபாயகரமான கொடிய நஞ்சுக் கொப்பானவர்கள். அல்லாஹுத்தஆலா அவர்களுடைய குப்ரிய்யத்தான, ஷிர்க்கான விஷக்காற்றை விட்டும எல்லா ஸுன்னத்து ஜமாத்து முஸ்லிம்களையும் காப்பாற்றி, அச்சமற்றவர்களாயாக்குவானாக. ஆமீன். ஆமீன்.

அல்லாமா இபுனுஹஜர் மக்கீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் 'அஃலாம்'; எனும் நூலில் சொல்கிறார்கள்:

من تلفظ بلفظ الكفر يكفر فكل من استحسنه او رضي به يكفر

' எவனொருவன் குப்ருடைய வார்த்தையை மொழிவானேயானால் அவன் காபிராகி விடுவான். எனவே, அதனை (அவ்வார்த்தையை) கரி கண்டவர்கள் அல்லது அதைக் கொண்டு பொருந்தியவர்கள் அனைவருமே காபிராகி விடுவார்கள்.'

மேலும், அஷ்பாஹ் வன்னளாயிர் ' எனும் கிதாபில் வருகிறது:-

خرج بارادة وجب الكفر فلا ينفعها التأويل اذا

' குப்ரிய்யத்தான வார்த்தை அவனின் நாட்டத்தோடு புறப்படுமானால் கண்டிப்பாக குப்ரு விஷயமாகிவிடும். ஆகவே, அவன் அதற்கு (த:ஃவீல்) வலிந்துரை செய்வது பிரயோசனப்படாது.'

மேலும் அந்தக் கிதாபில் வருகிறது:

ويكفر اذا شك في صدق النبي صلى الله عليه وسلم او سبه او نقصه او حقره ويكفر بنسبة الانبياء الى الفواحش لانه استخفاف

' நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உண்மையாளர் என்பதில் (ஒருவன்) சந்தேகித்தால், அல்லது அவர்களை ஏசினால், அல்லது அவர்களை குறைவுபடுத்தினால் அல்லது அவர்களை அற்பமாகக் கணித்தால் அவன் காபிராகி விடுவான். மேலும், நபிமார்களை பாபகரமான கெட்ட கருமங்களோடு சேர்த்தாலும் காபிராகிவிடுவான். ஏனென்றால், (இது அவர்களை) இலேசாகக் காண்பதாகும்.'

மேலும், அல்லாமா கப்பாஜி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் 'ஷரஹு ஷிபா' எனும் நூலின் நான்காவது பாகத்தில் வருகிறது:-

من دان بغير ملة الاسلام من الملل او وقف فيهم اي توقف وتردد في تكفيرهم او شك في كفرهم او صحح
مذهبهم وان اظهر الاسلام واعتقده فهو كافر باظهاره ما يخالف الاسلام لانه طعن في الدين -

' எவனொருவன் இஸ்லாமல்லாத மார்க்கத்தை தனக்கு மார்க்கமாக்கிக் கொண்டானேயானால் அல்லது இஸ்லாமல்லாத (வேறு) மார்க்கத்தினர்களை காபிர்கள் என்று சொல்வதில் தயக்கங் கொள்வானேயானால், அல்லது அவர்களை காபிர்கள் என்பதில் சந்தேகங் கொள்வானேயானால், அல்லது அவர்களின் மார்க்கத்தை சரிகண்டானேயானால் அவன் இஸ்லாம் மார்க்கத்தை நம்பியிருந்து அதை வெளிக்குக் காட்டியிருந்தாலும் சரியே அவன் இஸ்லாமுக்கு முரணானதை வெளிப்படுத்தியதனால் அவன் காபிராகி விடுவான். ஏனெனில், இது தீனுல் இஸ்லாமில் குத்துப்பாடு சொல்வதாகும்.'


எவ்வாறாகினும், தேவுபந்தி இல்யாஸி பார்ட்டிகளும், இல்யாஸி காந்தீலவியும், தேவுபந்திய்யா ஷைத்தான்களின் திட்டவட்டமான குப்ரிய்யத்துகளை சரி எனக் கண்டு உண்மை கொண்டதனால் (இவர்களும்) காபிர் முர்த்தத்துகளாகும். அல்லாஹ் காக்க வேண்டும்.

ஆரிபுபில்லாஹ், ஹளரத்து மௌலானா ரூமி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொல்கிறார்கள்:-



' கெட்ட நேசனோடு உறவாடுவதை விட்டுவிடு. கெட்ட நேசன் கெட்ட நச்சுப்பாம்பை விடவும் கொடியவன்.'

ஹளரத்து இமாம ரப்பானி, முஜத்திது அல்பதானி, ஷெய்கு அஹ்மது பாரூகி ஸர்ஹந்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், தங்களின் மக்துபாத்து 266-ல், 325-வது பக்கத்தில் சொல்லுகிறார்கள்:-



(ஸுப்ஹானல்லாஹ்! ஸுப்ஹானல்லாஹ்!) என்னவிதமாக ஈமானை வெளிச்சப்படுத்தக் கூடியதும், வஹ்ஹாபிஸத்தையும், நத்விஸத்தையும் கரித்துப் பொசுக்கக் கூடியதுமான போதனை. அதாவது:

' தொடர்ச்சியாக நமது வரையிலும் வந்த மார்க்கத்தில் பிரஸ்தாபமாக அறியப்பட்ட கருமங்கள் எல்லாவற்றையும் மனப்பூர்வமாக நம்புவதற்குப் பெயர்தான் ஈமான். அவைகள் உண்மை என்று நாவால் மொழிவதையும் இமாம்கள் ஈமானின் ஒரு விதியாகவும் ஆக்கி இருக்கிறார்கள். இது நிர்ப்பந்திக்கும்போது விழுந்து விடும். கடமையல்ல. இப்படி உண்மை கொண்டதற்கு அடையாளம் குப்றைவிட்டும் நீங்கியும் காபிராகி போவதன் பேரில் வெறுப்பாகவும் இருக்க வேண்டும். மேலும், காபிரீன்களின் மார்க்கத்தில் அவர்களுக்கு அவசியமும் கடமையுமான பூனூல் போன்றவைகளை விட்டும் நீங்கி இருத்தலுமாகும். அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.

ஒருவன் இப்படி உண்மையாக்குவதுடன் குபிரிய்யத்தான கருமங்களை விட்டும் விலகிக் கொள்ளவில்லையானால், அவன் குபிரியத்தின் கறையைக் கொண்டு அழுக்கானவன் என்பதற்கு இஃதொரு தெளிவான, துலாம்பரமான ஆதாரம். உண்மையில், இவனுடைய ஹுக்மு, முனாபிக்குகளுடைய ஹுக்மாகவேயிருக்கும்.

இவன் முஸ்லிம்களிலும் சேர்ந்தவனல்ல. நல்ல பகிரங்கமான முறையில் காபிரீன்களிலும் சேர்ந்தவனல்ல. ஆகவே, ஈமான் உண்டாவதற்கும், முஸ்லிமாவதற்கும் குபிரிய்யத்தான கருமங்களை விட்டும் நீங்கி தூரப்பட்டிருப்பது அவசியமாகும்.'

தப்லீகி தேவுபந்திகளே! நன்றாக கேளுங்கள். ஹளரத்து முஜத்திது ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தெள;ளத் தெளிய சொல்லி விட்டார்கள்.

மார்க்கத்தில் பிரசித்தமாக அறியப்பட்ட (ளறூரிய்யத்து) கருமங்கள் அத்தனையையும் நம்புவதும் அத்துடன் குபிரிய்யத்தான கருமங்களை விட்டு விலகி தூரப்பட்டிருப்பதும் முஸ்லிம்களுக்கு இன்றியமையாத கடமைகளாகும். ஆகவே தப்லீக்கு காரர்கள், நத்விகள் பேரில் அவசியமான கடமையாவது –அவர்கள் அதிசீக்கிரம்-ஹிபுளுல் ஈமான், பராஹீனே காத்திஆ, தஹ்தீருன்னாஸ், ஜஹ்துல் முகில், தத்கிறதுல் கலீல், எக்றோஜி, முக்த்தஸறு ஸீரத்தன்னபவிய்யா, அஷ்ஷிஹாபுத்தாகிபு முதலிய கிதாபுகளிலுள்ள குப்ரிய்யத்தான வாசகங்களை விட்டும், அவர்களின் ஆசிரியர்களை விட்டும் தாங்கள் நீங்கி விட்டதாக பகிரங்க விளம்பரம் செய்து தவுபாச் செய்து மீள வேண்டும். மேலும் உண்மையாக மார்க்கத்தில் பிரஸ்தாபமாக அறியப்பட்ட கருமங்களை எல்லாம் ஒப்புக் கொண்டதாகவும் வெளிப்படுத்தி அறிவிக்க வேண்டும். இல்லையானால் ஹளரத்து முஜத்திது ரஹிமஹுல்லாஹ் அவர்களுடைய பத்வாவின் பிரகாரம், இக்காலத்திய தப்லீக்குக் கூட்டத்தார்கள் ஒரு போதும் முஸ்லிம்களாக ஆக மாட்டார்கள். என்கிலும், ரித்தத்தின் கறையைக் கொண்டு அழுக்காக்கப்பட்டவர்களாகவே ஆவார்கள்.

மேலும். ஹளரத்து இமாம் றப்பானீ, முஜத்திது அல்பதானீ (குத்திஸஸிர்ருஹு) அவர்கள் தங்களின் மக்த்தூபாத்து 226-வது லிகிதத்தில், 325-வது பக்கத்தில் சொல்லுகிறார்கள்:


محبت خدائے عزوجل ومحبت رسول او علیہ وعلی آلہ الصلوۃ والتحیات بے دشمنی دشمنان او صورت نہ بندد "تولا بے تبرا نیست ممکن" درین جا صادق ست

'அல்லாஹ்தஆலாவுடைய மஹப்பத்தும், அவனது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய மஹப்பத்தும், அவர்களுடைய விரோதிகளைப் பகைத்து அன்னவர்களை விட்டும் நீங்கியிருப்பது கொண்N;டயல்லாது சாத்தியப்படாது.'

' ஒருவரை தனக்கு கரியகர்த்த நேசராக ஆக்கிக் கொள்வதானது, அவருடைய பகைவர்களை வெறுத்து நீங்கி இருப்பதைக் கொண்டல்லாது சாத்தியமாகாது' என்று கவி இங்கு மெய்யாகிறது.

கருத்தாவது: ஒருவரை நேசிப்பதென்பது, அவரின் பகைவனை தனக்கும் பகைவனாக கருதி பகைக்காத தன்மையில் ரூபகரமாகாது என்பதே.


தப்லீகு தேவுபந்திகளே! இல்யாஸிகளே! நத்விகளே! கேளுங்கள்? கேளுங்கள்?

நீங்கள் கலிமா சொல்ல வேண்டும், கலிமாவைப் படித்துக் கொடுக்க வேண்டுமென்றிருந்தால், ஹளரத்து முஜத்திது ரஹிமஹுல்லாஹ் அவர்களின் பத்வாவிற்கிணங்க தேவுபந்தி ஷைத்தான்களான கொங்கோஹி, தானவி, அம்பேட்டி, நானூத்தவி இவர்களை எல்லாம் விட்டொழித்து, முற்றாக வெறுத்து, அவர்களை அதிருப்தியுடன் அகற்றி தவுபாச் செய்யுங்கள். உண்மை மனதோடு கலிமா சொல்லி முஸ்லிம்களாய் ஆகுங்கள். மார்க்கத்தில் பிரசித்தமாக அறியப்பட்ட கருமங்களை உறுதியாக விசுவாசித்து நம்பிக்கை கொள்ளுங்கள். உண்மையை கொள்ளுங்கள். உண்மை கொள்ளுங்கள். இல்லையானால் நீங்கள் அனைவர்களும், நீங்கள் எல்லோர்களுமே அல்லாஹ்வுக்கும், அவனது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் கடுமையான பகையர்களாவீர்கள்.

ஹளரத்து முஜத்திது ஸாஹிபு ரஹிமஹுல்லாஹ் அவர்களின் இவ்வரிய நல்லுபதேசங்களைப் படித்துப் பார்த்து வஹ்ஹாபி தேவுபந்தி, தப்லீகி பார்ட்டிகள் தவுபாச் செய்து அந்த முர்த்ததுகளை விட்டு விலகி இருக்கும்படியாக, அல்லாஹ் அவனது ஹபீபான, முர்ஸலீன்களானவர்களுக்கும் நபிமார்களுக்கும் நாயகமான, எங்கள் நபிநாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொருட்டினால் நல்லுதவி செய்வானாக. ஆமீன். ஆமீன்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதிலும், அவர்களின் கிளைஞர்கள் மீதிலும், அவர்களின் தோழர்கள் மீதிலும் வரிசையான ஸலவாத்தும், நேமமான ஸலாமும் உண்டாவதாக. ஆமீன். ஆமீன். ஆமீன்.

இந்த அற்ப ஏழை(பகீர், ஹகீர்), இந்த பறக்கத்தான பத்வா கிதாபுக்கு, இடுகுறிப் பெயராக, '**அல் அதாபுல் பஃஸ் அலா ரஃஸி இல்யாஸ்**'-'**இல்யாஸ் தலைக்கு கொடிய வேதனை**' என்று பெயர் வைத்தேன். அல்லாஹ் இதை கபூல் செய்து ஏற்று, நேர்வழி பெறக் காரணமாக ஆக்குவானாக. ஆமீன்.



والله تعالیٰ ورسوله اعلم وصلی الله تعالیٰ علیه وعلیٰ آله وصحابه وازواجه وذریاته وعلیٰ امامنا الامام
الاعظم وغوثنا الغوث الاعظم ومرشدنا المجدد الاعظم وجمیع اهل سنته وجماعته وبارك وسلم
فقیر ابو الظفر محب الرضا محمد محبوب علی خان سنی حنفی قادری برکاتی رضوی مجددی
لکهنوی غفر له ولابویه واخویه واهله ومحبیه آمین۔ خطیب جامع مسجد مدنپوره بمبئی نمبر ۸

இப்படிக்கு:

(ஒப்பம்)

**பகீர் அபுள்ளுப்ரு, முஹிப்புர்ரிளா, முஹம்மதுமஹ்பூபு அலிகான், ஸுன்னி, ஹனபீ, காதிரீ, பரகாத்தீ, ரிளவீ, முஜத்திதிய்யி, லக்னவிய்யி**

அன்னாருக்கும் அவரது தாய் தந்தையருக்கும், சகோதரர்களுக்கும், குடும்பத்தவர்களுக்கும், நேசர்களுக்கும் (அல்லாஹ்) பிழை பொறுத்தருள்வானாக. ஆமீன்.

ஜமாத்துல் அவ்வல், 1372.

கத்தீபு, ஜாமிஉ மஸ்ஜிது,

மதன்பூர் பாம்பை-8.

**மேற்படி பத்வாவை சரிகண்டு நற்சான்றுகளுடன் கையொப்பமிட்ட மற்றும் பல உலமாக்களின் பெயர்கள்:-**

1. 'இவ்விடை கூறியவர் நேர்மையாகவே கூறியுள்ளார்.' (அல் அப்துல் முத்னிபு) முஹம்மது யூனுஸ் (உபிய அன்ஹு) முதிப்பு கௌதிய்யா, ரிப்பன்ரோடு, பாம்பை-8.

2. 'நிச்சயமாக இது (சத்தியத்தையும், அசத்தியத்தையும்) நன்கு தெளிவுபடுத்தும் தீர்ப்பான சொல், இது இளக்காரமான கேலிப் பேச்சன்று'-ஹாஜீ அபூபக்கர் இபுனு ஹாஜீ அஹ்மது ரேஷம் வாலா, காதிரீ, பரக்காத்தீ, ரிளவீ (குபிறலஹு), நாழிம் அஉலா, ஜமாஅத்து ரிளாயே முஸ்த்தபா பம்பாய் மாகாணம்.

3. 'இவ்விடை சரியே. விடையளித்தவர் நயவிருத்தியுடையவர் அல்லாஹ் (ஜல்லஜலாலுஹு)வும், அவனது ரஸூல் (அவர்கள் மீதும் அவர்களின் கிளையார்கள)தோழர்கள் மீதும் அல்லாஹுத்தஆலா ஸலவாத்தும் ஸலாமும் சொல்லியருள்வானாக) அவர்களும் மிகவும் அறிந்தவர்கள்'-பகீர் அபுல் பத்ஹு உபைதுர் ரிளா முஹம்மது ஹஷமத் அலிகான். காதிரீ, பரகாத்தீ, ரிளவீ, முஜத்திதிய்யி, லக்னவிய்யி (குபிறலஹு).

4. 'விடை சரியாகவும், நேர்மையாகவும் உள்ளது. விடையளித்தவர் நேர்மையாளர். (அதற்குரிய) நற்கூலி அவருக்கு உண்டு. அல்லாஹ் மிக அறிந்தவன்.'-பகீர் அபுத்தாஹிர், முஹம்மது தையிபு, காதிரீ, பரகாத்தீ, ரிளவீ (குலிறலஹு) முப்தி, அன்ஜுமன் தப்லீகு ஸதாகத், ரஹ்மத் மன்ஸில், பம்பாய்.

5. 'விடை சரியாகவும், நேர்மையாகவும் உள்ளது. அல்லாஹுதஆலாவும், அவனது மகா மேன்மையான ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், சத்தியத்தையும் உண்மையையும்,நேர்மையையும் மிக அறிந்தவர்கள்.'- பகீர் அபுல் விஜாஹத்து, உபைதுளியா முஹம்மது, வஜீஹுத்தின் காதிரீ, ரிளவீ, ளியாஈ, அமானீ, காஜிப்பூரி (குபிறலஹு), காதிம் ஆஸ்தானாளியா இய்யா, பேலிபேத்து.

6. 'விடை சரியாகவும், நேர்மையாகவும் உள்ளது. சங்கை மிகுந்த விடையளித்தவருக்கு (அதற்குரிய) நற்கூலியுண்டு.'-பகீர் அபுல் ஹஸனைன் ஆலு முஸ்த்தபா, ஸெய்யது மியானுல் காதிரீ, பரகாத்தீ, காஸிமீ, மாரஹர்பீ, காதிம் ஸஜ்ஜாததுல் காதிரிய்யதுல் பரகாதிய்யதுல் மாரஹரவலிய்யா-கத்தீபு, மஸ்ஜிது கடக், பம்பாய்.

7. 'விடை சரியே'-காழி இஹ்ஸானுல் ஹக்கு நயீமீ (குபிறலஹு) முப்தி,பெஹராச்சி ஷரீபு.

8. 'விடை சரியே'-அல்லாஹ்வும், அவனுடைய ரஸூலுமே சத்தியத்தையும், நேர்மையையும் கொண்டு மிக அறிந்தவர்கள்.'-முஹம்மது ஸலீம் காதிரீ, ஹாமிதீ ரிளவீ (குபிறலஹு) கத்தீபு, மஸ்ஜிது, டோபீதாலாபு, பம்பாய்-2.

9. 'விடை சரி என்பதில் சந்தேகம் கிடையாது'-முகம்மது அப்துல் காலிகு உபிய அன்ஹு பேஷ் இமாம், ஜோனீ மஸ்ஜிது, மதன்பூர், பம்பாய்-8.

10. 'விடை சரியாகவும், நேர்மையாகவும் உள்ளது. விடையளித்த கண்ணியமும், சங்கையும் நிறைந்த உத்தமருக்கு நற்கூலி இறைபுறத்தால் உண்டு. அவருக்கு சிறந்த நற்கூலியை

ஈருலகிலும் அல்லாஹ் தந்தருள்வானாக.'-ஸெய்யிது முர்த்தளா ஹுஸைனி (உபிய அன்ஹு), ஆஜிஸ், ஸாபிகு முஹ்தமிம், மத்ரஸா நிளாமிய்யா டெக்கான், தாருல் இப்தாஉ, மஜ்லிஸு இஷா அத்துல் உலூம், ஹைதராபாத், டெக்கான், ஹால்கத்தீபு, மஸ்ஜிது கத்தர்யான், ஜாமிலி மஹல்லா, பம்பாய்-3.

11. 'விடை சரியே'-ஸெய்யிது அபுல் ஹாஷிம் (உபிய அன்ஹு) இமாம், மஸ்ஜிது பூல்கல்லீ, பம்பாய்-3.

12. 'விடை சரியே'-முஹம்மது இஸ்ஹாக்கு, காதிரீ, பேஷ்இமாம் ஹளரத் ஷாஹ் பஹாஉத்தீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் தர்கா மஸ்ஜிது, பம்பாய்- 1.

13. 'விடை சரியே'-முஹம்மது இல்யாஸ் நூரி (உபிய அன்ஹு) முதர்ரிஸ், மத்ரஸா தஸ்த்தகீரிய்யா, தூது பஜார், பம்பாய்-3.

14. 'விடை சரியே'-முஷ்தாக்கு அஹ்மது நிளாமீ, அலஹாபாதீ (பாஸ்பான்) பத்திரிகை ஆசிரியர்,பம்பாய்.

15. 'விடை சரியே'-ஸயீது அஹ்மது ஸம்பேலீ (உபிய அன்ஹு) (வாரிதுஹால்- பம்பாய்)

16. 'விடை சரியே'- விடையளித்தவர் நேர்மையுடடன் காரியமாற்றியுள்ளார்'- பகீர் முஹம்மது ஹனீபு, காதிரீ, ரிளவீ, முஜத்திதிய்யா (கானல்லாஹு லெஹு) கான்பூர் ஷமன்கஞ்சு.

17. 'விடை சரியே'-அக்தர் ஹஸனீ, பளயவூர், பரேலி ஷரீபு.

18. 'விடைகள் சமுசயத்திற்கோ, சந்தேகத்திற்கோ இடமின்றி மிகச் சரியாக உள்ளன. விடையளித்தவர் நேர்மையாளர் (அதற்குரிய) நற்கூலி அவருக்கு உண்டு'-பகீர் கலீல் அஹ்மதுகான் (உபிய அன்ஹு) காதிரீ, கான்பூரீ, கான்பூர் ஜில்லா, புலந்து ஷஹ்ரு, ஹால் வாரிது காழீ மஹல்லா ஷாபீ மஸ்ஜிது, பம்பாய்-3.

19. 'விடை சரியே'-காதிமுல் உலமா ஹாஜீ அலிமுஹம்மது, ஸுன்னீ, ஹனபீ காதிரீ, ரிளவீ, தோராஜவீ, கத்தீபு, ஜாமிஉ மஸ்ஜிது, றாஜ் பலேப்லா, குஜராத்.

20. 'சந்தேகமேதுமின்றி விடை மிகச் சரி'- முகம்மது யூனுஸ், மாலே கானவீ, கத்தீபு, மஸ்ஜிது கோலோனா ஜில்லா பறோச்சு.

21. 'பேரறிஞரான (இந்த பத்வாவின்) கோர்வையாசிரியர் சொன்னவை யாவும் மாந்தர்களுக்கு அத்தியாவசியமானவைகளே. எனவே அவருக்கு அல்லாஹ் அவனது ஹபீபாகிய நாயகம் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களின் பொருட்டைக் கொண்டு, பரிபூரணமாக நற்கூலியை கொடுத்தருள்வானாக'- பகீர், பளுலுர் ரஸூல், குலாம் ஆஸீ, காதரீ, பரகாத்தீ, ரிளவீ (உபிய அன்ஹு)-நாக்பூர்.

22. விடையளித்தவர் நேர்மையாக விடையளித்துள்ளார்.'-அப்துற்றப்பு (உபிய அன்ஹு) முதரிஸு, மத்ரஸா ஜாமிஆ10 ஹபீபிய்யா, மஸ்ஜிது அஃளம் தர்யாபாத், அலஹாபாத்-7

23. 'விடை சரியே. அல்லாஹ்வும் அவனது ரஸூலும்தான் சத்தியத்தையும் நேர்மையைக் கொண்டும் மிக அறிந்தவர்கள்'-பக்கீர், ஸெய்யிது முஹம்மது இஹ்ஸான் அலி, ஹக்கானீ, பாந்தவீ (உபிய அன்ஹு) முபல்லிகு ஜாமிஆ ஹபீபிய்யா, அலஹாபாத்-7.

24. '(பத்வாவில் உள்ள விஷயம்) அது அப்படியே (சரிதான்) நானும் அதை ஆமோதிக்கிறேன்'-முஹம்மது நிஃமத்துல்லாஹ் காதிரீ, ஹாமிதீ (குபிறலஹு) முதர்ரிஸ் தாருல் உலூம் ஜாமிஆ ஹபீபிய்யா, அலஹாபாத்.

25. 'இவ்விடை மெத்தவும் அருமையான விடை'- ஆலெஹஸன் அஷ்றபீ நாமீ(உபிய அன்ஹு)

26. 'விடை சரியே'-அடியார்களிலெல்லாம் அற்பனாகிய ஸெய்யிது முஹம்மது களன்பரு ஹுஸைன், காதிரீ, பளுலு றஹ்மானீ, லக்னவீ(குபிறலஹு)

27. 'விடை சரியே'-ஸெயிது முஹம்மது அஸீஸ் ஹுஸைன் ஜிஷ்த்தி, நிளாமீ, லக்னவீ (குபிறலஹு)

28. 'மிகச் சரியான விடை'-பகீர் முஹம்மது இல்யாஸ் , முளப்பர்பூரி, (குபிறலஹு)

29. 'விடை சரியே'-(அடியார்களிலெல்லாம் அற்பனாகிய) ஸெய்யிது முஹம்மது நதீரு ஹுஸைன் காதிரீ, பளுலுற் றஹ்மானீ திஹ்லவீ பின்னால் லக்னவீ (உபிய அன்ஹு)

30. இந்நேர்மையான விடையளித்த இவ்வுத்தமருக்கு அல்லாஹுத்தஆலா நற்கூலியருள்வானாக. இவர் விடையளித்து பெரும் தொண்டு செய்து மாபெரும் பயனை உண்டாக்கி விட்டார்'.-பகீர், அபுல் ஹாமிது ஸெய்யிது முஹம்மது (குபிறலஹு) அஷ்றபீ, ஜீலானீ, முஹத்திதுஅஉளம், ஹிந்த் வஸதுரு மர்க்கஸீ ஜமாஅத்து ரிளா, முஸ்த்தபா பறேலி ஷரீபு.

31. 'விடையளித்தவர் நிச்சயமாக நேர்மையாக விடையளித்துள்ளார்'-பதீர் ரப்பானீ, அப்துல் மஸ்ஜுது வுஜூது, ஜப்பல்பூரி (குபிறலஹு)-(ஆமீர் ஷுஃபா தப்லீகு ஜாமிஆ அறபிய்யா இஸ்லாமிய்யா, நாக்பூர்)

32. 'விடை சரியே'-பகீர், முஹம்மது அஹ்ஸன் றப்பானீ (குபிறலஹு) இப்பல் பூரி.

33. 'மிகச் சிறந்த விடை'-அல்லாஹ்வும் அவனது ரஸூலும் மிக அறிந்தவர்கள்'- பகீர் முஹம்மது மஹ்பூபு அஷ்றபீ (குபிறலஹு) முதர்ரிஸ், மத்ரஸா அஹ்ஸனுல் மதாரிஸ்,புதிய கான்பூர்)

34. 'விடை சரியே'-பகீர், காஜீ றப்பானீ காதிரீ, ஜப்பல்பூரி (குபிறலஹு)

35. 'விடை சரியே'- முஹம்மத ஹாத்தம் அஷ்றபீ (குபிறலஹு) முதர்ரிஸ் மத்ரஸா அஹ்ஸனுல் மதாரிஸ் புதிய கான்பூர்.

36. '(பத்வாவில் கண்டுள்ள) விஷயம் அப்படியேதான். நானும் அதை மனப்பூர்வமாக ஆதரித்து ஏற்கிறேன்.'-பகீர் ஹமீதுர் ரஹ்மான் காதிரீ, ரிளவீ, ஹாமிதீ, பரேலவி, கத்தீபு ஜாமிஉ மஸ்ஜிது, பரேலிஷரீபு.

37. 'பத்வா கொடுத்தவரும் மிகச் சிறந்த மனிதர். பத்வா விடையும் மிகச் சிறந்த விடை.'-முஹம்மது ஸலீம்(உபிய அன்ஹு) இமாம் ஷாஹீ ஜாமிஉ மஸ்ஜிது, பனாரஸ்.

38. 'இவ்விடை, இதுதான் சரியான சிறந்த விடை'.- குலாப்ஷா, இமாம் மஸ்ஜிது ஹுபல் பாவடி நாஸிக்.

39. 'இவ்விடை நிச்சயமாக சரியாக இருக்கிறது.'-நிஸார் அஹ்மது அஉளமீ (குபிறலஹு) ஹால் வாரிது, பம்பாய்.

40. 'விடை சரியே'-முஹம்மது அப்துல் ஹமீது காதிரீ, லக்னவீ(உபிய அன்ஹு)

41. 'இவ்விடையளித்தவர் நிச்சயமாக நேர்மையான விடையையே அளித்துள்ளார். அவரது இவ்விடை ஹிருதயத்திற்கும், ஆத்மாவிற்கும் சொஸ்தமுண்டாக்கும் வைத்தியராக உள்ளது. ஆகவே, (இந்த பத்வாவை எழுதிய அவருக்கு அல்லாஹுதஆலா சிறந்த நற்கூலியளிப்பானாக)-பகீர், குலாம் முஸ்த்தபா வாரிதீ, (குபிறலஹு மஹல்லா, பட்காபூர், கான்பூர்.

42. 'இவ்விடை சரியே. அல்லாஹ் நேர்மையைக் கொண்டு மிக அறிந்தவன்.'-பகீர், அப்துல் ஹாதீ வாரிதீ, அல்ஹைதரீ.

43. 'விடை சரியே'-பகீர், ரிபாகத் ஹுஸைன்(குபிறலஹு)

44. 'இதுதான், இதுவேதான் சத்தியமாகும். சத்தியத்தையே கடைபிடித்தொழுகி நடத்தல் கடமை'-பகீர், முஹம்மது மஹ்பூபு அஷ்றபீ (குபிறலஹு) முதர்ரிஸ், மத்ரஸா அஹ்ஸனுல் மதாரிஸ், கான்பூர்.

45. 'மேன்மையும் தூய்மையும் மிக்க அல்லாஹ்வின் திருப்பெயரைக் கொண்டு ஆரம்பம் செய்கிறேன். அறிவாளர்களாம், உலமாக்களை நபிமார்களின் அனந்தரக்காரர்களாய் ஆக்கி வைத்த வல்லவனை வாழ்த்துகிறேன். கூலிகள் கொடுக்கப்படும் தீர்ப்பு நாளன்று மன்பதைகளுக்காக மன்றாடி ஷபாஅத்தச் செய்து கரை சேர்க்கும் மகாப் பெருஞ் சங்கையாளரும், எங்கள் நாயகரும், எங்கள் பிரபுவுமான (ஹளரத் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், தனிப்பெரும் மாண்புடையவர்களும், இறை பக்தி நிறைந்தவர்களுமான அவர்களது கிளைஞர்கள் மீதும், பரிபூரணமுடையவர்களும், அறிவுப் பெருந்தகைகளுமான அவர்களது தோழர்கள் மீதும், தனிப்பெரும் சிறப்புடையவர்களும், தூய்மை பெற்றவர்களுமான அவர்களது பிரதிநிதி (கலீபாக்)களின் மீதும், அவர்களது

சமூகத்தவர்கள் அனைவர் மீதும் இறுதித் தீர்ப்பு நாள் பரியந்தம் அல்லாஹ்வின் ஸலவாத்து (அனுக்கிரகம்) நிவவுக என்று ஸலவாத்து சொல்கிறேன். பின்னர் உண்மையை உணர ஆசித்துத் தேடும் விவேகமுடைய அருமை நண்பரே! பரிசுத்தமுடைய அருமை மு:ஃமின் சோதரரே!

இக்காலத்தில் சரியானபடி இஸ்லாமியக் கொள்கை (ஸிஹ்ஹத்தான அகீதாக்)களை பிசகின்றி பேணி றொம்பவும் கவனமாகத் தெரிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்ற விபரம் உமக்குத் தெரியாதிருக்க முடியாது. உத்தம அன்பரே! பொய்யர்களான ஒரு சில கூட்டங்கள் முற்காலங்களில் தோன்றி மறைந்தன. அவற்றில் ஒருசில, மோசக்காரர்களான வஹ்ஹாபிய்யாக்களைப் போன்று சமுதாயத்தைக் கெடுத்து வரக்கூடிய மவ்தூதிய்யாக் கூட்டத்தார்களும் தெளிவான துலாம்பரமான (ஸுன்னத்து ஜமாஅத்தின்) அத்தாட்சிகளை எல்லாம் மறுத்து பொய்யாக்கி வைத்து வரும் இல்யாஸிய்யாக்களான தப்லீக்குப் கூட்டத்தார்களும் தற்காலத்தில் தலை தூக்கியுள்ளன. எதிர்காலத்திலும் நிலைப்பதற்காக அவர்கள் காரியங்கள் புரிகிறார்கள் (அவர்களின் திட்டங்களை எல்லாம் தவிடுபொடியாக்குவதற்கு) வலுப்பமிக்க அல்லாஹ்வின் துணை கொண்டு, இன்ஷாஅல்லாஹ் இப்பெரும் காரியத்தை சாதிக்க இந்த கிரந்தம் ஒன்றே போதும்.

இக் கிரந்த கர்த்தா, நற்குண சீலரான அறிஞரும், அன்புயைட சங்கையாளரும், ஸுன்னத்து ஜமாஅத்தின் வீரச் சிங்கமும், சத்தியத்தினுடையவும், அகமியத்தினுடையவும் (ஹக்குடையவும், ஹகீகத்துடையவும்) வெற்றிக் கொடியை உயர்த்தி ஏற்றுபவரும், பொல்லாங்கையும், குழப்படியையும் அடியோடு அகற்றுபவருமான அல் ஆலீம், மௌலானா அல்ஹாபிளு, அல்முப்தி முஹம்மது மஹ்பூபு அலிகான், அல்காதிரீ, அல்பரகாத்தி, அர்ரிளவி அவர்கள், இந்நூலில் எடுத்து அருளியிருக்கும் விஷயங்கள் அனைத்தும் உண்மையானவை, எவ்வித தடையும், சந்தேகமுமின்றி அனையனைத்தும் முற்றிலும் சரியானவை. இத்தகைய சத்தியத் தன்மையிலுள்ள இந்நூலை, மாபெரும் பயன் அளிக்கக் கூடிய இந்த அறிவு விருந்து நூலை மறுத்து இதற்கு மாறுபாடு செய்பவர்கள் பிடிவாதக்கார வீண் விதண்டாவாதிகளும், அறிவு கெட்ட ஜாஹில்((முட்டாள்)களுமாகவே இருப்பார்கள். அவர்கள் வேதனைக்கும், தண்டனைக்கும் பாத்தியமுடையவர்கள்.

அல்லாஹு (அஸ்ஸவஜல்ல)வும், நமது தலைவரும், பிரபுவும், ஷபாஅத்துச் செய்பவருமான, அவனுடைய தெரிவுதல் செய்யப்பட்ட மகத்துவமிக்க ரஸூல் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அலைஹிவஅலா ஆலிஹி வஅஸ்ஹாபிஹி வபாரக வஸல்லம்) அவர்களும் ஹக்கைக் கொண்டும், கிதாபைக்கொண்டும் மிகவும் அறிந்தவர்கள்.'

மேற்கண்ட விஷயங்களை வாயால் மொழிந்து, கைப்பட எழுதி யான் ஒப்பமிட்டேன்.

(இப்படிக்கு)

**அல்பகீருல் காதிரிய்யி, முஹம்மது ரஜபு அலி ரிளவீ, அஸீஸீ நாம்பாரவீ.**

பரேலியில் இருக்கக்கூடிய ரிளாஈ முஸ்தபா என்று பெயர் சொல்லப்பட்ட, ஆசீர்வதிக்கப்பட்ட நற்கூட்ட ஜமாஅத்தின் (காதிம்) தொண்டன். பரேலீ.

ஹிஜ்ரி 1372. துல்ஹஜ்ஜு 29.

*முற்றும்.*

www.sufimanzil.org